
Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36 | கதிர் : 348 | ஞாயிற்றுக்கிழமை | ஐப்பசி 28 ஆம் நாள் 14 நவம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16+16 | விலை : ரூ.40 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111



## மாவீரர் நாளன்று மாலை 6.05க்கு மணியொலி எழுப்பி வரலாற்றைக் கடத்த ஆயர் மன்றம் உதவவேண்டும்!!!

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பகிரங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவம்பர் 14

தமிழினத் தாயக விடுதலைக்காக வித்தாகிப்போன மாவீரர்களின் வாரத்தை, நவம்பர் 21 முதல் 27ஆம் திகதி வரை நினைவிருத்தும் வகையிலும், வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகமெங்கும் நவம்பர் 27ஆம் திகதி மாலை 6.05 மணிக்கு அனைத்து ஆலயங்களிலும் மணியொலி எழுப்பி, வரலாற்றைக் கடத்துவதற்கும், வடக்கு- கிழக்கு ஆயர் மன்றம் ஒத்துழைக்கவேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது. 15

## அரச ஊழியர்கள் பெரும் சுமை

*நிதி அமைச்சர் பஸில்*

கொழும்பு, நவ. 14

அரச ஊழியர்களுக்கு இனியும் நிதி ஒதுக்கக்கூடிய வாய்ப்பு 15

## மதுபானங்களின் அதிகரிக்கப்பட்ட விலைப்பட்டியல்

கொழும்பு, நவ. 14

2022ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டதற்கு அமைவாக மது 15

## மூச்சுத்திணறலால் உயிரிழந்தவருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், நவ. 14

மூச்சுத் திணறல் ஏற்பட்டு உயிரிழந்த குடும்பத் தலைவருக்கு கொரோனாத்தொற்று உறுதிப்படுத் 14

## மாவீரர் நாளின் மகிமையை மதிப்பிறக்கம் செய்யவில்லை

*கத்தோலிக்கர்களுக்கு மாத்திரமே 20ஆம் திகதி அழைப்பு விடுத்தோம் என்கிறார் ஆயர் இமானுவேல்*

யாழ்ப்பாணம், நவ. 14

எதிர்வரும் 21ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரையான நாள் தேசியத் தலைவரால் முடிவு செய்யப்பட்டு, அறிவிக்கப்பட்ட தினம். அதை நாம் ஏன் மாற்ற வேண்டும்? அதற்குப் 14

## அரசின் பேச்சுக்கான அழைப்பை ஏற்கிறோம்

### தமிழ்க் கூட்டமைப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 14

ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேச்சு நடத்துங்கள். அதன்மூலம் வடக்கு மக்களுக்கு சேவையாற்றுங்கள். நீங்கள் மொட்டுக் கட்சியில் இணையவேண்டியதில்லை. ஆனால் அரசின் ஒத்துழைப்புடன் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கலாம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு அழைப்பு விடுத்துள்ளார் ஆளுங்கட்சி 15

சாவ. நகரசபை

## முன்னாள் தவிசாளர் கொரோனாவால் சாவு!

யாழ்ப்பாணம், நவ. 14

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் முன்னாள் தவிசாளர் இறப்பிறப்பியேல் 15

பாடசாலையில் சச்சரவு

## வீதியில் மாணவர் மீது குழுவொன்று தாக்குதல்!

மன்னார், நவ. 14

மடு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற 15



## கோந்தைப்பிட்டி கடற்கரையில் இளம்பெண்ணின் சடலம் மீட்பு

மன்னார், நவ. 14

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோந்தைப்பிட்டி கடற்கரையில் நேற் 15

## நிதி தேவையில்லை நீதியை நிலைநாட்டுக

*காணாமல் ஆக்கப்பட்டோரை தேடும் உறவுகள் தெரிவிப்பு*

வவுனியா, நவ. 14

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் விடயத்தில் நீதி நிலைநாட்டப்பட வேண்டுமே தவிர நிதி தேவையில்லை என்று வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர் 15



## யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நியமனம்

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய பிரசாத் பெர்னாண்டோ 15

Fun BLASTER இடமிருந்து

மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்

Facebook WhatsApp மற்றும் YouTube

உடன் மேலதிக டேட்டா*



ரூ.347/- மட்டுமே

மேலதிக வரிகள் இல்லை

செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்

*1GB Anytime Data மற்றும் 1GB Free Night Bonus உள்ளடக்கப்பட்டுள்ளது.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது · SD (360p) Video தரத்தினை வழங்குகின்றது · 4G SIM அட்டை மற்றும் 4G தொலைபேசி அவசியமாகும்

Dialog

எதிர்காலம் இன்றே.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# டொலர் பிரச்சினைக்கு பாதீட்டில் தீர்வில்லை!

**கொழும்பு, நவ.14**

**நாடு தற்போது எதிர்நோக்கும் டொலர் பிரச்சினைக்கு இந்தமுறை வரவு - செலவுத் திட்டத்தில் தெளிவான வேலைத்திட்டங்களுடன் கூடிய தீர்வு இல்லை என்று பொருளாதார வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.**

ஒவ்வொரு துறைகளுக்கும் சலுகைகளை வழங்குவதற்குப் பதிலாக நிரந்தர வேலைத்திட்டத்தின் அவசியம் தற்போது நாட்டில் உள்ளது என்று தெரிவித்துள்ள அவர்கள், ஏற்றுமதித் துறையின் முன்னேற்றத்துக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வரவு - செலவுத் திட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேவேளை, சிலதுறைகளுக்கு ஊக்குவிப்பை வழங்குவதன்மூலம் ஏற்றுமதிப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது என்று கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பொருளாதார கற்கைப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் பிரியங்க துனுசிங்க தெரிவித்துள்ளார். (எ-இ)

# அரசின் வரவு - செலவுத் திட்டம் கடன் சுமையை அதிகரிக்கும்

## ரவூப் ஹக்கீம் கருத்து

கொழும்பு, நவ.14

கடன் சுமையுடன் இருக்கும் வாடிக்கையாளர்களை மேலும் கடன் சுமைக்குள் தள்ளும் வகையிலேயே வரவு - செலவுத்திட்ட யோசனைகள் அமைந்திருக்கின்றன. மக்கள் எதிர்பார்த்த எதுவும் இல்லை. எதிர்பார்க்கும் வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை அரசுக்கு இல்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில், அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வரவு - செலவுத் திட்டத்தில் எதிர்பார்த்த எதுவும் இல்லை. பெரிய கம்பனிகள் மற்றும் வங்கிகளிடம் வரியை அதிகரித்திருக்கின்றது. வங்கிகள் அதை வாடிக்கையாளர்களிடம் அறவிடுவது நிச்சயமாகும். கடன் சுமையுடன் இருக்கும் வாடிக்கையாளர்கள் மேலும் கடன் சுமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அரசின் வருமானத்தை அதிகரிப்பதற்கு எடுத்திருக்கும் நடைமுறைகளில் தெளிவில்லாத தன்மை காணப்படுகின்றது. அதை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்போகின்றது என்பதைப் பார்த்துவிட்டுதான் இது தொடர்பில் மேலதிக விடயங்கள் தெரியவரும்.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச வரவு - செலவுத்திட்டத்தில் முன்மொழிந்திருக்கும் விடயத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் என்னதான் உத்தரவாதங்களைத் தந்தபோதும் அவற்றை நாங்கள் நம்பப்போவதில்லை. கிராமங்கள் பிரதேசங்களின் அபிருத்திக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளபோதும் அதற்கான பணத்தை எவ்வாறு அரச வருமானமாக ஈட்டிக்கொள்ளப்போகின்றது என்பது தொடர்பில் பலத்த சந்தேகம் இருக்கின்றது.

நெருக்கடியான காலகட்டத்தில் இவ்வாறான வரவு - செலவுத் திட்டம் மூலம் தெளிவின்மை காணப்படுகின்றது. ஒவ்வொரு காலாண்டிலும் செலவு செய்யக்கூடிய நிதியைத் திரட்டிய பின்னரே செலவினங்களைச் செய்ய முடியும் என்ற புதிய ஏற்பாட்டை செய்திருக்கின்றது. எந்த ஆதாயத்தையும் சரிவரப் பெறமுடியும் என்ற நம்பிக்கை அரசுக்கு இல்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது- என்றார். (எ-இ)

| வரவு-செலவுத்திட்ட தொகுப்பு (2021 – 2022) | | |
|---|---|---|
| வகை | 2021 திருத்தப்பட்ட மதிப்பீடு | ரூ.பில்லியன் 2022 வ.செ.திட்டம் |
| மொத்த வருவாயும் மானியங்களும் | 1,561 | 2,284 |
| மொத்த வருவாய் | 1,556 | 2,274 |
| வரி வருவாய் | 1,325 | 1,987 |
| வருமான வரி | 295 | 496 |
| பண்டங்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகள் | 650 | 1,031 |
| வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரிகள் | 380 | 460 |
| வரியில்லா வருவாய் | 170 | 226 |
| மாகாண சபைகள் வரிப்பகிர்வு மற்றும் வழங்குதல் | 61 | 61 |
| மானியங்கள் | 5 | 10 |
| மொத்த செலவினம் | 3,387 | 3,912 |
| மீண்டெழும் | 2,817 | 2,996 |
| மாகாண சபைகள் உள்ளடங்கலாக சம்பளங்களும் வேதனாதிகளும் | 887 | 1,015 |
| மாகாணசபை உள்ளடங்கலாக ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் | 198 | 203 |
| வட்டி | 1,055 | 1,115 |
| உதவுத்தொகைகள் மற்றும் மாற்றல்கள் | 677 | 663 |
| அரசாங்க முதலீடு | 582 | 931 |
| ஏனையவை | (12) | (15) |
| வருமான மிகை (+)/ பற்றாக்குறை (-) | (1,261) | (722) |
| முதனிலை (மிகை (+) /பற்றாக்குறை (-) | (771) | (513) |
| வரவு செலவுத்திட்ட மிகை (+) /பற்றாக்குறை (-) | (1,826) | (1,628) |
| மொத்த நிதியிடல் | 1,826 | 1,628 |
| மொத்த வெளிநாட்டு நிதியிடல் | (48) | (179) |
| வெளிநாட்டு கடன்பெறுதல்கள் /மொத்தம் | 489 | 508 |
| கருத்திட்ட மற்றும் நிகழ்ச்சித்திட்ட கடன்கள் | 332 | 358 |
| வெளிநாட்டு வர்த்தகம் | 157 | 150 |
| படுகடன் மீள்கொடுப்பனவு | (536) | (687) |
| மொத்த உள்நாட்டு நிதியிடல் | 1,874 | 1,807 |
| வங்கியல்லா கடன்பெறுதல்கள் | 1,569 | 1,397 |
| இலங்கை அபிவிருத்தி முறி | (64) | (91) |
| வங்கிக் கடன்பெறுதல்கள் மற்றும் ஏனையவை | 368 | 501 |
| வருவாய் மற்றும் மானியங்கள் / மொ.உ.உ (%) | 9.5 | 12.3 |
| மொத்த வருவாய் /மொ.உ.உ (%) | 9.4 | 12.3 |
| வரி வருமானம் /மொ.உ.உ | 8.0 | 10.7 |
| வரியல்லா வருமானம் மொ.உ.உ (%) | 1.0 | 1.2 |
| மாகாண சபை வரி பகிர்வு மற்றும் செலுத்தல் வருமானம் மொ.உ.உ (%) | 0.4 | 0.3 |
| மானியங்கள் /மொ.உ.உ (%) | 0.03 | 0.05 |
| மொத்த செலவினம் / மொ.உ.உ (%) | 20.6 | 21.1 |
| மீண்டெழும் செலவினம் /மொ.உ.உ (%) | 17.1 | 16.2 |
| மாகாண சபைகள் உள்ளடங்கலாக வட்டியில்லாதவை (மொ.உ.உ (%) | 10.7 | 10.2 |
| வட்டி /மொ.உ.உ (%) | 6.4 | 6.0 |
| அரசாங்க முதலீடு/ மொ.உ.உ (%) | 3.5 | 5.0 |
| வருமான மிகை (+) /பற்றாக்குறை (-) மொ.உ.உ (%) | (7.7) | (3.9) |
| முதல்நிலை மிகை (+) /பற்றாக்குறை (-) மொ.உ.உ (%) | (4.7) | (2.8) |
| வரவு செலவுத்திட்டமிகை (+)/ பற்றாக்குறை (-) மொ.உ.உ (%) | (11.1) | (8.8) |

தகவல் மூலம்- அரசிறை கொள்கைத் திணைக்களம்

# சீன நிறுவன இழப்பீட்டுக் கோரிக்கை ஆராயும் சட்டமா அதிபர் திணைக்களம்

கொழும்பு, நவ.14

சேதனப் பசளையை ஒப்பந்தம் தொடர்பாக, 8 மில்லியன் அமெரிக்க டொலர் இழப்பீடு கோரி, சீன நிறுவனம், தேசிய தாவரங்கள் தொற்று நீக்கி தனிமைப்படுத்தும் சேவை நிலையத்துக்கு அனுப்பியுள்ள கடிதம் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் கவனம் செலுத்தியுள்ளது.

தொற்றுநீக்கி தனிமைப்படுத்தும் சேவை நிலையத்தின் அலட்சிய நடவடிக்கையால், தமது நிறுவனத்தின் நற்பெயருக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்காக இந்தத் தொகையை, குறித்த நிறுவனம் கோருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை அனுப்பப்பட்டுள்ள இந்தக் கடிதம், சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பட்டுள்ளது. (எ)

# பஸில் சமர்ப்பித்தது சம்பிரதாய பட்ஜெட்

2022ஆம் ஆண்டுக்கான சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டம், சம்பிரதாய பாதீடு மாத்திரமே என்று தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

2020ஆம் ஆண்டுக்கான பாதீட்டின் இரண்டாம் வாசிப்பு தொடர்பான விவாதத்தில் பங்கேற்று, உரையாற்றிய தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டின் பிரச்சினைக்கு கொரோனா காரணம் அல்ல. அரிசி விலை உயர்ந்துள்ளமைக்கு கொரோனாத் தொற்றுக் காரணம் அல்ல. அரிசி மாபியாக்களே காரணம். இராணுவ அதிகாரிகளை நியமித்தும்கூட அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

ஜனாதிபதியின் பிழையான தீர்மானம் காரணமாக, அரசு இன்று 6 ஆயிரம் கோடி ரூபா நஷ்டமடைந்துள்ளது.வரவு-செலவுத் திட்டத்தின் படி இன்று செலவினம் 5 ஆயிரத்து 245 கோடி ரூபாவாக இருக்கின்ற போது, வருமானம் 2 ஆயிரத்து 284 கோடி ரூபா மட்டுமே.



கொரோனாவால் பாதிக்கப்பட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்க பாதீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் மூலம், முச்சக்கரவண்டி உரிமையாளர் ஒருவருக்கு 750 ரூபா மட்டுமே நஷ்ட ஈடாக வழங்கப்படப் போகிறது - என்றார். (எ-இ)




# யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழியல் ஆய்வு மாநாடு!

யாழ்ப்பாணம், நவ. 14

**இரண்டாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கத்தில் எதிர் வரும் 16ஆம் மற்றும் 17ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ம.இரகுநாதனின் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் க.சுதாகர் கலந்துகொள்ளவுள்ளார்.

16ஆம் திகதியன்று இடம்பெறும் முதல்நாள் நிகழ்வில், ஆசியுரையை தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் வழங்கவுள்ளார். சிறப்பு விருந்தினர் உரை, பிரதம விருந்தினர் உரை ஆகியவற்றைத் தொடர்ந்து நூல் வெளியீடொன்றும் இடம்பெறவுள்ளது. நூல் வெளியீட்டுக்கான அறிமுக உரையை தமிழ்த் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் ஆற்றவுள்ளார். தொடர்ந்து புலமையாளர்கள் கௌரவிப்பும், மாலை ஆய்வரங்க அமர்வுகளும் இடம்பெறவுள்ளன.

17ஆம் திகதி இடம்பெறும் இரண்டாம்நாள் நிகழ்வகளில், காலை 9 மணி தொடக்கம் ந.ப.12 மணி வரை ஆய்வரங்க அமர்வுகளும், பி.ப.2 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை மாலைஅமர்வும் இடம்பெறவுள்ளன. (ம)



நாவற்குழி சித்திரவேலாயுதர் ஆலயத்தில் கந்த சஷ்டி உற்சவத்தின் ஏழாம் நாள் திருக்கல்யாண உற்சவம் மற்றும் அதனைத் தொடர்ந்து தெப்பத் திருவிழா என்பன கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றன. (ச-159)



## மழையால் பாதித்தோருக்கு உதவி

கொடிகாமம், நவ.14

தென்மராட்சி பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு லயன்ஸ் கழக யாழ்.நுழைவாயில் அரிமாக்கழகத்தால் கடந்த வியாழக்கிழமை இரவு உணவு வழங்கப்பட்டது.

கழகத் தலைவர் லயன்ஸ் மருத்துவர் திருச்செல்வம் மற்றும் அவரது நண்பர் இ.பாலகுமார் ஆகியோர் இணைந்து 60 குடும்பங்களுக்கு இரவு உணவாக பாண் மற்றும் பருப்புக் கறி ஆகியவற்றை வழங்கி வைத்தனர். (ச-159)

## டிப்பர் போக்குவரத்து; சேதமடைந்தது வீதி!

தொடர்ச்சியான டிப்பர் போக்குவரத்தால் உசன் சந்தியிலிருந்து பனங்காட்டுச் சந்தி வரையான வீதி பெரும் சேதத்துக்குள்ளாகியுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவிக்கையில்,

கச்சாய் சந்தியிலிருந்து கிளாலி வரையான 6 கிலோமீற்றர் வீதி அண்மைக்காலமாகச் சீரமைக்கப்படுகின்றது. இந்த வீதிச் சீரமைப்புக்காக உசன் சந்தியிலிருந்து பனங்காட்டுச்சந்தி வழியாக டிப்பர்கள் மூலம் பொருள்கள் கொண்டு செல்லப்படுகின்றன. டிப்பர்களின் இந்தத் தொடர்ச்சியான போக்குவரத்தால் குறித்த வீதி பெரும் சேதத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த வீதியை கெற்பேலி, பாலாவி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்திவரும் நிலையில், அண்மையில் பெய்த மழை காரணமாக அவர்கள் மேலும் பல சிரமங்களைச் சந்திக்க வேண்டியுள்ளது - என்றனர். (ச-9)

# பட்ஜெட்டின் பெரும் பங்கு ராஜபக்ச குடும்பத்துக்கே!

## சாடுகின்றது ஜே.வி.பி.



**கொழும்பு, நவ.14**

**இந்தமுறை வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றில் ஒரு பங்கை ராஜபக்ச குடும்பம் பகிர்ந்து கொண்டுள்ளது. மக்களுக்கு எதுவுமே பகிரப்படவில்லை.**

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பரப்புரைச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவின் ஏழு மூளையின் பிரதிபலன் மக்களுக்குக் கிடைத்துள்ளது.

நாட்டின் வருமானம் 2 ஆயிரம் பில்லியன் ரூபாவாக இருக்கும்போது செலவுகள் 5 ஆயிரம் பில்லியன் ரூபாவாக இருக்கின்றன.

நாட்டில் மிகப் பெரியளவில் வரவு - செலவு பற்றாக்குறை காணப்படுகிறது. இந்த வரவு - செலவுத்திட்டம் மக்களுக்கு மெதுவாக வியர்வையையும், மயக்கத்தையும் ஏற்படுத்தும் வரவு - செலவுத் திட்டம்.

நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவின் வருகையால் பெரிய புரட்சிகள் எதுவும் நந்துவிடவில்லை. பழைய பழகிய மெட்டு மற்றும் வார்த்தைகள் அடங்கிய ஆவணமாக இந்தமுறை வரவு - செலவுத் திட்டம் காணப்படுகிறது.

கல்வி, சுகாதாரத்துறைகளுக்கு பெரியளவில் நிதி ஒதுக்கப்படவில்லை. ஆசிரியர்கள் ஒரு வருடமாக வீதியில் இறங்கி போராடியதன் காரணமாகவே அவர்களுக்கு ஏதோ ஒன்று கிடைத்துள்ளது.

விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி இருக்கும் சந்தர்ப்பத்தில் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கக்கூட நிதி ஒதுக்கப்படவில்லை - என்றார். (எ-இ)

# 26 அன்று நாடாளுமன்றை ஆயுதத்தோடு முற்றுகை!

## நளின் பண்டார எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, நவ.14

ஆயுதங்களுடன் நாடாளுமன்றம் அமைந்துள்ள பகுதியைச் சுற்றிவளைப்பதற்குத் தயார் நிலையில் உள்ளோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

கனரக வாகனங்களுடனும், ஆயுதங்களுடனும் எதிர்வரும் 26ஆம் திகதி நாடாளுமன்றத்தைச் சுற்றிவளைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அன்றைய தினம் கமத்தொழில் மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதம் நடைபெறவுள்ளது. நாட்டில் நிலவும் உரப்பிரச்சினை அன்றைய தினத்துக்கு முன்னர் தீர்க்கப்படவில்லை என்றால் இந்தச் சுற்றி வளைப்பு நடக்கும்.

விவசாயிகளுடன் இணைந்து, விவசாய ஆயுதங்கள் மற்றும் கனரக வாகனங்களைப் பயன்படுத்தி இந்தச் சுற்றிவளைப்பை மேற்கொள்ளவுள்ளோம் - என்றார். (எ-இ)

# பஸிலின் உரையில் பிழை?

கொழும்பு, நவ.14

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து ஆற்றிய உரை முற்றிலும் பிழையானது என்று தெற்கு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக அரசுக்கு 500 பில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்தார். நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் வரவு -செலவுத்திட்ட உரையை ஆரம்பித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆயினும் கடந்த செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பஸில் ராஜபக்ச கொரோனாத் தொற்று நோய் காரணமாக அரசுக்கு ஆயிரத்து 500 முதல் ஆயிரத்து 600 பில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என்று கூறியிருந்தார். அதனால் நிதியமைச்சர் ஆற்றிய உரை பிழையானது என்று தெற்கு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (எ-இ)

# பூச்சிய பட்ஜெட்

## பிரதான எதிர்க்கட்சி விமர்சனம்



கொழும்பு, நவ.14

அரசு சமர்ப்பித்துள்ள வரவு-செலவுத் திட்டம் முழுமையாகப் பூச்சிய தோல்வியடைந்த வரவு - செலவுத் திட்டம் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி விமர்சித்துள்ளது.

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்புத் தொடர்பான விவாதம் நேற்று நாடாளுமன்றில் நடைபெற்றபோது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா மேற்கண்டவாறு விமர்சித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரவு-செலவுத் திட்டத்தில் வருமானத்தை அதிகமாகக் காட்டி செலவினத்தைக் குறைத்துக் காட்டும் செயற்பாடே மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள வரிகள் எதுவுமே வருமானத்தைக் கொண்டு வரப்போவதில்லை. 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி பதவிக்கு வந்தபோது இருந்ததைவிடவும், தற்போது 70 வீதம்வரை அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. 2022ஆம் ஆண்டின் வரவு -செலவுத் திட்டம் காரணமாக எதிர்காலத்தில் பொருள்களின் விலை உயரும். அதைத் தடுக்க முடியாது

சேதனப்பசளைகள் தொடர்பாக அரசு கூறியபோதும் அதற்காக பாதீட்டில் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. உலகிலேயே கொரோனாவால் வருமானத்தைப் பெற்ற நாடு இலங்கை மாத்திரமே. பி.சி.ஆர். முறைகேடு, தடுப்பூசி முறைகேடு என எல்லாவற்றிலும் முறைகேட்டை மேற்கொண்ட அரசாக இந்த அரசு கருதப்படுகிறது.

அதேநேரம் கொரோனாக் கட்டுப்பாட்டுக்காக 250 பில்லியன் ரூபாவை மாத்திரமே அரசு இதுவரை செலவழித்துள்ளது. எனினும் 700 பில்லியன் ரூபா செலவிட்டுள்ளது என்று கூறிவருகிறது- என்றார். (எ-இ)

# வெற்றிகர பட்ஜெட்டாம்!

## ஆளும் தரப்பு குதூகலம்

கொழும்பு, நவ.14

2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நாடு எதிர்நோக்கும் மற்றும் பொருளாதாரம் தொடர்பான பிரச்சினைகளுக்கு விடைகளை வழங்கியுள்ளது என்று ஆளும்தரப்பு உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டம் தொடர்பாக அமைச்சர்களான கெஹலிய ரம்புக்வெல, எஸ்.எம்.சந்திரசேன, இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கொரோனா நெருக்கடியால் பாதிக்கப்பட்ட துறைகளுக்கு நிவாரணம் வழங்குவதில் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் கவனம் செலுத்தியுள்ளது என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அதேவேளை பொதுமக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் வரி விதிப்பதற்கு இந்த வரவு - செலவுத் திட்டம் கவனம் செலுத்தியுள்ளது என அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் கடன் சுமையிலிருந்து நாட்டைக் காப்பாற்றி, பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்தும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

வெற்றிகரமான வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தமைக்கு நிதி அமைச்சர் பஸில் ராஜபசவுக்கு இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர பாராட்டுக்களைத் தெரிவித்தார். (எ-இ)

# அடிப்படைப் பிரச்சினைகள் எவற்றுக்கும் தீர்வு இல்லை

## எரான் விக்ரமரத்ன விமர்சனம்



கொழும்பு, நவ.14

2022 வரவு - செலவுத் திட்டத்தில் அடிப்படைப் பிரச்சினைகளுக்குரிய தீர்வு இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வை வரவு-செலவு திட்டம் கொண்டிருக்கவில்லை.

வரவு- செலவுத் திட்டப் பற்றாக்குறை மற்றும் அந்நியச் செலாவணி நெருக்கடி ஆகியவற்றுக்குத் தீர்வைக் காண்பதற்கு வரவு - செலவு திட்டம் தவறியுள்ளது. ஏற்றுமதி அதிகரித்தால் மாத்திரமே அந்நியச் செலாவணி நாட்டுக்குள் வரும். ஏற்றுமதியாளர்களை வலுப்படுத்த வேண்டிய விடயங்கள் எவையும் வரவு-செலவுத் திட்டத்தில் இல்லை.

ஆசிரியர், அதிபர் சம்பள நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதை வரவேற்கின்றோம். ஆனால், ஒதுக்கப்பட்ட நிதி போதுமானதா என உறுதியாகத் தெரிவிக்க முடியாது-என்றார். (எ-இ)





# திரவ உரப்பாவனை தொடர்பில் அறிமுகவிழா கிளிநொச்சியில்

கிளிநொச்சி, நவ. 14

நனோ நைட்ரஜன் சேதன திரவ உரப் பாவனை தொடர்பான அறிமுகவிழா கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றது.

பரந்தன் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில், வன்னேரிக்குளம் கமக்காரர் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த நிகழ்வு வன்னேரிக்குளம் முருகன் கோவில் பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த ஐ.எப்.எப்.சி.ஓ. நிறுவனத்தின் பிரதிநிதிகள் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்ததுடன், வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-214)



# வெள்ளத்தில் மூழ்கியது மானவளை வயல்வெளி

## கிராமத்தின் நெற்செய்கை பாதிப்பு

கொடிகாமம், நவ. 14

கல்வயல் கிராமத்தில் ஜே/305 கிராம அலுவலர் பிரிவில், மானவளை வயல் வெளி வெள்ளத்தில் மூழ்கி கிராமத்தின் நெற்செய்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது என அந்தப் பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் விவசாயிகள் மேலும் தெரிவிக்கையில்:

சில வருடங்களுக்கு முன் இந்த மானவளை வயல் வெளிக்குளம் புனரமைக்கப்பட்டது. சரியான திட்டமிடல் இல்லாமல் குளம் புனரமைக்கப்பட்டதன் காரணமாகக் குளத்துநீர் தேங்கி, விவசாய நிலப்பரப்பு அழிவடைந்துள்ளது.

குளம் புனரமைக்கப்படுவதற்கு முன்பு மழை வெள்ளம் சரசாலைக் காட்டின் ஊடாகப் பாய்ந்து வல்லை வெளிக் கடலுடன் சேர்ந்தது. அதனால் குளம் புனரமைக்கப்படமுன்பு விவசாயிகளுக்கு எந்தவிதமான பயிர் அழிவுகளும் ஏற்படவில்லை. குளம் புனரமைக்கப்பட்டு, அணைக்கட்டு அமைத்ததன் காரணத்தால் அதற்குப் பின்னர் வயல்களுக்குள் நீர் தேங்கி நிற்பதால் நெல் விதைத்து அறுவடை செய்ய முடியவில்லை - என்றனர். (ம-159)

# வெளிநாடொன்றில் சிறந்த சர்வதேச பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பதற்கு யோசனை செய்கின்றீர்களா?

## நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியது இவ்வளவுதான்

1. **வெளிநாட்டில் கல்வி கற்பதற்கு அல்லது வெளிநாட்டில் குடியேறுவதற்கு ஆங்கில மொழி தேர்ச்சி பரீட்சையின் முக்கியத்துவம் யாது?**

ஆங்கில மொழி தேர்ச்சி பயிற்சியானது ஆங்கில மொழியினை தங்களுடைய தாய் மொழியாக கொண்டிராத அதேவேளை வெளிநாட்டில் கல்வி கற்பதற்கோ குடியேறுவதற்கோ விரும்புவர்களுக்கானது. இந்த பரீட்சையானது இவர்களின் ஆங்கில மொழி தேர்ச்சியினை உறுதி செய்வதனை இலக்காக கொண்டது என்பதுடன் கல்விசார் / புலமைசார் எழுத்துக்களை விளங்கிக் கொள்ளுதல் மற்றும் மேற்பார்வையாளர்களுடன் தொடர்பு கொள்ளுதல் போன்ற அடிப்படை திறன் உள்ளதா என்பதனையும் உறுதி செய்கின்றது.

2. **பி.டி.இ கல்விகற்பவர்களுக்கு எவ்வாறு கொள்ளைநோய் காலத்தினையும் உள்ளடக்கி சவால்களை முன்வைக்கின்றது?**

கொவிட் கொள்ளை நோய்காலம் கல்வி முறைமையில் முழுமையான ஒரு மாற்றத்தை கொண்டுவந்துள்ளது. நாடு இப்போது வழமை நிலைக்கு திரும்பியுள்ளபோதும் மாணவர்கள் கல்வி நடவடிக்கைகள் இணையதளத்திற்கு மட்டுப்படுத்தப்படுள்ளது. கடுமையான பயணக்கட்டுப்பாடுகள் உள்ள இந்த காலத்திலும் பி.டி.இ திறைமையானவர்களுக்கு வேலை செய்வதற்கும் கல்விகற்பதற்குமான சரியான வாய்ப்புக்களை உறுதிசெய்கின்றது. 2021 நவம்பர் 16 இல் ஆரம்பிக்கும் பரீட்சைகள், ஒரு மணித்தியாலத்தினால் குறைக்கப்பட்டு முழு இரண்டு மணித்தியால தேர்வாக மாறியுள்ளபோதும் பரீட்சையின் துல்லிய தன்மை மாத்திரம் எவ்வித மாற்றமின்றி உள்ளது.

3. **பியர்சன் அந்நியப்படுத்தப்பட்ட தொலைவில் இருந்து பரீட்சை தோற்ற எண்ணுபவர்களுக்கு எவ்வகையான டிஜிட்டல் தீர்வுகளை கொண்டுள்ளது?**

இன்று டிஜிட்டல் முறைமை அனைத்து தொழில் சூழல்களிலும் முக்கியமான ஒரு பங்கினை வகிக்கின்றது. இதன் காரணமாக நாங்கள் பி.டி.இ இணையவழி பரீட்சைகளை தொடங்கியுள்ளோம். பி.டி.இ கல்விசார் பரீட்சைகளுக்கு சமமான பரீட்சைகளை இணையவெளியூடே புது இணையவழி மேற்பார்வை வசதிகளுடன் தொலைவில் இருந்து பரீட்சைகளை செய்ய விரும்புவோருக்காக அறிமுகப்படுத்தப்படுள்ளது. பியர்சன் பி.டி.இ இணையவழி வடிவத்தை நோக்கி தொடர்ந்து பரந்த அளவில் வேலைகளை முன்னெடுக்கும்.



**முக்கிய குறிப்புக்கள்**

- 2021, நவம்பர் 21 இல் ஆரம்பிக்க இருக்கும் பி.டி.இ பரீட்சைகள் 2 மணித்தியாலங்களுக்கு குறைக்கப்பட்டுள்ளது.
- தொலைவில் உள்ளவர்களுக்காக பி.டி.இ இணையவழி பரீட்சைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
- மிகச்சிறந்த வகுப்பு சார்ந்த பாதுகாப்பான தொலைவில் இருந்தே மேற்பார்வை வசதிகளை வழங்குவதற்காக சரியான வகையில் செயற்கை அறிவு மற்றும் மனித வள பங்களிப்பு என்பன சேர்த்து வடிவமைக்கப்படுள்ளது.



**பிரேமிலா போல்ராஜ்**
பணிப்பாளர்
தொழிற்திறமை மற்றும் தகைமைகள்
தென் ஆசியா

கட்டுரையாசிரியர் :
பிரேமிலா போல்ராஜ், பணிப்பாளர், தொழிற்திறமை மற்றும் தகைமைகள், தென் ஆசியா பியர்சன்.
மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இந்த இணையதளத்துக்கு பிரவேசிக்கவும்
***https://www.pearsonpte.com/***

# கோரக்கனில் வாள்வெட்டு சந்தேகநபர்கள் கைது!

கிளிநொச்சி, நவ. 14

கிளிநொச்சி, கோரக்கன் கட்டுப் பகுதியில் நேற்றுமுன்தினம் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த குடும்பத் தலைவர் மீது மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏனைய இரு சந்தேகநபர்களைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த ஒருவர் மீது கார் ஒன்றில் வந்த குழுவினர் வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியுள்ளனர். தாக்குதலில் படுகாயமடைந்த நபர் கிளிநொச்சி மாவட்ட பொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். ஏனையவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-113)

# வெள்ளம் வடிந்தோடும் வகையில் வாய்க்கால்களைச் சீரமையுங்கள்!

## நெற்செய்கையாளர்கள் கோரிக்கை முன்வைப்பு

சாவகச்சேரி, நுணாவில் கிழக்கு மற்றும் நுணாவில்மேற்கு கமக்கார அமைப்புகளுக்கு உட்பட்ட வயல்களில் தேக்கமடைந்து காணப்படும் வெள்ளத்தை வெளியேற்றுவதற்காக, வாய்க்கால்களைச் சீரமைத்துத் தரவேண்டும் என்று விவசாயிகள் கமநல சேவைகள் நிலையத்திடம் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பில் விவசாயிகள் மேலும் தெரிவிக்கையில்:

இந்தக் கமக்கார அமைப்புக்களுக்கு உட்பட்ட வயல்களில் தேக்கமடையும் வெள்ளம் தண்டவாளத்தில் உள்ள பாலம் வழியாக வெளியேறி வந்தது. இந்த வருடம் வெள்ளம் வெளியேறும் வாய்க்கால் புனரமைக்கப்படாததால் வெள்ளம் வடிந்தோட முடியாமல் வயல்களில் தேக்கமடைந்துள்ளது. இதனால் சாவகச்சேரி சிவன்கோவிலடி தொடக்கம் நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் வரையான சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் உள்ள நூற்றுக்கு மேற்பட்ட ஏக்கர் வயல்களில் வெள்ளம் வெளியேற முடியாமல், பயிர்கள் அழிவடையும் நிலை காணப்படுகிறது. எனவே வெள்ளம் வடிந்தோடும் வகையில் வாய்க்கால்களை அதிகாரிகள் உடனடியாகப் புனரமைத்துத் தரவேண்டும் - என்றனர். (ம-9)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




## கொடுக்கல் இல்லை பிடுங்குதல் மாத்திரமே

இலங்கையின் 76ஆவது வரவு- செலவுத் திட்டம் நேற்று முன்தினம் ராஜபக்ச அரசின் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. விலைவாசி உயர்வாலும், பொருளாதார நெருக்கடியாலும் திணறும் இலங்கை மக்களுக்கு இந்த வரவு- செலவுத் திட்டம் பூச்சியம்தான்.

பஸில் ராஜபக்ச சமர்ப்பித்துள்ள வரவு- செலவுத் திட்டத்தில் மக்களுக்கான நிவாரணங்களோ, நெருக்கடியில் உள்ள நாட்டை மீட்டெடுப்பதற்கான திட்டங்களோ இல்லை. மக்களிடம் இருந்து எவற்றையெல்லாம் எடுத்துக்கொள்ள முடியுமோ, அவற்றையெல்லாம் எடுத்துக்கொள்ளும் வகையில் வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கின்றது என்றே சொல்லலாம்.


அரசின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடன் வரிகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. சில பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. சிலவற்றுக்குத் தண்டங்களும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. நாட்டின் விலைவாசி உயர்வு பற்றியோ, டொலர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கோ எந்தத் திட்டங்களும் இல்லை. அதேநேரம், நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச முக்கியமானதொரு முன்மொழிவையும் முன்வைத்திருக்கிறார். நாட்டில் ஓய்வுபெறும் அரச ஊழியர்களின் வயதெல்லை 65 ஆக உயர்த்தப்படவுள்ளது என்றும் கூறியிருக்கிறார்.

கடன்களாலும், தவறான கொள்கை முடிவுகளாலும் ஆட்சியைக் கொண்டுநகர்த்தமுடியாமல் தத்தளித்துக்கொண்டிருக்கும் ராஜபக்ச அரசு, வருமானத்தை ஈட்டுவதற்கு காவடி எடுத்து ஆடக் கூடத் தயாராக இருக்கின்றது. அதைப் போன்று சூட்சுமமாக நாட்டு மக்களிடம் இருந்து வருமானத்தைப் பறித்துக் கொள்வதற்கும் திட்டங்களைத் தீட்டுகின்றது. ஓய்வு பெறும் வயது அதிகரிக்கப்பட்டதும் அதன் ஒரு வடிவமே.

வினைத்திறனான வேலைப் படையை உருவாக்கும் நோக்குடன் ஏனைய நாடுகள் ஓய்வு பெறும் வயதெல்லையைக் குறைக்கின்றன. ஆனால் கோத்தாபய அரசோ அரசு வழக்கத்துக்கு மாறாக வயதெல்லையை அதிகரித்திருக்கின்றது. அரசின் இந்த யோசனைக்குக் காரணம் ஓய்வு பெறுவோருக்கான ஓய்வூதியம், பணிக்கொடைகளை வழங்க அரசுக்கு நிதியில்லை என்பதே. ஓய்வுபெறும் வயதெல்லையை அதிகரிப்பதன் ஊடாக அவர்களுக்கு வழங்கவேண்டிய கொடுப்பனவுகளைத் தள்ளிப் போட்டுள்ளது அரசு. அதேநேரம், அரசின் இந்த முடிவால் இளைஞர்களின் வேலை வாய்ப்பும் கடுமையாகப் பாதிக்கப்படும். இளையோருக்கு ஏற்படும் வேலையில்லாப் பிரச்சினையால் நாடு பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்ளும் என்பதை மறுக்க முடியாது.

அதற்கும் மேலாக வயதின் தன்மையைக் கருத்திற் கொண்டே ஓய்வூதிய வயது தீர்மானிக்கப்படுகின்றது. அரசு தனது சுயலாபத்துக்காக அல்லது தனது இயலாமையை மறைப்பதற்காக இந்த வயதெல்லையை உயர்த்தினாலும், 60 வயதுடையவர்கள் தங்கள் பணியைச் சிரத்தையோடு செய்ய முடியுமா என்பது கேள்விக்குறியே. இறுதி ஆண்டுவரை மனநிறைவோடு பணிசெய்வோரின் எண்ணிக்கை மிகக் குறைவே. ஆனால், அரசு இதையெல்லாம் சிந்திக்கவில்லை. தனது ஆட்சியைத் தக்கவைப்பதற்காக இந்த அவசர முடிவை எடுத்திருக்கின்றது.

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச அரச சேவைகளால் நாட்டுக்குச் சுமை என்றும் கூறியிருக்கிறார். நாட்டின் தற்போதைய ஜனாதிபதி நொடிக்கொரு தடவை, அரச ஊழியர்களின் பணித் திறமை தொடர்பில் கேள்வி எழுப்புகின்றார். இளையோர்களின் திறமையை நாட்டுக்குப் பயன்படுத்துவது தொடர்பில் பேசுகின்றார். ஆனால், அவரது அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அதற்கு எதிர்மாறாகவே இருக்கின்றன. பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிப்பதற்குரிய திட்டங்களை வகுக்காது, பூசி மெழுகும் செயற்பாடுகளையே ராஜபக்ச அரசு மேற்கொண்டிருக்கின்றது. ராஜபக்சக்கள் தங்கள் ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைக்க மேற்கொள்ளப்படும் இந்தப் பூசி மெழுகல் செயற்பாடுகளால், நாடு மிக இருண்ட காலத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது என்பதே உண்மை....!



## மக்கள் வசிக்கின்ற வீடுகளுக்கும் எச்சரிக்கைத் துண்டுப்பிரசுரங்கள்!

### கேப்பாப்புலவு மாதிரிக் கிராம மக்கள் குற்றச்சாட்டு

**முல்லைத்தீவு, நவ. 14**

**முல்லைத்தீவு - கேப்பாப்புலவு மாதிரிக் கிராமத்தில், மக்கள் குடியிருக்கின்ற வீடுகளுக்கும் அவர்கள் அங்கு குடியிருக்கவில்லை என்று எச்சரிக்கைத் துண்டுப்பிரசுரம் ஒட்டப்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.**

சுமார் 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குறித்த மாதிரிக் கிராமத்தில் வாழ்கின்றனர். எனினும் 15 வரையான குடும்பங்கள் அங்கு குடியிருக்கவில்லை. இந்த நிலையில் வீட்டுத் திட்டங்களைப்பெற்று, அந்த வீடுகளில் குடியிருக்கவில்லை என்று - சில வீடுகளுக்கு துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன. இவ்வாறு துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்படும் போது குடியிருப்பாளர்கள் இருக்கின்ற சில வீடுகளுக்கும் அவை ஒட்டப்பட்டுள்ளன என்று பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சுமத்துகின்றனர்.

அந்தத் துண்டுப் பிரசுரத்தில்: மீள்குடியேற்ற அமைச்சால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தைப் பெற்று அரச காணியில் வீட்டை அமைத்துள்ளீர்கள். தற்போது அந்த வீட்டில் குடியிருக்கவில்லை என கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தரால் அறியத்தரப்பட்டுள்ளது. எதிர்வரும் 26ஆம் திகதிக்குள் குறித்த வீட்டில் குடியேறவேண்டும். இல்லாவிடில் காணி உரிமைப் பத்திரம் இரத்துச் செய்யப்படும் எனக் குறிப்பி டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மாதிரிக் கிராம குடும்பங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தகவல் வழங்கிய நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கரைதுறைப்பற்று பிரதேச செயலரிடம் தொடர்பு கொண்ட போது'இந்த விடயம் தொடர்பாக எதிர்வரும் திங்கட்கிழமை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்' என்று பிரதேச செயலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-13)

## கிளிநொச்சியில் மீண்டும் அதிகரிக்கும் கொரோனா

கிளிநொச்சி, நவ. 14

கிளிநொச்சி மாவட்டத்தில் மீண்டும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என கிளிநொச்சி மாவட்ட தொற்றுநோயியல் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அதன்படி நேற்றுமுன்தினம் 12ஆம் திகதி மாத்திரம் 52 பேருக்கு கொரோனத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது முடக்கநிலை நீக்கப்பட்ட பின், மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது செயற்படுகின்றனர். இதன் விளைவாகவே குறைந்து காணப்பட்ட தொற்றாளர் எண்ணிக்கை மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. எனவே மக்கள் பொதுஇடங்களில் பயணிக்கும்போது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு சுகாதாரத்துறையினர் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். (ச-214)

### பூநகரி பொலிஸ் நிலையத்தில்

## 5 பேருக்கு கொரோனா

கிளிநொச்சி, நவ. 14

கிளிநொச்சி - பூநகரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் ஐந்து பொலிஸ் அலுவலர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த அலுவலர்களுக்கு நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். சோதனையின் முடிவுகள் நேற்று வெளியிடப்பட்டன. இதிலேயே மேற்படி அலுவலர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவர்கள் கிளிநொச்சி - கிருஸ்ணபுரம் இடைத்தங்கல் சிகிச்சை நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். (ம-113)

நவம்பர் 2021 **வடமாகாண மரநடுகை மாதம்**

"சாகுமுன் உன் பாட்டன் நட்ட பழமரங்களைக் கேட்டுப்பார், உனது பரம்பரையின் கனவுகளை இன்னமும் அது வைத்திருக்கக் கூடும்"

–கவிஞர் வ. ஐ.ச.ஜெயபாலன்










# பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் 20 ஏக். நெற்செய்கை பாதிப்பு

**கிளிநொச்சி, நவ. 14**

**கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக் குட்பட்ட கிளாலிப் பகுதியில் அடைமழை காரணமாக சுமார் 20 ஏக்கர் வயல் நிலங்கள் முற்றாகப் பாதிப்படைந்துள்ளன.**



இது தொடர்பில் அந்தப் பகுதி விவசாயிகள் மேலும் தெரிவிக்கையில்,

கனமழை காரணமாக எமது வயல் நிலங்களுக்குள் இரண்டு வாரங்களுக்கு மேலாக வெள்ளம் தேங்கி நிற்கின்றது. வெள்ளம் வடிந்தோட வேண்டிய வாய்க்காலுக்குள் குப்பைகள் தேங்கி, வெள்ளம் வடிந்தோட முடியாமல்உள்ளது. இதுதான் இந்த அவலநிலைக்குக் காரணம். கடந்த வருடமும் இவ்வாறான பாதிப்பை எதிர்கொண்டோம். எனினும் எந்த இழப்பீடும் எமக்குக் கொடுக்கப்படவில்லை. உரிய அதிகாரிகள் வெள்ளப் பாதிப்பை ஆராய்ந்து எமக்கு இழப்பீடு கிடைப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றனர். (ம-113)



# வேகக்கட்டுப்பாட்டை இழந்து கடைக்குள் புகுந்தது டிப்பர்!


கிளிநொச்சி, நவ. 14

கிளிநொச்சியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் வாகனமொன்று புடைவையகம் ஒன்றுக்குள் புகுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனமே ஏ-9 வீதியில் கிளிநொச்சி நகரத்தில் உள்ள புடைவையகத்துக்குள் புகுந்து விபத்துக்குள்ளானது. எனினும் அதிர்ஷ்டவசமாக எவருக்கும் எந்தக் காயங்களும் ஏற்படவில்லை. கடை பகுதியளவில் சேதமடைந்துள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-6)

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## 2021 -2022



குரு பார்க்க கோடி நன்மை என்று கூறுவார்கள். நவகிரகங்களில் சுபக் கிரகமாக விளங்கும் குரு பகவான் பெயர்ச்சியாகும் பொழுது அனைத்து ராசியினருக்கும் நற்பலன்களை வழங்குவார். குருபகவான் நேர்கதியில் **நவம்பர் 13ஆம் திகதி** மகர ராசியில் இருந்து கும்ப ராசிக்கு பெயர்ச்சி ஆகியுள்ளார். மகரம், கும்பம், மீனம் ஆகிய ராசிகளில் பயணம் செய்ய இருக்கும் குருபக வான், 2022ஆம் ஆண்டு என்ன செய்ய இருக்கிறார்? அதனால் 12 ராசிக்காரர்களுக் கும் கிடைக்கப் போகும் பலன்கள் என்னென்ன? என்பதை பார்ப்போம்.



### இடபம்

இடபராசி அன்பர்களுக்கு இந்தக் குருப் பெயர்ச்சி நல்ல மாற்றங்களைக் கொண்டு வர உள்ளது. உங்கள் ராசிக்கு ஒன்று, மூன்று, ஐந்து ஆகிய இடங்களை குருபகவான் பார்க்கிறார். குருபக வான் உங்கள் ராசியைப் பார்ப்பதால் இதுவரை இருந்துவந்த சோர்வான மனநிலை மாறும். இதுவரை திறமைக் கான அங்கீகாரம் கிடைக்கவில்லையே என்று கவலைப்பட்டீர்களே... அந்தக் கவலை இப்போது தீரும். உங்களின் பழைய மதிப்பும் மரியாதையும் திரும் பக் கிடைக்கும். கடன் சுமை கணிசமா கக் குறையும். நினைத்த காரியத்தை நினைத்த படி முடிப்பீர்கள். உடலில் இதுவரை இருந்துவந்த ஆரோக்கியக் குறைவுகள் நீங்கும். மனதில் துணிச்சல் அதிகரிக்கும்.

மூன்றாம் இடத்தைப் பார்ப்பதால் துணிச்சலுடன் முடிவெடுக்கும் திறன் அதிகரிக்கும். வீண் அச்சங்களில் இருந்து விடுபடுவீர்கள்.

இளைய சகோதர வகையில் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கி சுமுகமான உறவு ஏற்படும். அவர்கள் மூலம் ஆதாயம் பெறுவதற்கும் வாய்ப்பு உண்டு.

குருவின் பார்வை பூர்வபுண்ணிய மற்றும் புத்திரஸ்தானத்துக்கு ஏற்படுவதால், பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் கிடைக்க, அவர்கள் மூலம் பணவரவு மற்றும் பொருள்சேர்க்கைக் கும் வாய்ப்பு ஏற்படும். குலதெய்வ பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.

தடைப்பட்டு வந்த திருமணப் பேச்சுக்கள் சாதகமாக முடியும். பணியிடத்தில் சிறப் பான முன்னேற்றம் . பணிச்சுமை இருக்க தான் செய்யும். உடன் வேலை பார்ப் பவர்கள் தங்களின் வேலைகளையும் உங்கள் மேல் சுமத்துவார்கள். ஆனா லும் சமாளித்துவிடுவீர்கள்.

கலைஞர்களைப் பொறுத்த அளவில் இந்த குருப்பெயர்ச்சி முன்னேற்றத் தையேதரும். விமர்சனங்களைத் தாண்டி சாதிப்பீர்கள். புதிய படைப்பு களைப் போராடி வெளியிடுவீர்கள். அதன் மூலம் புகழ் கிடைக்கும். திருமண வயதுள்ள இடப ராசி அன்பர்களுக்கு இதுவரை திருமணம் தடைப்பட்டுக் கொண்டிருந்த நிலை மாறும். மண மாலை கூடிவரும்.

**13.11.2021 முதல்**
**30.12.2021 வரை**

இந்தக் காலகட்டத்தில் குருபகவான் உங் களின் விரையாதிபதியான செவ்வாயின் நட்சத்திரமான அவிட்ட நட்சத்திரத்தில் சஞ்சரிப்பதால் உங்களின் மன வலிமை அதிகரிக்கும். உங்கள் பலவீனங்கள் பலமாகும். வாழ்க்கைத்துணையோடு அன்பும் அந்நியோன்யமும் அதிகரிக் கும். நெருங்கிய உறவினர்கள் தேடி வந்து உதவுவார்கள்.

சொத்துகளில் இருந்த சிக்கல்களைப் பேசித் தீர்ப்பீர்கள்.

**31.12.2021 முதல்**
**02.03.2022 வரை**

இந்தக் காலகட்டத்தில் குருபகவான் சதய நட்சத்திரத்தில் சஞ்சரிப்பது உங் களுக்கு வலிமையை உண்டாக்கும். எதிரிகளை எளிதாக வீழ்த்துவீர்கள். பங்கு வர்த்தகம் பலன் கொடுக்கும். திட்டமிட்டுக் காய் நகர்த்தி வேலையை முடிப்பீர்கள். புதிய சொத்துகள் வாங் குவீர்கள். வீட்டை அழகுபடுத்தும் பணி யிலும் விரிவுபடுத்தும் முயற்சியிலும் இறங்குவீர்கள்.

**02.03.2022 முதல்**
**13.04.2022 வரை**

குருபகவான் தனது சொந்த நட்சத்திர மான பூரட்டாதி நட்சத்திரத்தில் சஞ்சாரம் செய்வதால் பணிச்சுமை அதிகரித்தபடி இருக்கும். ஓய்வில்லாமல் திண்டாடு வீர்கள்.

புதிய பொறுப்புகளை பதவிகளை ஏற் கும் முன்பாக நன்கு ஆலோசனை செய்யுங்கள். உறவினர்கள் மற்றும் நண்பர்களின் அன்புத்தொல்லைக்கு ஆளாக வேண்டிவரும். சிலர் உங்கள் மீது அநாவசியமாகப் பழி போட முயல் வார்கள். உங்களுக்கான உரிமைகளும் சலுகைகளும் கொஞ்சம் கொஞ்சமாகத் தேடிவரும். மொத்தத்தில் இந்த குருப் பெயர்ச்சி வாழ்வில் தன் சொந்த அனு பவங்களைப் பயன்படுத்தி ஒருவர் எப் படி முன்னேற முடியும் என்பதை உங்க ளுக்குப் புரிய வைப்பதாக அமையும்.




முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கடந்த 26.10.2020 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்

கருணாநிதி கௌரி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த முதலாம் ஆண்டு நினைவு நாள் இன்று (14.11.2021) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மயிலணி வடக்கு, சுன்னாகம்.

கணவர் கருணாநிதி

(CS 41042) 3/6)


# 'கோவேக்சின்' தடுப்பூசி செயற்றிறன் 77.8 சதவீதம்

## ஆய்வறிக்கையில் தகவல்

புதுடில்லி, நவ.14

கொரோனா வைரஸுக்கு எதிராக இந்திய அரசின் மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் மற்றும் பாரத் பயோடெக் நிறுவனம் இணைந்து தயாரித்த 'கோவேக் சின்' தடுப்பூசி 77.8 சதவீத செயற்றி றன் கொண்டுள்ளது என ஆய்வறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொரோனா வைரஸின் டெல்டா மாறுபாட்டுக்கு எதிராக 'கோவேக் சின்' தடுப்பூசி 65.2 சதவீதம் பயனுள் ளது என ஆய்வில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தடுப்பூசிகளில் பொதுவாகப் பயன்படுத் தப்படும் 'செயலிழந்தவைரஸ் தொழில் நுட்பம்' தான் கோவேக்சின் தடுப்பூசி யில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த தடுப்பூசியின் 2 டோஸ்களை செலுத்திக் கொண்டவர்களுக்கு, 2 வாரங்களுக் குப் பின்னர் அவர்களது உடலில் ஒரு வலுவான எதிர்ப்புச் சக்தி உருவாகிறது என லான்செட் ஆய்வறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

'கோவேக்சின்' தடுப்பூசியின் அவசர கால பயன்பாட்டுக்கு உலக சுகாதார அமைப்பு கடந்த வாரம் அனுமதி வழங் கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** குழந்தைகள் நல்ல வழியில் நடைபோடுவார்கள். தோற்றப்பொலிவு கூடும். நோய் பற்றிய கற்பனையில் இருந்து மீள்வீர்கள். அலுவலகத்தில் இருந்த பிரச்சினை தீரும். உங்களைத் தாழ்த்திப் பேசியவர் மாறுவார்.

**இடபம்:** வெளிநாடு சம்பந்தப்பட்ட புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். வீட் டில் அமைதி திரும்பும். பயம் நீங்கும். உங்களின் முகம் மலரும். பணம் வந்து மகிழ்ச்சி அளிக்கும்.

**மிதுனம்:** காணாமற்போன முக்கிய பொருள் ஒன்று கிடைக்கும். வாழ்க் கைத்துணையின் செயல் ஒன்றால் நிம்மதி வரும். தவறான பழக்கம் உள்ள வர்களிடம் இருந்து ஒதுங்குவீர்கள்.

**கடகம்:** சோர்ந்திருந்த நீங்கள் சுறுசுறுப்பாவீர்கள். மனம் அமைதி யுறும் . யாரைப்பற்றியும் எவரிடமும் குறைகூற வேண்டாம். அதுவே நல்லது. நகைச்சுவை என்று பேசுவது தவறாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**சிம்மம்:** வாகனத்தில் செல்லும் போது கவனமாகச் செல்வது நல்லது. குடும்பத் தினர் மூலம் பல நன்மைகள் நிகழும். மகிழ்ச்சி அதிகரிக்கும். சொத்து வாங்கும் போது சரிபார்த்து வாங்குங்கள்.

**கன்னி:** தள்ளிப்போன வழக்கு சாதக மாகும். உறவினர் இடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். இழுபறியாக இருந்த விஷயங்கள் எல்லாம் இன்று முடிவடையும். தாயாருக்கு சந்தோஷம் அளிக்கும் செய்தி வரும்.

**துலாம்:** அதிக வட்டிக்கு வாங்கியிருந்த கடனை விரைந்து அடைப்பீர்கள். உடன் பிறந்தவர்களால் உதவிகள் உண்டு. நிம்மதியான நாள். மனப்போராட்டங்கள் குறையும். புதிய முயற்சியில் ஈடுபடு வீர்கள்.

**விருச்சிகம்:** இத்தனை நாளாக குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் விலகும். உங்களை எதிர்த்தவர்கள் அடங்குவர். உங்கள் பேச்சில் முதிர்ச்சி தெரியும். வியாபாரத்தில் லாபம் கூடுத லாக இருக்கும்.

**தனுசு:** வாகனத்தை சீர்செய்வீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். தோல்வி மனப்பான்மையில் இருந்து விடுபடு வீர்கள். பணவரவு உண்டு. சிறிய செலவுகள் இருக்கும். புதிய நட்பு கிடைக்கும்.

**மகரம்:** குடும்பத்தில் ஒருவருக்கு வாழ்க்கைத்துணை அமையும். எதிர் மறை எண்ணங்களை மனதை விட்டு விரட்டுவது நல்லது. நல்ல நண்பர் களை இழக்காமல் பாதுகாத்துக் கொள்வீர்கள்.

**கும்பம்:** பிள்ளைகளுக்கு நல்ல சம்ப ளத்தில் புதியவேலைகிடைக்கும். தடைப் பட்ட விடயங்கள் மீண்டும் தொடங்கி நல்லபடியாக முடியும். பிள்ளைகள் நல்ல வழியில் வாழ்வை அமைத்துக் கொள்வார்கள்.

**மீனம்:** குழந்தைகளின் எதிர்காலம் பற்றி நல்லமுறையில் திட்டமிடுவீர்கள். பணியிடப் பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வு காண்பீர்கள். இன்று பேச்சிலும் பணியிலும் கவனமாக இருந்து விட்டால் போதும்.

### வடக்கு - கிழக்கு மாகாணங்களில்

# நீதித்துறை அலுவலர்களாக 12 சட்டத்தரணிகள் நியமனம்

யாழ்ப்பாணம், நவ. 14

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 12 சட்டத்தரணிகள் நீதித்துறை அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 5 சட்டத்தரணிகளும் வவுனியா, முல்லைத்தீவைச் சேர்ந்த தலா ஒரு சட்டத்தரணியும் திருக்கோவிலைச் சேர்ந்த ஒருவரும், பொத்துவிலைச் சேர்ந்த ஒருவரும், மூதூரைச் சேர்ந்த ஒருவரும், அக்கரைப்பற்றைச் சேர்ந்த இரு சட்டத்தரணிகளும் இவ்வாறு நீதித்துறை அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் 12 பேரும் வரும் நவம்பர் 15ஆம் திகதி திங்கட்கிழமை நீதிச் சேவை ஆணைக்குழுவில் உறுதி உரை எடுத்துக்கொள்ளவுள்ளனர். அவர்கள் தொடர்ந்து நீதிபதிகள் பயிற்சிக் கல்லூரியில் இடம்பெறும் பயிற்சியின் பின்னர் வடக்கு - கிழக்கு நீதிமன்றங்களில் நியமிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டில் நீதிவான் நீதிமன்றங்களில் தேக்க நிலையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக நீதிவான்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நீதி அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, நீதிச் சேவை ஆணைக்குழுவிடம் பரிந்துரையை முன்வைத்திருந்தார். அதனடிப்படையிலேயே புதிய நியமனங்களை தலைமை நீதியரசர் தலைமையிலான நீதிச் சேவை ஆணைக்குழு வழங்கியுள்ளது.

(ம)


## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 24.08.1956 | உதிர்வு 14.08.2021

கடந்த 14.08.2021 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

**பரதராஜா பவானந்தன்**

அன்னாரின் 90ஆம் நாளான இன்று அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உம் அன்பை தோற்கடிக்கும்
மற்றொரு அன்பை இவ்வுலகில்
யாரும் தரப்போவது
இல்லை உம்மைத்தவிர....

பிரிவால் துயரும்
குடும்பத்தினர்
இல. 88, D8 உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

(CR35878) 3/6)


# கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் கைது

கொழும்பு, நவ.14

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அல்வாய் பகுதியில், கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறை, அல்வாய் வடக்கு அம்மன் கோவில் பகுதியில் கசிப்பை குறித்த பெண் உடைமையில் வைத்துள்ளார் என்று கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பை மீட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. கசிப்பைக் கையிருப்பில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 34 வயதான பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(எ-125)


## GOVERNMENT OF DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA
## DISTRICT SECRETARIAT, MULLAITIVU.
## PROCUREMENT NOTICE FOR SERVICES - 2022

The Chairman, Departmental Procurement Committee, District Secretariat, Mullaitivu invites Sealed Bids from eligible and qualified Bidders for the Supply of Under Mentioned

**Service for One year period - 2022**

| Details of Services | Bid Security |
|---|---|
| 1. Security Service for District Secretariat. | 60,000.00 |
| 2. Cleaning Service for District Secretariat. | |
| 3. Vehicle Cleaning Service for District Secretariat. | |
| 4. Elevator Maintenance and Service at District Secretariat Building. | |
| 5. Canteen Service for District Secretariat - 2022 | Not Applicable |

01. The complete set of Bidding Documents in English Language could be purchased on the submission of a written application to the Procurement unit at District Secretariat, Mullaitivu from **9.00 A.M.** to 15.00hrs on normal working days from **15th of November 2021 to 29th of November 2021** by producing the receipt for the payment of non-refundable fee of Rs. 1000.00 made to the Shroff, in this office. The method of payment should be by cash.

02. To be eligible for contract award, the successful bidder shall not have been black listed and shall be registered in the field of particular Service, valid until the date of closing of the bid. Further the registration should be valid at the date of award.

03. All bidding documents should be accompanied by a Bid Security for relevant amount above mentioned obtained from a recognized Bank approved by the Central Bank of Sri Lanka in favor of the District Secretary, Mullaitivu and valid up to **28 days** from the date of closing the Bids.

04. The amount of performance security is 5% of the initial contract price and shall be valid till 28 days beyond the contract period. Performance security shall be unconditional bank guarantee, and shall be released 28 days after the actual completion of contract date.

05. The reference should be clearly mentioned on the top left hand corner of the envelope as "---- Service for -2022"

06. Seal bids (Original & Duplicate) shall be sent by registered post addressed to the "Chairman, Departmental Procurement Committee, District Secretariat, Mullaitivu" and be delivered on or before 15.00hrs on 30th of November 2021 and will be opened same time immediately in the presence of the Bidders or their Representatives.

07. Further details can be clarified by contacting to the Telephone no. **021 229 0036**.

**Mr.K.Vimalanathan,**
**Chairman,**
**Departmental Procurement Committee,**
**District Secretariat,**
**Mullaitivu.**

(cr.35873(2.6)



## மணமகன் தேவை

யாழ் மாநகரசபைக்குள் சொந்தவீட்டில் வசிக்கும் 26 வயதும் 5 அடி உயரமான உயர் கௌரவ கிறிஸ்தவ குடும்பத்தைச் சேர்ந்த நிரந்தர அரசாங்க ஆங்கில ஆசிரியராக தொழில்புரியும் அழகிய மணமகளுக்கு பெற்றோர் பொருத்தமான உயர் தொழில் புரியும் அல்லது ஆசிரியரை கிறிஸ்தவ மற்றும் கிறிஸ்தவ சபைகளில் இருந்து எதிர்பார்க்கின்றனர். (CS 18027) (3/6)

**071 108 3497, 070 505 6243**

## காணி விற்பனை

யாழ்ப்பாணம் நல்லூர் செட்டித் தெரு வீதியில் வரிமதிப்பு எண் 10 கொண்டதும் விஸ்தீரணம் நில.பர 01 1/2 யும் வீடும் விற்பனைக்கு உண்டு.

**076 702 3565** (CS 18029) 1-6

## பெண் உதவியாளர் தேவை

யாழ் நகரில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றிற்கு பெண் உதவியாளர் தேவைப்படுகின்றார். சரளமாக ஆங்கிலம் எழுத பேச மற்றும் கணினி தேர்ச்சி பெற்றவராகவும் இருத்தல் வேண்டும் உடனடியாக விண்ணப்பிக்கவும்.

**Email: Senthil jaffna22@gmail.com** மற்றும் **076 429 3040** **Whatsapp** மூலம் தொடர்புகொள்ளவும். வயது 30 உட்பட்டவராக இருத்தல் வேண்டும். (CS 41074)3/6)

## தற்பொழுது நெல்லியடியிலும் எமது கிளை ஆரம்பமாகின்றது

புதிய கிளை ஆரம்பத்தினை முன்னிட்டு 15 மற்றும் 16ம் திகதிகளில் பதிவு செய்யும் மாணவர்களுக்கு 20% கட்டணக் கழிவு வழங்கப்படும்

IELTS | IELTS life Skill A1

நெதர்லாந்து மொழிப் பாடநெறி | Diploma in Spoken English

பிரான்ஸ் மொழிப் பாடநெறி | ஜேர்மன், சுவிஸ் மொழிப் பாடநெறி

சிறுவர்களுக்கான கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தின் ஆங்கில பாடநெறிகள் (YLE, KET, PET)

BRITISH COLLEGE of Education

More information 0777-695605

Jaffna Rd, Navalarmadam, Nelliyadi. Tel : 021-7284200

Colombo, Kandy, Galle, Jaffna, Vavuniya, Kilinochchi

## விற்பனைக்கும் வாடகைக்கும்

யாழ் நகருக்கு மிக அண்மிய சூழலில் வண்ணார்பண்ணை வீதியில் நிலப்பரப்பு 3 குளி ஆறரையும் கொண்ட வீடு விற்பனைக்கும் / மேல் மாடி வீடு தனியாக வாடகைக்கும் உண்டு 2 படுக்கை அறை 1Hall Bath room மாத வாடகை 12,000 ஒரு வருடமுற்பணம் தேவை தொடர்புகளுக்கு (CS 17961)(3.6)

**தொடர்பு: 077931 1889 / 076 883 3713**

**அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான 1ஆவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்கள்**

**Online Class**

**கணினிப்பரீட்சை**

வகுப்புக்களில் இணைந்து கொள்ள **077 248 7470** என்ற இலக்கத்திற்கு பெயர், Email முகவரியினை whatsapp or SMS செய்க.

(CS 41067) (3/6)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தில் உத்தரம் 3ஆம் பாதம் கன்னிராசி செவ்வாய் தோஷம் அற்ற 1989 இல் பிறந்த, கொழும்பில் படித்து பிரபல IT கம்பனியில் Senior Software Engineer ஆக வேலை செய்து தற்போது அதே கம்பனியில் USA இல் Professinal Visa இல் வேலை பார்க்கும் எந்த கெட்ட பழக்கமும் அற்ற மணமகனுக்கு படித்த தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

(ACO 17639)(3.6) **075 329 3709**

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச்சேர்ந்த 1991 இல் பிறந்த ரோகிணி நட்சத்திரம் 10 இல் சூரியன் செவ்வாய் உடைய Soft Engineer ஆக பணிபுரியும் பட்டதாரி மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை.

(cs.41071) (2.6) **076 537 2060**

## உடல் எடை குறைய வேண்டுமா?

- ◎ எடை கூடுகிறதா?
- ◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
- ◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம் 15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா?➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா? ➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை

**இந்த எண்ணெயைப்பாவித்து பயனடைய**

**உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா**

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

**077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

## PROJECT MANAGER BUILDING CONSTRUCTION

**Civil Engineer having more than 3 years' experience in Building Construction required at a capacity of a Project Manager to take forward an ongoing project on contractual basis for 6 months.**

- **Project site is at Iyakkachchi**
- **Accommodation, if required could be provided.**
- **Ideal Candidate could be offered an attractive package.**

**Please forward your CV to sr@isfindustries.com**

**Heritage Agri Private Limited**
**¾, Rockwood Place**
**Colombo 07.**
**0772 078 455**

(CR 35874) 1-6

## இலங்கையின் முதற்தர இயற்கை குணம் நிறைந்த அழகுசாதன உற்பத்தி நிறுவனத்திற்கு

**1. ஏக விநியோகஸ்தர்கள் (Distributors)**
**2. விற்பனை பிரதிநிதிகள் (Sales Rep's)**

போன்ற பதவி வெற்றிடங்களுக்கு பணியாளர் உடனடியாக சேர்த்துக்கொள்ளப்படுவர்.

- ✓ சிறிய லொறி அல்லது வான் உள்ளவர்கள்.
- ✓ ரூ.1 000 000/= (ரூபா மில்லியன்) வங்கி பிணை வைக்கக்கூடியவர்கள்.
- ✓ களஞ்சிய படுத்தல் வசதிகள் உள்ளவர்கள்.
- ✓ பண கொள்வனவிற்கு விசேட விலைக்கழிவு.


**விநியோகஸ்தர்கள் வெற்றிடம் உள்ள பிரதேசங்கள்**

- ■ யாழ்ப்பாணம் ■ கிளிநொச்சி ■ வவுனியா
- ■ முல்லைத்தீவு ■ மன்னார்

**செனோதா ஆயுள்வேத உற்பத்தி**
**11 B, மியெனபலாவே வத்தை,**
**கண்டி வீதி, ஹொரகஸ்மங்கட, தங்ஓவிட.**

**வேலை நேரத்தில் அழைக்கவும்: 0777 105960 / 035 226 9555**

(CR 35859) 1-6



## அவசர பணத்தேவையா? அல்லது அடகு வைத்த நகைகள் அறுதியாக போகின்றனவா?

எந்தவொரு வங்கியில் அடகு வைத்த நகைகளுக்கு

**பவுண் ஒன்றுக்கு ரூபா.23,000/= இற்கு மேல்**

**70 சத அதி குறைந்த வட்டியில் பெற்றுக்கொள்ளுங்கள்**

உங்கள் தற்போதைய அடகுச்சீட்டினை எமக்கு **0767 888 222** இலக்கத்திற்கு WhatsApp செய்யவும்

ஏராளமான விசேட சலுகைகள்

| | | | |
|---|---|---|---|
| செங்கலடி | 076 6227250 | மட்டக்களப்பு | 076 6227243 |
| சுன்னாகம் | 071 0870689 | ஹட்டன் | 077 8790372 |
| கிளிநொச்சி | 076 6226964 | யாழ்ப்பாணம் | 076 6226942 |
| பருத்தித்துறை | 076 6226980 | முல்லைத்தீவு | 077 1201856 |
| சாவகச்சேரி | 076 6226967 | சம்மாந்துறை | 077 8032233 |
| தலவாக்கலை | 071 0871009 | அக்கறைப்பற்று | 077 7783673 |
| நாவலப்பிட்டி | 071 0870706 | நெல்லியடி | 074 0920357 |
| புதுக்குடியிருப்பு | 076 9914642 | சங்கானை | 074 0920317 |
| கல்முனை | 071 0870663 | பேருவளை | 077 2999934 |
| பூண்டுலோயா | 077 7683889 | மத்துகம | 077 2206413 |
| வாழைச்சேனை | 077 8151938 | ஒட்டுச்சுட்டான் | 074 0929571 |
| ராகலை | 071 0870703 | வவுனியா | 074 0920313 |
| கொழும்பு | 070 2539382 | திகன | 077 8156738 |
| கம்பளை | 071 0870735 | களுத்துறை | 077 6167149 |
| மாத்தளை | 070 2539389 | வெள்ளவத்தை | 071 0870686 |
| கிண்ணியா | 077 1201853 | களுவாஞ்சிகுடி | 077 1201864 |
| மஹியங்கனை | 077 1201862 | உடப்புவ | 077 1201851 |
| கல்பிட்டி | 076 1605803 | வேலணை | 076 9940273 |
| மஸ்கெலியா | 076 0909822 | | |

(ACO 17633) 6

## வேலை வாய்ப்புக்கள் ஹோட்டல் ஓவியா

HOTEL OVIYA

**01.களஞ்சியக் காப்பாளர் (Store Keeper)**

உணவகத்தில் களஞ்சியக்காப்பாளராக வேலைசெய்த அனுபவம் உள்ளவர்கள் தேவை.

**02. தொழில் நுட்பவியலாளர் (Technician)**

Electrical, Plumbing, A/C Repairing, Generator Repairing தொடர்பான தகமையுடையவர்கள் தேவை.

**03. சமையலாளர் (Cook)**

இந்தியா, இலங்கை மற்றும் சைனீஸ் உணவு வகைகள் சமைப்பதில் அனுபவமுள்ளவர்கள் தேவை.

**தொடர்புகளுக்கு:**
**முகாமையாளர் (Manager) – 0773660828**
**Address: 47, Mill Road, Vavuniya,**
**email. hoteloviya@gmail.com**

(CS 00919) (3.6)

## EASY WAY TO CANADA

- Primary Education for Kids between 5 & 17 years
- Both Parents can accompany the Child
- No IELTS or special qualifications

**Skilled & Unskilled Migration to Canada**

- Send your Resume for analysis
- Education above 'A' Levels + 3 years experience
- Age less than 49 years Males / Females

***Analyzed and Interviewed by Canadian Lawyers.***

**Consolidated Academic Lanka (Private) Limited**
**No.22-B, Station Lane, Nugegoda.**

**Tel : +94 112 890 692 Mobile : +94 777 788 732**
**Email : ceo@academiclanka.com / info@academiclanka.com**
(CR 35875) (3/6) **Web : www.academiclanka.lk**

# மரண அறிவித்தல்



## கனகலிங்கம் செங்கமலம் (ராணி)

குப்பிழான் வடக்கினைப் பிறப்பிடமாகவும் விளையாட்டரங்கு வீதி, கல்வியங்காட்டினை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய கனகலிங்கம் செங்கமலம் (ராணி) நேற்றுமுன்தினம் (12.11.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அருளம்மா தம்பதியரின் மூத்த மகளும், கந்தையா - மனோன்மணி தம்பதியரின் மருமகளும், சிவலிங்கம் - கணேசம்மா தம்பதியரின் பெறாமகளும், கனகலிங்கத்தின் (K.k) அன்பு மனைவியும், அமிர்தா, கவிதா, அஜந்தன், நிஷாந்தன் ஆகியோரின் தாயாரும், சந்திரசேகரம் (அப்பன்), காலஞ்சென்றவர்களான சர்வேஸ்வரி (தேவி) ஞானசேகரம் மற்றும் பவிதா ஆகியோரின் சகோதரியும், கணேசலிங்கம் (ராஜன்), கிருஷ்ணகோபால், தர்மி, கவிதா ஆகியோரின் மாமியும், பரமலிங்கம், மகாலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.11.2021) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | |
|---|---|
| கனகலிங்கம் (K.K) | - 001 647 544 2692 |
| அஜந்தன் | - 001 647 608 6794 |
| நிஷாந்தன் | - 001 647 864 7426 |
| கணேசலிங்கம் (இராஜன்) | - 001 416 568 0686 |
| அமிர்தா | - 001 416 274 4135 |
| கவிதா | - 001 647 762 2056 |

தகவல்:
குடும்பத்தினர்.

(cs 41066) (2.6)

# மரண அறிவித்தல்

அன்னையின் மடியில் 19 . 01 . 1953



ஆண்டவன் அடியில் 09 . 11 . 2021

## திருமதி சிவராசா இந்திராதேவி

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் இல.80/05, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவராசா இந்திராதேவி (இந்திரா) கடந்த (09.11.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மாணிக்கம் சிவராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தங்கலிங்கம் - சறோஜினிதேவி மற்றும் ஜெயபாலன் - மனோறஞ்சிதம் (கலா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சியாம் (பிரான்ஸ்), சியாஸ், கமில் (பிரான்ஸ்), மகினன், வினோஜன், ஜனனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு தாயாரும், கனிஸ்ரெலா, ஜெஸ்மிலா, வஜனா (பிரான்ஸ்) கௌரி, நதீபா, திலக் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2021) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் கொட்டடி வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.80/05, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(cs 18017) (2.6)

தகவல்:
பிள்ளைகள் - மருமக்கள்
077 706 6227

# மரண அறிவித்தல்



தோற்றம்
12.03.1949

மறைவு
12.11.2021

## ஜெயமலர் சண்முகநாதன்

'ஜெயகிரி" சங்குவேலி தெற்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயமலர் சண்முகநாதன் (வவா) நேற்று முன்தினம் (12.11.2021) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சங்குவேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்துரை அன்னம் தம்பதிகளின் அன்பு மகளும், சுண்டுக்குளி பாண்டியன்தாழ்வை சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்துரை புஸ்பராசமணி தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சண்முகநாதனின் அன்பு மனைவியும், ஜெறுசி (அபிவிருத்தி உத்தியோகத்தர்) சாருகன் (சனா - சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தகுமாரின் (முகாமையாளர் இலங்கை வங்கி - சங்கானை) மாமியாரும், சஜெறா, சஞ்ஜெனு ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜீவமலர் மற்றும் காலஞ்சென்றவர்களான சிவதாசன், சுகந்திமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், வரதராசலிங்கம், தயாரூபி (கொழும்பு), கமலநாதன் (லண்டன்), காலஞ்சென்ற இந்திராணி (சுண்டுக்குளி) மற்றும் லலிதாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும், ஜீவறேகா (ஆசிரியர்), வரூஜிகா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), வரூஜன் (சுவிஸ்) ஆகியோரின் சித்தியும், சீருதன் (கனடா), சசிதரன் (ஜேர்மனி) ஆகியோரின் அத்தையும், Dr.சுவேதா (லண்டன்), நிஷாந்தன் (Charted Accountant - லண்டன்) ஆகியோரின் பெரியம்மாவும் பரிபூரணத்தின் பெறாமகளும் சிவபாலச்சந்திரன் (கனடா), சிவயோகராசா (லண்டன்), வசந்தா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"ஜெயகிரி"
சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

(CS 40969) (3/6)


தகவல்
குடும்பத்தினர்
077 248 7268

# கண்ணீர் அஞ்சலி

**101 ஆவது அகவையில் கருணாகரன் பாதக்கமலங்களை அடைந்த**
**உரும்பிராய் பரத்தைப்புலம்,**
**ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் கோவில் ஆதீன கர்த்தா**
**சிவாச்சாரியமணி - பிரதிஷ்டாதிலகம் ஈசான சிவாச்சாரியார்**

## சிவஸ்ரீ வைத்தீஸ்வர சபாரத்தினக் குருக்கள்

**அவர்களின் அருளொழுகு தோற்றம்**



**தோற்றம்** 09.05.1921 **மறைவு** 11.11.2021

*"கற்றாரைக் கற்றாரே காமுறுவர்"* என்றவாறாக சிறப்புகளைப் பெற்றவர்.

ஒரு ஊருக்கு பெருமை தருவனவற்றுள் சாலச் சிறந்தது யாதெனில் அங்கு வாழும் வயது முதிர்ந்த சான்றோர்களே தான் என எங்கள் இலக்கியங்கள் அருமையாகப் பேசுகின்றன நல்ல குருவின் வழிகாட்டலே நல் வாழ்விற்கு வழி சமைக்கின்றது. *"அறம் நிரம்பிய அருளுடை அருந்தவர்"* என அருளாளரின் பண்பை எடுத்துக் காட்டுகின்றார் கம்பர். இந்நெறியில் அருளா ளராக வாழ்ந்து உரும்பிராயைப் பெருமைப் படுத்தியவர் எங்கள் குருக்கள் அவர்கள்.

எமது ஆலயங்களிலும், இலங்கையில் பல பிரதேசங்களில் உள்ள ஆலயங்களிலும் கடல் கடந்த பிரதேசங்களில் உள்ள சில ஆலயங்களி லும் அபிஷேகங்கள், பூஜைகள், மஹோற் சவங்கள்,கும்பாபிஷேகங்கள், பலரது திருமணங் கள், பலரது வீட்டுக்கிரஹப்பிரவேசங்கள் மற்றும் பல நிகழ்வுகளில் அருளொழுகு தோற்றத்துடன் குருவாக செயற்பட்டு மக்களது மனங்களில் நிலைத்து பாராட்டுக்களைப் பெற்ற எமது குருக் கள் அவர்கள் கருணாகரப் பிள்ளையாரது பாதார விந்தங்களைச் சென்றடைந்து விட்டார். பிரிவுத்து யரில் மூழ்கியுள்ள அவரது குடும்பத்தவர்களுக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்மா கருணாகரன் பாதத்தில் சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

- **உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோவில் திருப்பணிச் சபையினர்**
- **உரும்பிராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோவில் பரிபாலன சபையினர்**
- **உரும்பிராய் பர்வதவர்த்தினி அம்மன் கோவில் பரிபாலன சபையினர்**
- **உரும்பிராய் ஒடையம்பதி கற்பகவிநாயகர் கோவில் பரிபாலன சபையினர்**
- **உரும்பிராய் பழைய காட்டு வைரவர் கோவில் பரிபாலகர்கள்**
- **உரும்பிராய் ஞான வைரவர் கோவில் பரிபாலன சபையினர்**
- **அடியார்கள்**

(cs.18018) (2.6).

## மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு

TVS Scooty Pep Plus வகையைச் சேர்ந்த (UX மற்றும் XN) இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் கள் விற்பனைக்கு உண்டு.

T.P : 075 0906 486 (CS 18023) (3.6)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 45 ரூபா

077 334 1281 (m 17810) (2.6)

## A/L இணைந்த கணிதம்

2021, 2022, 2023 மாணவர்களுக்கு தனியாகவோ அல்லது குழுவாகவோ வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்

(cs 41069) 2×6) 074 111 0790

## வீடு வாடகைக்கு / விற்பனைக்கு

உங்கள் வீடு / காணி விற்க or வாடகைக்கு கொடுக்க இருந்தால் அழைக்கவும், சிறந்த முறையில் தீர்த்து தரப்படும்.

**RR Eatste Agent**

077 473 7737 / 070 374 4444 (CR35880) (3.6)

## வகுப்புக்கள்

ஆங்கில வகுப்புக்கள் 6 - 12 வரையான வகுப்புக்களுக்கு பிரத்தியேகமாக வழங்கப்படும். தனிப்பட்ட முறையில் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். (CS 41053)(3.6)

193, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
076 524 4793
076 826 0354

## மணமகள் தேவை

யாழ் மாவட்டத்தை சொந்த இடமாக கொண்ட 1984, பரணி நட்சத்திரம், மேட இராசியில் பிறந்த (கி.பா.57) சுயதொழில் Business புரியும் மணமகனுக்கு (உயரம் : 6 அடி) பொருத்த மான மணமகள் தேவை. (CS 18006A)(3.6)

தொடர்பு: 077 851 7575

## வேலையாட்கள் தேவை

மொரட்டுவையிலுள்ள மரத் தொழிற் சாலைக்கு தச்சர்கள் மற்றும் பெயின்ட்ர்கள் (Carpenter / Painters) தேவை. (ACO 17638)(3.6)

தொடர்பு: 076 909 4497

## பெண் உதவியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள வயோதிப் பெண்ணை பராமரிப்பதற்கு பெண் உதவியாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(cs 41065) (2.6) 077 345 0039

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

யாழ் கோண்டாவில் கிழக்கு 4 3/4 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

071 034 6170, 076 374 6285
077 190 9253 (CS 41070)(3.6)

## வீடு வாடகைக்கு

உரும்பிராய் சந்தியில் இருந்து மருதனார்மடம் செல்லும் வீதியில் 1km தூரத்தில் ஞான சம்பந்தர் வீதியில் அமைந்துள்ள வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். (தரகர் தேவை யில்லை) பார்வையிடும் நேரம் ஞாயிறு பிற்பகல் 2.00 மணிக்குப் பின் (CS 41060)(3.6)

தொடர்பு: 076 248 3404

## மணமகள் தேவை

1988 இல் பிறந்த யாழ் இந்து கௌரவ குடும்பம், மேடராசி, அச்சுவினி நட்சத் திரம், கிரகபாவம் 15 உள்ள, அவுஸ் ரேலியா நாட்டு PR உடைய, அங்கு கணக்காளராக பணியாற்றும் மண மகனுக்கு பட்டதாரி மணமகளை பெற் றோர் எதிர்பார்க்கின்றனர் (CS 41051) (3/6)

077 196 8659

## வீட்டுப் பணிப் பெண் தேவை

வயோதிபப் பெண் ஒருவரை பராமரிப்பதற்கு வீட்டுப் பணிப் பெண் தேவை.
**சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.**
**வயதெல்லை 35 – 55 இற்குட்பட்ட வர்கள் விரும்பத்தக்கது.** (CS 410046) (3/6)

தொடர்பு : 077 154 3464

## பணியாளர் தேவை

யாழ் நகரில் உள்ள வியாபார நிறுவனம் ஒன்றிற்கு விற்பனையாளர்கள் தேவை.

தொடர்பு: 0777 077 193 (CR 5907) (1/6)

## தேவை

பில்கிளாக், பொதியிடல், உதவியாளர், மில் வேலையில் அனுப வம் உள்ளவர் என்பவற்றிற்கு ஆண், பெண் ஊழியர் தேவை.
**தொடர்பு: பிருந்தா மில் 179, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.** Tele: 077 174 6101 (CS 17964) (1/6)

## தேவை

பழுது அடைந்த கம்பியூட்டர், லப்டப், பிரிண்டர் (Computer, Laptop, Printer) ஆகியவை உங்கள் இடத்திற்கே வந்து நல்ல விலைக்கு வாங்கப்படும்.

தொடர்பு: 077 397 3166 (CS 18045) 1/6

## 2ஆம் மொழி சிங்கள வகுப்புக்கள்

தரம் : 06-11 வரையான மாணவர்களுக்கு 2ஆம் மொழி சிங்கள வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
**இடம்:** இலங்கைவேந்தன் திருமண மண்டபத்திற்கு அருகாமை.

தொடர்பு: 077 990 6867, 077 214 0220 (CS 18028) 1/6

## வேலையாட்கள் தேவை

ஈச்சமோட்டையில் இயங்கும் தயாரிப்பு நிறுவனம் ஒன்றிற்கு வேலையாட்கள் (பெண் பிள்ளைகள்) தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (CS 18024)(3.6)

077 312 6909 யாழ்ப்பாணம்

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1977 உத்தி ரட்டாதி கி.பா.17, சொந்தத் தொழில் செய்யும் மணமகனிற்கு மணமகள் தேவை.
நேரடித் தொடர்பிற்கு (CS 41075)(3.6)

தொடர்பு: 076 449 6275

## பனைமரம் விற்பனைக்கு

பாவித்த - வீட்டுக்குரிய பனை மரங்கள் விற்பனைக்குண்டு. (CS 41055)(3.6)

தொடர்பு 021 205 4218

## மணமகன் தேவை

யாழ் மாவட்டத்தை சொந்த இடமாக கொண்ட 1993, பூசம் நட்சத்திரம், கடக இராசியில் பிறந்த (கி.பா.60) சுயதொழில் புரியும் மணமகளுக்கு (உயரம் : 5 அடி, 4 அங்குலம்) பொருத்தமான மணமகன் தேவை. (CS 18006B)(3.6)

தொடர்பு: 077 851 7575

## பணிப்பெண்தேவை

யாழ் நகரில் வீடொன்றில் தங்கியிருந்து பணிபுரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை. (CS 18009)(3.6)

தொடர்பு: 077 410 2724

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தில் 1985இல் பிறந்த லக் - சூரிய செவ்வாய் பாவம் 38 1/2 மூல நட்சத்திரம் 3ஆம் பாதம் நல்லூரைச் சேர்ந்த மணமகனுக்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர் பார்க்கின் றனர். (CS 41050)(3.6)

தொடர்பு: 077 284 2943

## உடனடி வேலைவாய்ப்பு

அரச அங்கீகாரம் பெற்ற
**Pvt (LTD) Company** யில் பல வகையான வேலைகள் உள்ளன.
**முகாமைத்துவ உதவியாளர், அலுவலக உதவியாளர்** மற்றும் **பல வேலைகள்** உள்ளன.முந்தும் 15 பேருக்கு முன்னுரிமை

தொடர்பு: jobsbank04@gmail.com
076 674 3807
077 828 1092
(cs 40964) (2.6)

## வேலைக்கு ஆள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் பேக்கரி ஒன்றிற்கு பணிபுரிய விற்பனை உதவியாளர் மற்றும் ஓரளவு அனுபவ மிக்க பாண் உற்பத்தியாளர்களைத் தேடுகின்றோம்.
**தகுதிக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்.**

தொடர்பு
077 785 8317 / 077 363 6629 (CS 41045) (3.6)

## வேலை வாய்ப்பு

தனியார் ஆலுவலகம் ஒன்றில் பணி புரிவதற்கு ஆண், பெண் வேலை ஆட்கள் தேவை. CS 18025)(3.6)

077 830 8360, 076 776 8444

## மணமகன் தேவை

யாழ் கௌரவ குடும்ப, 25 வயது, பல் கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு பயிலும் அழகிய பெண்ணிற்கு உயர் அரச தொழில் புரியும் கத்தோலிக்க மண மகனை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகட்கு (தொலைபேசி+Viber)
0774 860 469 (CS 18034) 1-6

## வேலையாட்கள் தேவை

01. மிக்சர் வகைகள், முறுக்கு வகைகள், இனிப்பு வகைகள், செய்யக்கூடிய ஆட்கள் தேவை. (நல்ல அனுபவம் உள்ள ஆண் அல்லது பெண்)
02. பொதி செய்யக்கூடிய ஆட்கள் தேவை. (பெண்கள்)
03. இவை அனைத்தையும் மேற்பார்வை செய்யக் கூடிய பெண் தேவை. (நல்ல அனுபவம் உள்ள பெண்)

**தொடர்பு கொள்ளவேண்டிய இலக்கம்**

075 795 6507 (CS 18026)(3.6)

## சமையல் உதவியாளர் தேவை

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் இயங்கும் கப்றிஸ் **(Kabris) Hotel** க்கு சுறுசுறுப்பாக வேலை செய்யக் கூடிய அனுபவம் உள்ள சமையல் உதவியாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

T.P:077 343 8373,076 978 3606 (CS 18044) 1-6

## ஹோட்டல் வேலைக்கு ஆள் தேவை

Garments சந்தி, திருமுறுகண்டி யில் அமைந்துள்ள சைவ/அசைவ உணவகத்திற்கு றொட்டி, Rice, சமையல், supply மற்றும் அனுபவ மிக்க Cashier (Computer அறிவு உள்ளவர்கள்) விண்ணப்பிக்கவும்.

தொடர்புகளுக்கு:
071 010 2525 / 071 010 4545 (CS 18040)1-6

# மக்கள் ஒன்றுகூடுவதால் கொரோனா மீளப் பரவும்

நாட்டில் நடைமுறையில் இருந்த பய ணக்கட்டுப்பாடு மற்றும் சுகாதாரப்பாதுகாப்பு வழிகாட்டல்கள் தளர்த்தப்பட்டதன் பின்னரான காலப்ப குதியில் கொரோனா வைரஸ் தொற்றா ளர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக் கின்றது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் மக்கள் பெருமளவில் ஒன்றுகூடுவதற்கு வாய்ப்பேற்படுத்தும் போராட்டங்களால் தொற்றுப்பரவல் அச் சுறுத்தல் மேலும் அதிகரிக்கும்.

ஆகவே போராட்டங்கள் மற்றும் தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபடும்போது உரிய சுகாதாரப்பாது காப்பு வழிகாட்டல் கள் முழுமையாகப் பின்பற்றப்படு வது மிகவும் அவசியமாகும்.

இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயற்குழு மற்றும் ஊடகக் குழு உறுப்பினர் மருத்துவ நிபுணர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

அரசுக்கு எதிராக தொழிற்சங்கங்கள் மற்றும் பல்வேறு துறையினரால் முன் னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்கள், மக் கள் போராட்டங்களின் எண்ணிக்கையும் நாளுக்குநாள் அதிகரித்துவருகின்றது. கொரோனா வைரஸ் பரவல் நெருக்க டிக்கு மத்தியில் இவ்வாறான போராட்டங் களை முன்னெடுப்பதனால் ஏற்படக்கூ டிய தாக்கங்கள் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித் தார். (எ-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம்
07 . 06 . 1932



மறைவு
13 . 11 . 2021

### வல்லிபுரம் இலட்சுமி

யாழ். உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் இலட்சுமி நேற்று (13.11.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தை சின்னன் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து சீதேவி தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற வைரமுத்து வல்லிபுரம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னம்மா மற்றும் குணேஸ்வரி, பரமேஸ்வரி, சரோஜா ஆகியோரின் அன்பு சகோதரியும், நாராணசிங்கம், துரைராசா, கோபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனியும், நடராசா, காலஞ்சென்ற செல்வராசா, துரைராசா, ஜெயராசா, இராசகுமார் (சுவிஸ்), வசந்தகுமாரி ஆகியோரின் அன்பு தாயாரும், சின்னமணி, நளினி (சுவிஸ்), றோசினி, செல்வநாயகி, நிகிலா (சுவிஸ்), காலஞ்சென்ற செல குமார் ஆகியோரின் மாமியாரும், றோஜினி (லண்டன்), நிஷாந்தினி, லோஜிதன் (பிரான்ஸ்) சுஜாத்தன் (சுவிஸ்), லோகினி, கஜந்தன் (சுவிஸ்), நிலோஜினி (சுவிஸ்), கேதீஸ்வரன் (சுவிஸ்) காலஞ்சென்ற கிருத்திகா மற்றும் யோகீஸ்வரன், பிரசாந் (ஜேர்மனி), சஜ்ஜீவன் (பிரான்ஸ்) மிலக்ஷனா, சஜீபன் (பிரான்ஸ்), யதுர்ஷனா, (சுவேதன், சுவேதா, சுகிந்தன் - சுவிஸ்) தர்ஷனா, கோகுலன், உஷா ஆகியோரின் பேர்த்தியும், (அஸ்மிதா, அன்சிகன் - லண்டன் சுஜானி, சபின் (சுவிஸ்), திபிஸ்கா, திஸ்விகா (பிரகதி, நிலாவினி - சுவிஸ்), கருணிகன், றியா (சுவிஸ்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11. மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தனக்கிரியைக்காக உரும்பி வடக்கு இருளன்மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளு கேட்டுக் கொள்கின்றோம்.

**உரும்பிராய் வடக்கு, மடத்தடி.**
076 9085626
076 981 2419
**தகவல்**
**குடும்பத்தினர்**

(CS 18031) (3/6)

*மூச்சுத்திணறலால்...*

தப்பட்டுள்ளது. வட்டுக்கோட்டை, அராலி மேற்கைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான தி.ஜெயரஞ்சன் (வயது- 33) நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

அவருக்கு கடந்த சில நாள்களாக தடிமன் மற்றும் காய்ச்சல் காரணமாக உடல்நிலை பாதிக்கப்பட்டது. அவர் வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக சங்கானை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கு முன்னெடுக்கப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் கொரோனாத் தொற்று இல்லை என வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் காலை ஏற்பட்ட மூச்சுத் திணறல் காரணமாக அவர் வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். அவரது சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று ஒப்படைக்கப்பட்டது. சடலத்தில் பெறப்பட்ட மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு அனுப்பப்பட்டிருந்த நிலையில் அவருக்கு கொரோனாத் தொற்று உள்ளதாக நேற்று அறிக்கையிடப்பட்டுள்ளது. (ஒ-10)

## பெண் பணியாளர் தேவை

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் அமைந்-துள்ள சுப்பர் மார்க்கட் ஒன்றிற்கு பணிபுரிவதற்கு பெண் பிள்ளைகள் எதிர்பார்க்கப்படுகின்றது.

**077 9637 483** (CS 18033) 1-6

## விற்பனைக்கு/வாடகைக்கு உண்டு

நிறுவனங்களுக்கு ஏற்ற உரிய வசதிகளுடன் இணைந்த குளியலறை மற்றும் குளிர்சாதன வசதி உடைய கட்டடம் வாடகைக்கு உள்ளது. அத்துடன் சிறிய குடும்பம் மற்றும் தனி நபர்களுக்கு ஏற்ற அறைகள் வாடகைக்கு உண்டு. கட்டில் மெத்தை அத்துடன் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு.

**0777 242427, 0777 412713** (CS 18038) 1-6

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், அரச உயர் பதவியிலுள்ளவர்கள், அரச உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், தனியார் துறையினர் வெளிநாட்டு மண மக்கள் ஏராளமாக உள்ளனர்.

நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்த மாக உடன் தரப்படும்.

**264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு.**

**021 222 9306, 077 138 7596, 071 999 9306** (CS 18020) 1-6

## விற்பனைக்கு

யாழ். பிறவுண் வீதியில் 6 பரப்பு காணித்துண்டும், 4 பரப்பு காணித்துண்டும், 5 பரப்பு காணித்துண்டும், யாழ். நல்லூர் கோயிலுக்கு அண்மையில் 4 பரப்பு காணியும், 6 பரப்புக் காணியும், 10 பரப்பு காணித்துண்டும், யாழ். ஆனைப் பந்தி சந்திக்கு அருகில் 3 பரப்பு காணியும், 6 பரப்பு காணி துண்டும், யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக 15 அடி அகலமும் 3 மாடி கட்டடம், யாழ். ஆஸ்பத்திரி வீதியில் 15 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட தனிக்கடையும் விற்பனைக்கு உண்டு.

**0777 232 535** (CS 18021) 1-6

*மாவீரர் நாளின்...*

பதிலாக 20ஆம் திகதி நினைவேந்தல் செய்யவும் என்று நாம் கூறவில்லை. ஆலயங்களில் வழி பாடு செய்யுங்கள் என்றுதான் கூறினோம். 20ஆம் திகதி கத்ததோலிக்கர்கள் நினைவேந்தல் செய்வதால் நவம்பர் 27ஆம் திகதி வருடா வருடம் நடைபெறும் விடயங்கள் எந்த வகையிலும் மழுங்கடிக்கப்படாது. அந்த நோக்கம் எமக்கு இல்லை. இவ்வாறு திருகோணமலை மறைமா வட்ட ஆயர் நோயல் இமானுவேல், “உதயன்” பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நவம்பர் மாதம் இறந்தவர்களை நினைவுகூரும் மாதமாக எமது திருச்சபையில் உள்ளது. அதன டிப்படையில் இலங்கையில் இடம்பெற்ற உள் நாட்டு போரால் இறந்து போனவர்களையும் அதன் விளைவாக பாதிக்கப்பட்டவர்களையும் நினைவுகூர்ந்து இறைவேண்டல் புரிய வடக்கு கிழக்கு மாகாண கத்தோலிக்க ஆயர்களாகிய நாம், நவம்பர் மாதம் மூன்றாம் சனிக்கிழமையை தீர்மானித்தோம்.

வடக்கு- கிழக்கு மாகாண கத்தோலிக்க ஆயர் பேரவை தற்போது தான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனூடாக தமிழ் மக்களின் பிரச்சினைகளை எடுத்துரைத்து வருகிறோம். மேற்படி இறை வேண்டலையும் அதனடிப் படையில் அறிவித்திருந்தோம். இந்தமுறை 20ஆம் திகதி அந்த நினைவேந்தல் நாள் வருகின்றது.

இந்த விடயம் குறித்து பல விமர்சனங்கள் எழுந்துள் ளன. எம்முடன் இதைப்பற்றி கலந்துரையாடாமல் தாமே முடிவெடுத்து பலர் கருத்துக்கள் தெரிவிப்பது வருத்தமளிக்கிறது.

கத்தோலிக்கர்களுக்கு மட்டுமே நாம் அழைப்பு விடுத் தோம். விரும்பினால் ஏனைய மதத்தினரும் இணைந் துகொள்ள முடியும் எனத் தெரிவித்திருந்தோம்.

நவம்பர் மாதம் 21ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரைக்குமான நினைவேந்தல் நிகழ்வு தேசிய மட்டத்தில் நடைபெறும் நிகழ்வு. அதை யாரும் தடுக்க முடியாது. அதை நிறுத்துவதற்கோ மாற்றுவதற்கோ எமக்கு என்ன அதிகாரம் உள்ளது? எந்த வகையான அதிகாரமும் எமக்கு இல்லை. அதில் நாம் தலையிடவும் இல்லை. அதைத் தவிர்த்து இதைச் செய்யுங்கள் என்றும் மக்க ளுக்கு நாம் சொல்லவில்லை. அவ்வாறான சிந்தனையும் எமக்கு இல்லை.

நவம்பர் 21 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி நடை பெறும் வழமையான நிகழ்வு நடந்தே தீரும்.

மே மாதம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை குழப்பு வதாகவும் விமர்சித்தார்கள். அது அனைவராலும் முடிவு செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவு தினம். அதை மாற்ற நாம் சிந்திக்கவே இல்லை. அதேபோல் நவம்பர் 21 தொடக்கம் 27 வரையான நாள் தேசியத்தலைவரால் முடிவுசெய்யப்பட்டு. அறிவிக்கப்பட்ட தினம். அதை நாம் ஏன் மாற்ற வேண்டும்?

ஆயர் பேரவை தமிழ் மக்கள் சார்ந்து செயற்படுகிறது. மக்களுக்காகத்தான் குரல் கொடுக்கிறோம். கிறிஸ்தவர்கள் என வரும்போது பழிவாங்கும் எண்ணம் எமக்கு இல்லை. ஒரு மனிதர் தமது தவறை உணர்ந்து செயற்படும் போது அதற்கு ஒப்புரவாகி சமாதானமாகத் தான் போக வேண்டும். ஆனால் சிலருடைய கருத்து- சிந்தனை எல்லாம் எப்போதும் பழிவாங்க வேண்டும் என்பது தான். அதற்கு நாங்களும் உடந்தையாக இருக்க வேண்டும், இணங்கிப் போக வேண்டும், அவர்களின் சிந்தனையின் கீழ் நாம் செல்ல வேண்டும் என எதிர்பார்க் கிறார்கள்.

அதன்படி செயற்பட எம்மால் முடியாது. கிறிஸ்தவ விழு மியங்கள், பண்புகள் உள்ளன. அதை மீறினால் கத் தோலிக்க ஆயர்கள் என்று சொல்வதில் அர்த்தம் இல்லை. அந்தப் பின்னணியில்தான் நாம் 20 ஆம் திகதியை முடிவு செய்தோம். கத்தோலிக்கர்களுக்கு மட்டும் அழைப்பு விடுத்தோம்- என்றார். (ஒ-7)

## மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 10 . 1950

மறைவு 13 . 11 . 2021

### திருமதி சிவநாயகம் வசந்தி

உரும்பிராய் வடக்கு உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் மூளாய் மத்தி சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவநாயகம் வசந்தி அவர்கள் நேற்று (13.11.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் அன்னம்மா தம்பதிகளின் ஏக புதல்வியும் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணர் இராசம்மா தம்பதிகளின் மருமகளும், சிவநாயகம் அவர்களின் அன்பு மனைவியும் ஸ்ரீ.சிவந்தி (ஆசிரியர் யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்) சி. நிரஞ்சன் (சிவாஸ் மில் மூளாய்) மோ.நிரஞ்சனா (எழுதுநர் மாவட்ட நீதவான் நீதிமன்றம் மல்லாகம்), தி.நிர்மலா (ஆசிரியர் யா/ வட்டு இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸ்ரீமதன் (ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), நி.தாட்சாயணி (ஆசிரியர், யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி), மோகனதாஸ் (அபிவிருத்தி உத்தியோகத்தர், ஓய்வூதியம், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்), திரோணன் (ஆசிரியர், இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயம்), ஆகியோரின் அன்பு மாமியும், நித்தியஸ்ரீ, வாமணன், லாவண்ணன், யோகஸ்ரீ ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2021) ஞாயிற்றுக்கிழமை அவரது மூளாய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை . உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்

(CS 18032) (3/6)

## வாளுடன் கைது

யாழ்ப்பாணம், நவ. 14

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அராலி மத்தியில் குடும்பத் தலைவர் வாளுடன் கைது செய்யப் பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித் தனர்.

வட்டுக்கோட்டை பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ-27)

# கொரோனா என அடக்கினால் பணிப்புறக்கணிப்பே வழி!

## சுகாதாரத் தொழில் நிபுணர் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு, நவ.14**

**கொரோனாச் சட்டத்தை, கொரோனாக் கட்டுப்பாடு என்ற பெயரில் அதிகம் பயன்படுத்த ஆரம்பித்தால், ஆர்ப்பாட்டங்களுக்குப் பதிலாகப்பணிப் புறக்கணிப்புக்குச் செல்ல நேரிடும் என்று சுகாதாரத் தொழில் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் எச்சரித்தார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரி வித்தபோதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:-

அரச சேவையின் செய றிறனை அதிகரிப்பது சம் பந்தமாக வரவு-செலவுத் திட்டத்துக்குள் முன்வைக் கப்பட்டுள்ள சில யோச னைகள் முரணானவை. ஓய்வுபெறும் வயது 65 வரை அதிகரிக்கப்பட்டுள் ளதன் மூலம் வழமை யாக ஓய்வுபெறுவோ ருக்கு 10 ஆண்டுகளுக் கான ஓய்வூதியம் கிடைக் காது போகும் அடையா ளங்கள் தெண்படுகின்றன. அரச சேவையின் ஊதிய முரண்பாடுகள், சுகாதார ஊழியர்களின் ஊதிய முரண்பாடுகள் சம்பந்த மாக வரவு செலவுத் திட்



டத்தில் தீர்வுகள் இல்லை. ரணுக்கோவின் அரச ஊழியர்களுக்கான ஊதிய பரிந்துரைகள் மூடி மறைக்கப்பட்டுள் ளன- என்றார். (எ-இ)

### மாவீரர் நாளன்று...

இது தொடர்பில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் இணைந்து அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 27 திகதி வரையான காலப்பகுதி தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட வரலாற்றில் முக்கியமான வாரமாகும். அக்காலப்பகுதி தமிழ் மக்களின் விடிவுக்காக தம்மை ஆகுதியாக்கிய மாவீரச் செல்வங்களை நினைவு கூரும் நாட்களாகும். இந்நாட்கள் தமிழ்த் தேசிய அரசியலிலிருந்து மறைக்கப்படமுடியாததும், திசைதிருப்பப்பட முடியாததுமாக கடைப்பிடிக்கப்படவேண்டிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாட்களாகும். இனவிடுதலை நோக்கிய, ஆயுதப் போராட்டம் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டதன் பின்னணியையும், தமிழ் மக்கள் ஆயுதமேந்தியதன் நியாயத்தன்மைகளையும், அதிலிருந்த தியாகங்களையும், அடுத்த சந்ததியினரும் தேடிப்பார்க்கக்கூடியவாறு வரலாற்றுக் கடத்திகளாகவும் இருக்கக் கூடிய நாட்களாகும்.

இந்நாட்கள் இறந்தவர்களை நினைவுகூருகின்ற சாதாரண நாட்களுமல்ல, தமிழின விடுதலைக்காக வித்தாகிப் போன வீரமறவர்கள், தமிழர் தாயகக் கனவோடு துயில்கொள்வதாகக் கருதி, தமிழினத்தின் விடுதலை இலக்கு திசை மாறாமல் செல்ல, தமிழ்த் தேச மக்கள் சபதம் செய்யும், தமிழ்த் தேசியப் போராட்டத்தின் ஆணிவேரான நாட்களாகும்.

எனவே இறந்தவர்களை நினைவு கூருவது என்கின்ற சொல்லாடல் ஊடாகவும், வேறுநாட்களைக் குறிப்பிட்டும், சாதாரண மரணங்களோடு, தமிழின விடுதலைக்காக வித்தாகிப் போனவர்களின் தியாகங்களையும் இணைத்து, வடக்கு- கிழக்கு கத்தோலிக்க ஆயர்கள் மன்றம் மதிப்பீடு செய்து பொதுமைப்படுத்துவதென்பது, மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள், தமிழ்த் தேசிய தாகம் கொண்டவர்களிடத்தில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்திய செயற்பாடாக அமைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

தமிழ்த் தேசிய அரசியலுக்காக தம்மைத் தியாகம் செய்த ஆயர்கள், குருக்களை உருவாக்கித் தந்த கத்தோலிக்க திருச்சபை இறந்தவர்களை நினைவு கூரும் நாள்களாக நவம்பர் 20ஆம் திகதியை பொதுமைப்படுத்தும் வகையில் மேற்கொண்ட முடிவு ஆரோக்கியமானதல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

கெடுபிடிகள் நிறைந்த சிறிலங்கா அரச இயந்திரத்தால், மாவீரர்களை நினைவு கூர்வதற்கு பல்வேறு வழிகளிலும் தடைகளை ஏற்படுத்த முற்படும் வேளையில், தமிழின தாயக விடுதலைக்காக வித்தாகிப்போன மாவீரர்களின் வாரத்தை, நவம்பர் 21 - 27 திகதிவரை நினைவிருத்தும் வகையிலும், வடக்கு- கிழக்குத் தழிழர் தாயகமெங்கும் நவம்பர் 27ஆம் திகதி மாலை 6.05 மணிக்கு அனைத்து ஆலயங்களிலும் மணியொலி எழுப்பி வரலாற்றைக் கடத்துவதுமே வரவேற்கத்தக்க விடயமாக அமையும் என்பதையும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினராகிய நாம் வடக்கு கிழக்கு ஆயர் மன்றத்தினரிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

எனவே ஆயர்மன்றமானது தமது முடிவை மறுபரிசீலனைசெய்து அறிவித்தலை மீளப்பெற்றுக்கொள்ள வேண்டும் என்று உரிமையுடனும் பணிவன்புடனும் கேட்டுக்கொள்கின்றோம்- என்றுள்ளது. (ஒ-5)

### அரச ஊழியர்கள்...

இல்லை என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு அரச சேவையானது விரிவடைந்துள்ளது. இதனால் தொடர்ந்தும் அரச சேவைக்குச் சலுகைகளை வழங்க முடியாது. அரச சேவை நாட்டுக்கு சுமையாக மாறியுள்ளது. அரச ஊழியர்களுக்குச் சலுகைகளை வழங்க வேண்டுமாயின் அதற்காகப் பொதுமக்களிடம் இருந்து வரியை அறவிட வேண்டும். இதன் காரணமாக மேலும் ஒரு வருடத்துக்கு அரச சேவைக்கு பொது நிதியைச் செலவிட முடியாது.

இலங்கை சுதந்திரமடையும் போது நாட்டின் பொது மக்களில் 118 பேருக்கு ஓர் அரச ஊழியர் இருந்தார். எனினும் தற்போது 13 பேருக்கு ஓர் அரச ஊழியர் இருக்கின்றார்.

இந்த அரச ஊழியர்களில் பலர் காலம் கடந்து திருமணம் செய்கின்றனர். இந்த அரச ஊழியர்கள் ஓய்வுபெறும் காலத்திலேயே அவர்களின் பிள்ளைகள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுகின்றனர் என்பது மட்டுமல்ல, உயர்கல்வியைக் கற்க ஆரம்பிக்கின்றனர். இது அரச ஊழியர்களுக்குப் பெரிய பிரச்சினை. இதன் காரணமாகவே நாங்கள் அரச ஊழியர்கள் ஓய்வுபெறும் வயதை மேலும் 10 ஆண்டுகள் அதிகரித்துள்ளோம். தற்போது அரச ஊழியர்கள் ஓய்வுபெறும் வயது 55 இருந்து 65 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர்களுக்குப் பொருளாதார நன்மைகள் கிடைக்கும்.

அத்துடன் அரச சேவைக்கு அனுபவம் கொண்ட ஊழியர்கள் அவசியம். எதிர்காலத்தில் வருடாந்தம் ஓய்வுபெறும் அரச ஊழியர்களின் சதவீதத்துக்கு அமைய புதிய தொழில் வாய்ப்புக்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ஒ-இ)

### மதுபானங்களின்...

பானங்களின் வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. 750 மில்லிலீற்றர் உள்ளூர் விசேட சாராயத்தின் வரி 96 ரூபா 14 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஏனைய உள்ளூர் மதுபான வரி 103 ரூபா 73 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு மதுபானங்களுக்கான வரி 127 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 5 வீதத்துக்கு குறைவாக மதுசாரம் கொண்ட பியருக்கான வரி 3 ரூபா 10 சதத்தால் உயர்த்தப்பட்டுள்ளது. 5 வீதத்துக்கு அதிகமான மதுசாரத்தைக் கொண்ட பியருக்கான வரி 14 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. (ஒ-இ)

### முன்னாள் தவிசாளர்...

தேவசகாயம்பிள்ளை நேற்றுக்காலமானார். 2011ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சாவகச்சேரி நகர சபைக்கு போட்டியிட்டு அதிகூடிய விருப்பு வாக்குகளால் வெற்றி பெற்று தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார். தொடர்ச்சியாக 4 ஆண்டுகள் சபையின் தலைவராக இருந்து பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்தார்.

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அவர் நேற்றுக் காலமானார். (ஒ-இ)

### வீதியில்....

சச்சரவின் தொடர்ச்சியாக ஒரு தரப்பு மாணவர்கள் மீது மற்றைய தரப்பு மாணவர்கள் மற்றும் அவர்களுடன் இணைந்த குழு வீதியில் வைத்து கொலைவெறித் தாக்குதல் நடத்தியதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலையில் இரண்டு மாணவர் குழுக்களுக்கு இடையில் நேற்றுமுன்தினம் சிறிய சச்சரவு ஏற்பட்டுள்ளது. பாடசாலை அதிபர் தலையிட்டு அதனை சமரசமாக முடித்து வைத்திருந்தார். அன்றைய தினம் மாலை, சச்சரவுடன் தொடர்புடைய நான்கு மாணவர்கள் மேலதிக வகுப்புக்குச் சென்று கொண்டிருந்தனர். இதன்போது அவர்களுடன் சச்சரவில் ஈடுபட்ட மற்றைய தரப்பு மாணவர்கள் அவர்களின் உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் இணைந்து வந்து தாக்குதல் நடத்தியுள்ளதாக பொலிஸ் முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு உள்ளான மாணவர்களை அந்தப் பகுதி மக்கள் காப்பாற்றி வீடொன்றில் பாதுகாப்பாக தங்க வைத்தபோது, மற்றைய மாணவர்களின் குழுவினர் மேலதிகமாக ஆள்களை அழைத்து வந்து அந்த வீட்டையும் தாக்கி மாணவர்களையும் தாக்க முற்பட்டுள்ளனர். இதன்போது பாடசாலை அதிபருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் மீண்டும் இரு தரப்புக்கும் இடையில் சமரசம் ஏற்படுத்த முயற்சித்தபோதும் தாக்குதல் நடத்திய குழுவினர் மீண்டும் தாக்குதல் நடத்த முயற்சித்துள்ளனர். இதனால் மாணவர்கள் தப்பித்து ஓடியுள்ளனர். காயமடைந்த மாணவர்கள் முருங்கன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மடு பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தாக்குதலாளிகள் நேற்று மாலை வரையில் கைது செய்யப்படவில்லை. (ஒ-213)

### அரசின்...

நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார. இவரது அழைப்புக்கு, அரசுடன் ஏற்கனவே பேச்சு நடத்தியுள்ளோம் எனவும், பேச்சுக்கு கூட்டமைப்பு தயாராக இருப்பதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் பதிலளித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் ஆம் வாசிப்புமீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே சாந்த பண்டார இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

'அமைச்சர் டக்ளஸ், அங்கஜன், கலாநிதி சுரேன் ராகவன் ஆகியோர் அரச பக்கம் இருக்கின்றனர். வடக்கு மக்களுக்கு எதையாவது செய்ய வேண்டும் என்ற சிந்தனையுடன் செயற்பட்டுவருகின்றனர். நீங்களும் (சிறீதரன் எம்.பி.) அதிபராக இருந்துள்ளீர்கள். நானும் ஆசிரியராக செயற்பட்டுள்ளேன். நீங்கள் உள்ளடங்கலாக கூட்டமைப்பு எம்.பிக்களிடம் கோரிக்கையொன்றை விடுக்கின்றேன். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோருடன் பேச்சு நடத்துங்கள். சந்திப்புக்கான வாய்ப்பை அவர்கள் நிராகரிக்கமாட்டார்கள். மொட்டுக் கட்சியில் சேர வேண்டியதில்லை. கூட்டமைப்பு எம்.பிக்களாகவே இருந்து, அரசின் ஒத்துழைப்பை பெற்று வடக்கு மக்களுக்கு சேவையாற்றுங்கள். துன்பத்திலிருந்து மக்களை மீட்டெடுங்கள். மஹிந்த ராஜபக்சவால்தான் நீங்கள் இன்று சுதந்திரமாக வாழ்கின்றீர்கள். சுதந்திரத்தை மஹிந்தவே பெற்றுக்கொடுத்தார். தமிழ் பெண்களின் கண்ணீரையும் அவரே துடைத்தார். வடக்கு, கிழக்கில் பெரும் அபிவிருத்திகளை செய்துள்ளார். இத்தனை மறந்துவிட வேண்டாம்' என்று சாந்த பண்டார தெரிவித்தார். இதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், நாங்கள் அரசுடன் பேச்சு நடத்த தயார். பேச்சு நடத்தமாட்டோம் என சொல்லவில்லை. பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோதுகூட 13 தடவைகள் பேச்சு நடத்தியுள்ளோம், என்றார். (ஒ-44)

### யாழ். பொலிஸ்...

உதவி பொலிஸ் அத்தியட்சகராக பதவி உயர்வு பெற்று கொழும்பு மாவட்டத்துக்கு பணியிட மாற்றலாகியுள்ள நிலையில், கொழும்பு போக்குவரத்து பொலிஸ் பிரிவு தலைமையகத்தில் பணியாற்றிய பளிகேன யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். (ஒ-26)

### நிதி தேவையில்லை...

களின் சங்கத்தின் செயலர் சி.ஜெனிற்றா தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக வரவு - செலவுத்திட்டத்தில் 300 மில்லியன் ரூபா அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

போர் முடிந்து கடந்த 12 வருடகாலமாக எமது உறவுகளுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதற்காகவே போராடி வருகின்றோம். எமக்கு நிதி தேவையில்லை என்பதை இந்த நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் எப்போதோ நாம் தெட்டத்தெளிவாக கூறிவிட்டோம். எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பது கண்டறியப்படவேண்டும். அதற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படவேண்டும். அதுவே எமது எதிர்பார்ப்பு. இன்று வரவு- செலவுத்திட்டத்தில் காணாமல் போன குடும்பங்களுக்காக 300 மில்லியன் ரூபா அரசால் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. எமக்காக இந்த நிதி ஒதுக்கப்படவில்லை. இது காணாமல் போன எமது உறவுகளை சாட்டாகவைத்துக்கொண்டு தமது சிங்கள மக்களுக்கு வழங்குவதற்காகவே இந்த நிதியை ஜனாதிபதி ஒதுக்கியிருக்கின்றார் என்பதே எமது நிலைப்பாடு- என்றார். (ஒ-110)

### கோந்தைப்பிட்டி...

றுச் சனிக்கிழமை காலை கரை ஒதுங்கிய நிலையில் மீட்கப்பட்ட இளம் பெண்ணின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் மன்னார் மாவட்ட மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கோந்தைப்பிட்டி கடற்கரையோரமாக சடலம் மிதப்பதை நேற்றுக் காலை அவதானித்த மக்கள் கிராம அலுவலர் ஊடாக மன்னார் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர். சம்பவ இடத்துக்கு வந்த மன்னார் பொலிஸார் சடலத்தைப் பார்வையிட்டதோடு, மன்னார் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக சடலத்தை மீட்ட மன்னார் பொலிஸார் மன்னார் மாவட்ட மருத்துவமனையில் ஒப்படைத்தனர்.

முழுமையான ரோஸ் நிற உடை அணிந்துள்ள நிலையில் இளம் பெண் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதேவேளை கடந்த புதன்கிழமை மாலை மன்னார் பிரதான பாலப்பகுதியிலிருந்து பெண் ஒருவர் கடலில் குதித்த நிலையில் அவரைத் தேடும் பணி இடம் பெற்ற போதும் அவர் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-56)

# சிங்கப்பூரில் சிங்கங்களுக்கு கொரோனாத் தொற்று!

சிங்கப்பூர், நவ. 14

சிங்கப்பூரில் உள்ள மிருகக்காட்சிச் சாலையில் நான்கு ஆசிய வகை சிங் கங்களுக்கு கொரோனா பாதிப்பு ஏற் பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கொரோனா பாதிப்பில் சிக்கிய நாடுகளில் சிங்கப்பூரும் ஒன்று. அங்கு இதுவரை 2 லட்சத்து 24 ஆயிரம் பேரை கொரோனா தாக்கியுள்ளது. 523 பேர் உயிரிழந்துள் ளனர். மனிதனைத் தாக்கிய கொரோனா வைரஸ், மிருகங்களையும், பறவைக ளையும் தாக்கியிருப்பது பல நாடுகளில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சிங்கப்பூரில் உள்ள மிருகக்காட் சிச் சாலையில் 4 ஆசிய வகை சிங்கங்களுக்கு கொரோனாப் பாதிப்பு ஏற்பட்டுள் ளமை கண்டு பிடிக் கப்பட்டுள்ளது. (ம)

## பைடன், ஜின் பிங் இருதரப்புப் பேச்சு

வொஷிங்டன், நவ. 14

அமெரிக்க அதி பர் ஜோ பைட னும், சீன அதி பர் ஜின் பிங்கும் காணொலி வழி யாக இன்று இருத ரப்புப் பேச்சு நடத்த வுள்ளனர்.

பொருளாதார வல் லரசு நாடுகளான அமெரிக்காவுக் கும், சீனாவுக்கும் இடையே இணக் கமான உறவு இல்லை. முன் எப்போதும் இல் லாத அளவுக்கு இரு தரப்பிலும் மோதல்போக்கு நிலவி வருகிறது. வர்த்தகப் போர், கொரோனாப் பர வல் விவகாரம், தற்போது தாய்வா னுக்கு சீனா போர் விமானங்களை அனுப்பியமை எனப் பல்வேறு பிரச்சினைகளால் அமெரிக்காவுக் கும், சீனாவுக்கும் இடையேயான உறவில் கசப்பு ஏற்பட்டுள்ளது. இத்தகைய பின் னணியில் இரு தலைவர்களும் இன்று பேச்சு நடத் தவுள்ளனர். (ம)

---

### வாடகைக்கு விடப்படும்

இல 86, பலாலி வீதி திருநெல்வேலி வடக்கு திருநெல்வேலிச் சந்திக்கருகாமையில் உள்ள சகல வசதிகளும் உள்ளடங்கிய வீட்டின் இரு அறைகள் மருத்துவ பீட மாணவர்களுக்கு வழங்கப்படும். (CS 41054)(3.6)

தொடர்பு: 021 222 8281

### வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் பான்சி கடைக்கு (ஆண்கள்) வேலையாட்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப் படும்.

தொடர்பு: 077 132 4319 (CS 18042) 1/6

### விரைவு பொதிகள் சேவை

மற்றும் சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.

Over 11Kg U.K - 975/=

"தற்போது அமெரிக்க லொத்தர் விசா பதியப்படுகிறது"

உள்நாடு - 24 மணித்தியாலத்திலும்
வெளிநாடு - 72 மணித்தியாலத்திலும்
ஒப்படைக்கப்படும். (நிபந்தனைக்குட்பட்டது)

Lanka Cargo Worldwide Express

315, Kasthuriyar Road, Jaffna.
134, Adiyapatham Road, Thirunelvely.

076 2832 397 (CS 18036) 1-6

### ADMIN and ACCOUNTANT VACANCY

யாழ் பிறவுண் வீதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு ADMINISTRATOR, ACCOUNTANT தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 715 7070 (CS 18041 C) 1-6

### வேலையாள் தேவை

யாழ் நகர், பிறவுண் வீதியில் உள்ள வீடு ஒன்றில் தங்கி இருந்து வேலை செய்வதற்கு (கிளினிங், சமையல் உதவி) பெண் / ஆண் தேவை. வயது 50 ற்கு கீழ். தங்கியிருந்து வேலை செய்ய கூடியவர் மட்டும் அழைக்கவும்.

சம்பளம் : 36,000/=

தொடர்புகளுக்கு: 0777 157 070 (CS 18041 A) 1-6

### வாகனம் விற்பனைக்கு

1) மகேந்திரா Polero Plus முழு அலுமினிய பெட்டி DAD-xxxx 2015 மொடல்
2) மகேந்திரா மக்சிமோ வடி MAHINDRA MAXIMO HD-SER DAG-xxxx 2019 மொடல்

076 4400 812 , 021 205 2200 (CS 18039 B) 1-6

### பணிப்பெண் தேவை

யாழ் நகரை அண்டிய பகுதியில் வீட்டிற்கான சமையல் மற்றும் முதியவர் ஒருவரை பராமரிப்பதற்கேற்ற ஒருவர் தேவை. 40-55 வயதுக்கிடைப்பட்ட பெண்ணொருவரா யின் விரும்பத்தக்கது.

தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 0773 614 630 (CS 18046) 1-6

### ONLINE MARKETING STAFF NEED

யாழ் பிறவுண் வீதியில் இயங்கும் ஏற்றுமதி நிறுவனத்திற்கு ONLINE MARKETING STAFF தேவை.

சம்பளம் : 25,000+ Commision.

கணினி, இணைய அறிவு உள்ளவர்கள் எவரும் விண்ணப்பிக்கலாம். (CS 18041 B)1-6

தொடர்புகளுக்கு:0777 157 070

### VACANCIES at THINNAI HOTEL JAFFNA

We are looking for Candidates to fill the following Positions

1. Room Attendants
2. Restaurant Waiters
3. Bar attendant
4. Kitchen Commis (Cooks)
5. Kitchen Stewards (Dish Pot washing)

Please send your CVs to hr@thethinnai.com
or post it to

**The Thinnai**
**86, Palaly Road, Thirunelveli - Jaffna.**
**021 2030400**

(CR 5906) 1-6

### தேவை

உற்பத்தி பொருள்களை விநியோகிப்பதற்கு கனரக வாகன சாரதி (A/D) தேவை.
வயது எல்லை 30க்கு மேல்.
கொவிட் தடுப்பு ஊசி 2 செலுத்தப்பட்டவர் களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு:

076 4400 812, 021 205 2200 (CS 18039 A) 1-6

### பஸ் விற்பனைக்கு

ஒரு கைப்பாவனையில் பாவித்த நல்ல நிலையில் உள்ள TATA ரக பஸ் (City Ride) 17 Seat உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 076 243 0394 (CS 18037) 1-6

### கிளிநொச்சியில் இயங்கும் வியாபார நிலையத்திற்கு பணியாளர்கள் உடன் தேவை

I). சாரதிகள் :
10 சில்லு வாகனம் செலுத்தக்கூடியவர்கள் (தங்குமிடம், உணவு அடங்கலாக சம்பளம் 100000/= மேல் எடுக்கலாம்)

II). கணக்காளர்கள், III).கணக்காய்வாளர்கள்:
கணினி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும். சம்பளம் 50000/= எடுக்கலாம்.

IV). பாட்ஸ் விற்பனையாளர்:
மோட்டார் சைக்கிள் பாட்ஸ் விற்பனை அனுபவம் உடையவர்.

V). காவலாளி:
தனிநபர்கள் விரும்பத்தக்கது.

IV,V) பணிக்கான சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்புக்கு: 0777722305 (CS 15499)1-6

### பெண் வேலையாள்கள் தேவை

**மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பொதிசெய்வதற்கு**
பெண் வேலையாள்கள் தேவை.
வயது எல்லை: 18 தொடக்கம் 30 வரை வேலை நேரம்: காலை 7.30 தொடக்கம்மாலை 5.30 வரை மாத வேதனமாக 17000/= தொடக்கம்25000/= வரை வழங்கப்படும்.

(cs.41058) (1.6) 074 049 0003

### வேலையாள்கள் தேவை

**யாழ்ப்பாணத்தில் இயங்கும் பலசரக்கு வர்த்தக நிலையத்திற்கு பொதி செய்வதற்கு பெண்**
வேலையாள்களும் தங்கி நின்று வேலை செய்வதற்கு ஆண் வேலையாள்களும் தேவை. வயது: 18 - 35

(cs.41056) (2.6) 077 419 5015

### வீடு வாடகைக்கு தேவை

களஞ்சியத் (Stores) தேவைக்கு வீடு வாடகைக்குத் தேவை. மாநகரசபை எல்லையினுள் இருப்பது விரும்பத் தக்கது. (CS 41068)(3.6)

தொடர்பு: 077 315 1593

### Personal English Classes

தனி வகுப்புக்கள் யாழ் நகரில்
Grade 7 - O/L, A/L, Graduates,
தொழில் புரிவோர்களுக்கான Grammar and Spoken English வகுப்புக்கள்

(CS 35877)(3.6)

K.Ganesh (BA) 077 766 8725

### வேலையாட்கள் தேவை

17 முதல் 55 வரை அனுபவமும் / அற்ற ஆண் உதவியாளர்கள் எங்கள் தென்மாகாணத்தில் உள்ள மொத்த வியாபார கடைக்கு தேவை. மாதத்திற்கு 20000ல் இருந்து 30000 வரை சம்பளம் வழங்கப்படும் (உணவும் தங்குமிடமும் வழங்கப்படும்) சிங்களமொழி அவசியம் அல்ல. (CR 35879)(3.6)

தொடர்பு: 077 480 3379

### நீங்காத நினைவுகளுடன்

அம்மா 36 | அப்பா 20





| தோற்றம் | மறைவு | தோற்றம் | மறைவு |
|---|---|---|---|
| 07-09-1940 | 23-07-1985 | 12-12-1940 | 14-11-2001 |

லூட்ஸ் மாகிறெட் பீற்றர் தேவதாஸ் (சறோஜினி)

வேதநாயகம் பீற்றர் தேவதாஸ்

அன்னையும் பிதாவும் நம் முன்னேறி தெய்வங்கள்!
அவனியில் நமக்கு அவதாரம் அளித்து - இவ்
வையத்தில் நாம் வாழ்வாங்கு வாழ வழியமைத்து
வானுறையும் தெய்வத்துள் உறையும் உங்களை
வாழ்வில் மறப்போமா இறப்பில் இழப்போமா.

ஆண்டு பல்லாண்டுகளாயினும் அன்றாடம் - எம்
பாசம் வற்றிப்போகுமோ நேசம் தீர்ந்து போகுமோ
உறவு உடைந்துபோகுமோ உணர்வு உறைந்துபோகுமோ
அன்பு தான் அற்றுப் போகுமோ

அம்மா, அப்பா!
உள்ளன்புடன் உறவாட உலகில் உங்கள்
உருவின்றி உறவின்றி உளம் குமுறும் நாம்
உங்கள் அன்புப் பிள்ளைகள்

விஜி - யாழ்ப்பாணம்
ராயு - யாழ்ப்பாணம்
28, சோசுந்தரம் அவனியு,
சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.

ராஜன் - அவுஸ்ரேலியா
ரகு - அவுஸ்ரேலியா
Melbourne,
Australia.

(CS 17997) (3/6)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 16

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 ஐப்பசி 28 ஞாயிற்றுக்கிழமை (14.11.2021) சிகரம் : 73

கோயில் மணி ஓசையிட
தேகம் மெல்ல உயிர் பெறும்
ஆறு மணியானவுடன்
வாசல் மெல்ல திறந்திடும்
கல்லறைத் தெய்வங்கள் கண்ணெதிரே வந்து
என்னென்னவோ கதைப்பார்கள்

-மாவீரர் பாடல்




# ஏழுமூளை பட்ஜெட்!

ஔண்யன்

**"பட்ஜெட்டை வாசிக்கேக்க பஸில் ராஜபக்ச ஏன் கொஞ்ச நேரத்தால கதிரையில இருந்தவர்?'**

**"தெரியேலையே. ஏன்?'**

**"ஏனென்டால் அவருக்கு ஏழு மூளை யெல்லோ. அந்தப் பாரத்தை தாங்கமுடி யாமல்தான் அப்பிடி இருந்து வாசிச்சவர்"**

இப்படி சமூகவலைத்தளங்களில் நிதியமைச்சர் பஸிலைக் கலாய்க்கும் நகைச்சுவைகள் தாறுமாறாகக் கொட்டிக் கிடக்கின்றன. அரசாங்கத்தையும், அதன் பட்ஜெட்டையும் அதிகம் கிண்டலடிப்போர் யாரெனப் பார்த்தால், சாட்சாத் ராஜபக்சக்களை அரியணை ஏற்ற வாக்களித்த அந்த 69 லட்சம் குருப்பைச் சேர்ந்தவர்களே.

மிகக்குறுகிய காலத்திலேயே மக்களின் முன்னால், தம்மைப் பற்றிய அதிமிகையான விம்பங்கள் சரிந்துவிழ, அம்மணமாக நிற்கும் அரசாங்கமாக ராஜபக்ச குடும்பத்தினர் மாறிவிட்டனர். வழக்கமாகத் தமக்கு நெருக்கடி வரும் போதெல்லாம் ராஜபக்சக்கள் நாகாஸ்திரமாகப் பயன்படுத்தும் போர்வெற்றிக் கோஷம் கூட இம்முறை எடுபடவில்லை. ஏற்கனவே கொரோனா நெருக்கடியைச் சரிவரக் கையாள முடியாமல், இலங்கை அரசாங்கம் ஆடிய கோமாளிக்கூத்தால், ஒட்டுமொத்த பொருளாதாரமும் சரிந்து போய் பல்லிளிக்கத் தொடங்கிவிட்டது. அமெரிக்கா,சீனா, இந்தியா என்ற வல்லரசுகளிடம் மாத்திரமல்லாமல், பங்களாதேஷ், ஓமான் என்று கண்ணில் எதிர்ப்படும் நாடுகளிடமெல்லாம் கையேந்தினால் மட்டுமே இலங்கையின் வாழ்க்கைச் சக்கரம் சுழலும் என்னுமளவுக்கு நிலைமை மோசமாகிக் கொண்டே வருகின்றது. உற்பத்திகளும், ஏற்றுமதியும் குறைந்துபோக அதற்குச் சற்றும்சளைக்காத மறை வீதத்தில் விலைவாசி ஏறிக்கொண்டே போகின்றது. சமையல் எரிவாயு தொடக்கம் பால்மா வரை இதுவரை விலையேற்றம் காணாத எந்தப் பொருளுமே இல்லையென்றாகிவிட்டது. ஒரு குடும்பத்தின் நாளாந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய தினமும் 5 ஆயிரம் ரூபாவே போதாதென்னுமளவுக்கு வாழ்க்கைச் செலவு கிடுகிடு வென உயர்ந்து விட்டது.

இலங்கையின் பொருளாதாரம் சிக்கிச் சின்னாபின்னமாகி, மக்கள் விழி பிதுங்குமளவுக்கு வாழ்வாதாரம் அவர்களின் கழுத்தை நெரித்துகொண்டிருக்கும் போதுதான், பஸில் ராஜபக்சவை நிதியமைச்சராக்கியது அரசாங்கம். எந்தவிதமான பொருளாதார நெருக்கடிகளையும், அநாயசமாக கையாளக் கூடியவரென்றும், ஏழு மூளைகள் கொண்ட அதிசயப் பிறவி என்றும் ஆட்சியாளர்கள் மக்களிடம் புதிய கதையாடல்களை அவிழ்த்துவிடத் தொடங்கினர். மக்களும் பஸில் வந்தால் எல்லாம் சரியாகும் என நம்புமளவுக்கு அந்தப் பிரசாரங்கள் வலிமையானவையாக இருந்தன. ஆனால் பஸில் நிதியமைச்சரான பின்னர் மத்திய வங்கியில் புதிய அச்சியந்திரம் வாங்கப்பட்டு கோடிக்கணக்கில் நாணயத் தாள்கள் அச்சிடப்பட்டனவே தவிர, பொருளாதாரம் ஒரு அங்குலம் கூட நிமிரவில்லை. மாறாக இன்னும் பல மடங்கில் அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏறிக்கொண்டே இருந்தது. பஸிலின் ஏழுமூளைகள் யோசித்தும் கூட இலங்கைப் பொருளாதாரம் இன்னும் அதலபாதாளத்துக்குள் பாய்ந்து தற்கொலை செய்யவே முயன்று கொண்டிருந்தது.

> பஸிலின் ஏழுமூளைகள் யோசித்தும் கூட இலங்கைப் பொருளாதாரம் இன்னும் அதலபாதாளத்துக்குள் பாய்ந்து தற்கொலை செய்யவே முயன்று கொண்டிருந்தது.

இந்தநிலையில் தான் எல்லாப் பிரச்சினைகளுக்கும் சர்வரோக நிவாரணியாக, பஸிலின் பட்ஜெட் இருக்குமெனவும், இதுவரை இப்படியொரு ஆச்சரியமான பட்ஜெட்டை இலங்கை கண்டே இருக்காது எனவும் அடுத்தகட்ட கதைகளை அரசாங்கம் அவிழ்த்துவிட்டது. ஒருவேளை பஸில் தன்னுடைய ஏழுமூளைகளாலும் கற்றுக்கொண்ட மொத்த வித்தையையும் இந்த பட்ஜெட்டில் காட்டி, இலங்கையின் பொருளாதாரத்தை ஒரே இரவில் உயர்த்தும் திட்டங்களையும், மக்களுக்கான மானியங்களையும் அள்ளிவீசி தெறிக்க விடப்போகிறாரோ என்ற கடைசி நம்பிக்கையோடு மக்கள் காத்திருந்தனர்.

ஆனால் இரவல் பிள்ளைக்கு உரிமை கோரியதைப் போல, ஏற்கனவே நடைமுறையில் இருந்த சில திட்டங்களுக்கு மேலதிகமாக சில மில்லியன்களை ஒதுக்கியும், முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களை இரைமீட்டும் , நடக்கவே நடக்காத சில கனவுகளை வாய்ப்பகட்டாகச் சொல்லியும் இட்டுக்கட்டி ஒரு மிக நீளமான பட்ஜெட்டை மூச்சுமுட்ட வாசித்து முடித்தார் பஸில். அந்த பட்ஜெட்டை வாசித்து முடிப்பதற்கிடையில் கால் வலித்து, பின்னர் கதிரையில் இருந்து, அதுவும் சரிவராமல் போக 10 நிமிடங்கள் நாடாளுமன்றை ஒத்தி வைத்துத்தான் பட்ஜெட் வாசிப்பை பஸிலால் ஒப்பேற்ற முடிந்தது. இப்படியெல்லாம் அலங்காரம், ஆலாபனையோடு கொண்டுவரப்பட்ட பட்ஜெட் பற்றி ஒரே வார்த்தையில் சொன்னால் இதுவொரு 'வெங்காய பட்ஜெட்' . எப்படி வெங்காயத்தை உரித்துக் கொண்டே செல்ல கடைசியில் எதுவுமே இல்லாமல் இருக்குமோ அப்படித்தான் இதுவும். வேதன உயர்வில்லை, புதிய நியமனங்கள் இல்லை, விலைவாசிக் குறைப்பில்லை, தொலைநோக்கான திட்டங்கள் இல்லை, பொருளாதாரத்தை நிமிர்த்தும் முன்மொழிவுகள் இல்லை என்று ஒரே 'இல்லைமயம்' மட்டுமே பஸிலின் ஏழுமூளை பட்ஜெட்டில் நிறைந்து கிடக்கின்றது. இப்படிப்பட்ட பட்ஜெட்டை தயாரிக்க எதற்காக ஏழுமூளை கொண்ட 'சூப்பர் ஹீரோ' ? பஸ் நிலையத்தில் படுத்திருக்கும் பைத்தியக்காரன் கூட பஸிலைவிட நல்லதொரு பட்ஜெட்டை தயாரிக்கமுடியுமே.


> **அலங்காரம், ஆலாபனையோடு கொண்டுவரப்பட்ட பட்ஜெட் பற்றி ஒரே வார்த்தையில் சொன்னால் இதுவொரு வெங்காய பட்ஜெட். எப்படி வெங்காயத்தை உரித்துக் கொண்டே செல்ல கடைசியில் எதுவுமே இல்லாமல் இருக்குமோ அப்படித்தான் இதுவும்.**



# வாலில்லாத காளை மாடும் இலையான்களும்

நிலாந்தன்

கடந்த ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி ஒரு 'சூம்' சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய் யப்பட்டது. பரந்துபட்ட ஒரு மக்கள் இயக்கத்துக்கான குறிக் கோள் கள் குறித்து அதில் ஆரா யப்பட்டன. பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம உட்பட முஸ்லிம், தமிழ் வளவாளர்கள் உரையாற்றினார் கள். தமிழ்ப் பகுதிகளில் உள்ள அரசியல் செயற்பாட்டாளர்களும் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த செயற்பாட்டாளர்களும் அதில் பங்குபற்றினார்கள். இது நடந்து கிட்டத்தட்ட மூன்று கிழமை களின் பின் இம்மாதம் மூன்றாம் திகதி ஒரு சந்திப்பு யாழ்ப்பாணத் தில் 'யு. எஸ்' ஹோட்டலில் இடம் பெற்றது. பேராதனைப் பல்க லைக்கழகத்தைச் சேர்ந்த புத்திஜீ வி களும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதிகளும் நாடாளு மன்ற உறுப்பினர்களும் இதில் பங்குபற்றினார்கள். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரசறிவி யல் துறையைச் சேர்ந்த தமிழ் மற்றும் சிங்களப் புத்திஜீவிகளோடு ஐக்கிய மக்கள் சக்தி கூட்டமைப்பை சேர்ந்த நாடாளுமன்ற உறுப் பினர்களான எரான் விக்ரமரத்ன அந்தக்கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, புத்திக பத்திரண போன்றோரும் அங்கே வந்திருந்தார்கள். யாழ். பல்கலைக்கழகத்தின் சில புத்திஜீவிகள் உட் பட சுமார் முப்பது பேர் அந்தச்சந்திப்பில் கூடியி ருந்தார்கள். அரசுக்கு எதிராக நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் ஒரு புத்திஜீவிகளின் அமைப் பைக் கட்டி எழுப்புவதே அவர்களுடைய நோக்கமாக இருந்தது. அவ்வாறான புத்திஜீவி அமைப் பொன்றைக் கட்டியெழுப்பும் வேலைகள் ஏற்கனவே பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தொடங்கிவிட் டன. அந்தப்பல்கலைக்கழகத்தின் பட்ட மேற்படிப்பு துறைக்குப் பொறுப்பான ஒரு புலமையாளரே அவ்வமைப்புக்குப் பொறுப்பாக இருக்கிறார்.



**அரசாங்கத்துக்கு தொடர்ச்சியாக எதிரிகள் முளைத்துக் கொண்டே இருக்கிறார்கள். அந்த எதிர்ப்பை தனது மூன் றில் இரண்டு தனிச்சிங்கள பெரும்பான்மைக்கு கிடைத்த ஒரு வெகுமதியாக அரசாங்கம் காட்டிக் கொண்டது. ஆனால் பெருந் தொற்றுநோய் அரசாங்கத்தின் தேர்தல் வெற்றிகளை நிர்வாணமாக்கி விட்டது. அதன் விளைவாக ஒருபுறம் வைரஸ் நெருக்கடி; இன்னொருபுறம் பொருளாதார நெருக்கடி என்பவற்றோடு சேர்ந்து நாட்டுக்கு உள்ளேயும் ஆளும் கட்சிக்கு உள்ளேயும் புதிது புதிதாக எதிர்ப்புகள் கிளம்பின.**

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு இந்த மாதத்தோடு இரண்டு ஆண்டுகள் முடிகின்றன. ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்கு முன் அவருக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கிய ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியி லிருந்து பரந்துபட்ட ஒரு மக்கள் இயக்கம் குறித்தும் நாடு முழு வதுக்குமான புத்திஜீவிகளின் ஒன்றிணைந்த எதிர்ப்பை குறித்தும் சிந்திக்க வேண்டிய ஒரு நிலைமை ஏன் ஏற்பட்டிருக்கிறது? இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ராஜபக்சக்களுக்கு இந்த நாட்டு மக்கள் வழங்கிய மூன்றிலிரண்டு பெரும்பான்மை அதன் பொலிவை இழக்க தொடங்கிவிட்டதை அது நமக்கு உணர்த்து கின்றதா?

அரசாங்கத்துக்கு தொடர்ச்சியாக எதிரிகள் முளைத்துக் கொண்டே இருக்கிறார்கள். மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட் சிக்கு வந்த பொழுது தமிழ் மற்றும் முஸ்லிம் எதிர்ப்பு மட்டும்தான் இந்த அரசாங்கத்துக்கு இருந்தது. அந்த எதிர்ப்பை தனது மூன் றில் இரண்டு தனிச்சிங்கள பெரும்பான்மைக்கு கிடைத்த ஒரு வெகுமதியாக அரசாங்கம் காட்டிக் கொண்டது. அதன் விளைவா கவே தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரணியில் இணைந்து தமது எதிர்ப்பைக் காட்டினார்கள். அப்பொழுது சிங்கள மக்கள் மத்தியில் அதிகரித்த எதிர்ப்பு எழவில்லை.

ஆனால் பெருந்தொற்று நோய் அரசாங்கத்தின் தேர்தல் வெற்றிகளை நிர்வாணமாக்கி விட்டது. அதன் விளைவாக ஒருபுறம் வைரஸ் நெருக்கடி; இன்னொருபுறம் பொருளாதார நெருக்கடி ; மூன் றாவது முனையில் வெளியுறவு நெருக்கடி என்ப வற்றோடு சேர்ந்து நாட்டுக்கு உள்ளேயும் ஆளும் கட்சிக்கு உள்ளேயும் புதிது புதிதாக எதிர்ப்புகள் கிளம்பின.

அரசாங்கம் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை இராணுவ மயப்படுத்தி நோய் தொற்றும் வேகத்தை ஓரளவுக்கு கட்டுப்படுத்தியிருக்கிறது. அதேபோல வெளியுறவு அணுகுமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி மேற்கு நாடுகள், ஐ.நா., இந்தியா போன் றவற்றோடு ஒப்பீட்டளவில் உறவுகளை சுமூகமாக்கிக் கொண்டது. ஆனால் நாட்டுக்குள்ளும் ஆளுங்கட்சிக்குள் ளும் எதிர்ப்புக்கள் புதிது புதிதாக கிளம்பிக் கொண்டே இருக்கின்றன. தொழிற்சங்கங்கள் தொடர்ச்சியாகப் போரா டிக் கொண்டிருக்கின்றன. ஆசிரியர் தொழிற்சங்கத்தின் விட்டுக்கொடுப்பற்ற போராட்டம் கடந்த புதன்கிழமை அர சாங்கத்தைப் பணியவைத்திருப்பதாக தோன்றுகிறது. ஆசிரியர்கள் அதிபர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதன்மூலம் நடுத்தர வர்க்கத்தின் எதிர்ப்பைக் குறைக் கலாம் என்று அரசாங்கம் சிந்திக்கின்றது. இது விடயத்தில் ஜனாதிபதியை விடவும் அவருடைய தமையனார் மஹிந்த ராஜபக்சவே சமரசம் செய்யத் தகுந்தவர் என்று கருதி அவருக்கூடாகவே அந்தப்போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது அரசாங்கத்தில் ஜனாதிபதியை விட வும் மஹிந்த ராஜபக்சவே ஜனவசியம் மிக்கவராக உள்ளார் என்ற செய்தியை அழுத்தமாக உணர்த்துகின்றது.

எனினும் ஒரு தொழிற்சங்கத்தின் போராட்டம்தான் முடி வுக்கு வந்திருக்கிறது. ஆசிரியர்கள் பெற்ற வெற்றி ஏனைய தொழிற்சங்கங்களுக்கு உற்சாகமூட்டும் முன்னுதாரணமாக அமையும். இது தொழிற்சங்கங்களின் போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தக்கூடும். அதாவது அரசாங்கத்துக்கு மேலும் நெருக்கடிகள் காத்திருக்கின்றன என்று பொருள்.



இது ஒருபுறம். இன்னொருபுறம் வைரஸ் தொற்றுக் காரணமாக வும் பொருளாதார வீழ்ச்சி காரண மாகவும் அத்தியாவசியப் பொருட் களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கி றது. கிடைக்கிற பொருட்களுக்கும் விலை உயர்கிறது. ஏற்கனவே உயர்ந்த விலைகள் இறங்க வில்லை. மட்டுப்படுத்தப்பட்ட உரப்பாவனை காரணமாக அடுத் தடுத்த போக விவசாய உற்பத்தி கள் பாதிக்கப்படலாம் என்று தெரிகிறது. அதனால் எதிர்காலத் தில் மரக்கறிகளுக்குத் தட்டுப்பாடு வரலாம் என்று எச்சரிக்கப்படுகி றது.

அதாவது அரசாங்கம் ஆட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் பல முனை நெருக்கடிகளைச் சந் திக்க வேண்டியிருக்கிறது. இப்ப டிப்பட்ட ஒரு தருணத்தில் எதிர்க்கட் சிகளும் புத்திஜீவிகளும் இணைந்து அரசாங் கத்துக்கு எதிராக பரந்துபட்ட எதிர்ப்பைக் காட்டுவதற்கு முற்படு கிறார்கள். வரும் 16ஆம் திகதி எதிர்க்கட்சிகள் அரசாங்கத்துக்கு எதிராக பெரியளவிலான ஓர் ஆர்ப்பாட்டத்துக்கு ஏற் பாடு செய்து வருகின்றன. அரசாங்கம் தனி மைப்படுத்தற் சட்டங்களை முன்னிறுத்தி அந்தப்போராட்டத்தை தடுக்கக்கூடுமா?

ஒரு நாடு எவ்வளவுக்கு எவ்வளவு இராணுவ மயப்படுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு பரந்துபட்ட அளவிலான சிவில் எதிர்ப்பும் தேவைப்படும். இந்த அடிப்படையில் சிந்தித்தால் பரந்துபட்ட ஒரு மக்கள் இயக்கத் துக்கான தேவை இப்பொழுது அதிகம் உண்டு. இலங்கைத்தீவின் நவீன வரலாற்றைத் தொகுத் துப் பார்த்தால் சிங்கள பௌத்த பெருந்தேசியவாதத்தை தோற்கடிப்பதற்கு மூன்று இன மக்களும் இணையும் பொழுது மட்டுமே வெற்றி கிடைத்திருக்கிறது. 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தில் இது நிரூபிக்கப்பட்டது. எனவே இப்போதிருக்கும் அரசாங்கத்தை மூன்று ஆண்டுகளின் பின்னராவது தோற்கடிப்பது என்று சொன்னால் அதற்கு மூன்று இனத்தவர்களின் ஒன்றிணைவு அவசியம். இந்த அடிப்படையில் சிந்தித்தால் நாடு முழுவதுக்குமான ஒரு பரந்துபட்ட மக்கள் இயக்கம் தேவை. ஆனால் இங்கே பிரச்சினை என்னவென்றால் அப்படி ஒரு மக்கள் இயக் கத்தை கட்டியெழுப்பும் பொழுது அதனை எந்த அடிப்படை யில் கட்டியெழுப்புவது என்பதுதான்.

இந்தக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட சூம் சந்திப் பின்போது அது சுட்டிக்காட்டப்பட்டது. ஒரு பரந்துபட்ட மக்கள் இயக்கம் எனப்படுவது மூன்று இன மக்களையும் ஒருங் கிணைப்பது. அவ்வாறு ஒருங்கிணைக்க வேண்டுமென் றால் அது இலங்கைத்தீவின் பல்லினத் தன்மையை கட்டியெழுப்புவதற்கு உரிய தெளிவான வாக்குறுதி களை அதன் இறுதி இலக்குகளாக கொண்டிருக்க வேண் டும்.

இந்த நாட்டை பல்லினத்தன்மை மிக்கதாக கட்டி எழுப்புவது என்றால் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை இந்தச்சிறிய தீவின் சக பங்காளிகளாக ஏற்றுக்கொண்டு ஒரு யாப்பை உருவாக்குவதுதான் ஒரே வழி. அதாவது கூரான வார்த் தைகளில் சொன்னால் இப்போதிருக்கும் ஓரினத் தன்மை மிக்க, ஒரு மதத்தை மேலுயர்த்துகின்ற, ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குப் பதிலாக பல்லினத்தன்மை மிக்க பல சமயப் பண்புமிக்க இரு மொழிகளை ஏற்றுக் கொள்ளு கின்ற ஒரு கூட்டாட்சிக்குரிய யாப்பை உருவாக்க வேண்டும். எனவே ஒரு பரந்துபட்ட மக்கள் இயக்கத்தை குறித்தோ அல்லது நாடு முழுவதற்குமான புத்திஜீவிகளின் எதிர்ப்பி யக்கத்தை குறித்தோ சிந்திக்கும் எல்லா தரப்புக்களும் முதலில் தமிழ்மக்களுக்கு தரவேண்டிய வாக்குறுதி என்ன வென்றால் ஒரு கூட்டாட்சி யாப்பை உருவாக்கத் தயார் என்பதுதான்.

(08ஆம் பக்கம் பார்க்க)

# ரவூப் ஹக்கீம் - மைனஸ் 13 ?

## பேராசிரியர் அமீர் அலி சொல்வதென்ன?



அ.நிக்ஸன்

தமிழ் , முஸ்லிம் மக்கள் ஒன்றுசேர வேண்டிய காலமிது - என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இப்போது பேச ஆரம்பித்திருக்கிறார். 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னரே அவர் இந்தக் கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானபோது எதிர்ப்பு வெளியிட்ட முஸ்லிம் காங்கிரஸின் அப்போதைய தலைவர் அஷ்ரப், முஸ்லிம்களுடன் உரையாடவில்லையெனக் குற்றஞ்சுமத்தியிருந்தார். 13ஆவது திருத்தச் சட்டம் தமிழர்களிடம் திணிக்கப்பட்டதென்ற விமர்சனங்களையும் அன்று அஷ்ரப் ஏற்றிருந்தார். இருந்தாலும் 1988 ஆம் ஆண்டு முதன்முதலில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட்டு எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற்றிருந்தது. தேர்தலில் அன்றைய தமிழர் விடுதலைக்கூட்டணி போட்டியிடவில்லை. மாகாண சபையைக் கூட்டணி ஏற்றுக்கொள்ளாமையே அதற்குக் காரணம்.

வடக்கு- கிழக்கு உள்ளிட்ட இலங்கைத்தீவில் வாழும் முஸ்லிம்கள், எப்போதுமே இலங்கை ஒற்றையாட்சி அரசுடன் இணைந்து இணக்க அரசியலில் ஈடுபட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அமைச்சுப் பொறுப்புக்களையும் அரச திணைக்களப் பதவிகளையும் , (இலங்கை அரச நிர்வாகக் கட்டமைப்புக்கு ஏற்ற அனைத்துப் பதவிகளிலும் ) தமிழ்மொழி பேசுவோர் என்ற காரணத்தால் முஸ்லிம்கள் இன்றுவரை அதனை அலங்கரித்து வருகின்றனர். ஆனால் இது ஒரு சலுகை அரசியல் என்று காத்தான்குடியைச் சேர்ந்த பேராசிரியர் ஏ.சீ.எஸ் அமீர் அலி 'சிந்தனைச் சுவடு' என்ற தனது நூலில் சுட்டிக்காட்டியுள்ளார். அவுஸ்திரேலியப் பல்கலைக்கழகம் ஒன்றின் ஓய்வு நிலைப்பேராசிரியரான அமீர் அலி, தமிழ் மக்களுடன் இணைந்து செயற்படுவதன் மூலமே முஸ்லிம்கள் தமது அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்த முடியுமென்கிறார். "தமிழ் -முஸ்லிம் தரப்புகள் ஒன்றுக்கொன்று தவறிழைத்திருக்கின்றன. ஆனால் அதுபற்றித் தொடராகப் பேசிக் கொண்டிருக்காமல், 2009 க்குப் பின்னரான சூழலில் தமிழ்- முஸ்லிம் இணைந்த அரசியல் சூழலை உருவாக்க உரையாடுங்கள்" எனவும் அவர் வலிறுத்துகிறார். இருதரப்பும் அதற்குரிய நம்பிக்கைகளை வெளிப்படுத்த வேண்டுமெனவும் அவர் கோருகிறார்.

ஆனாலும் தமிழர்களோடு இணைந்து செயற்பட வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட முஸ்லிம் கட்சிகள் எதுவுமே இதுவரை கருத்து வெளியிடாத நிலையில், யாழ்ப்பாணச் சந்திப்பையடுத்துத் தமிழர்களோடு சேர்ந்து பயணிக்க வேண்டிய அவசியம் குறித்து ஹக்கீம் கூறியமை சிந்தனைக்குரியது.

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னரான சூழலில் மாத்திரமே முஸ்லிம் கட்சிகளில் இருந்து அமைச்சர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை. (நீதியமைச்சர் அலி சப்ரியின் நியமனம் கோத்தாபயவின் தனிப்பட்ட நட்புரீதியானது. அவரை முஸ்லிம் மக்களே தம் இனத்தவர் என்று சொந்தம் கொண்டாடுவதில்லை. ஏனெனில் அவர் மனதால் சிங்களவர் என்பதே முஸ்லிம்களின் அபிப்பிராயம்) சில முஸ்லிம் உறுப்பினர்கள் அரசாங்கத்துக்கு ஆதரவாக இருந்தாலும்கூட, அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படவில்லை. சிங்கள மக்களின் வாக்குகளினால் தெரிவான ஜனாதிபதி என்ற அடிப்படையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கம் செயற்பட்டு வரும் பின்னணியிலும் ரவூப் ஹக்கீம் கூறிய கருத்தைத் தமிழ்த்தேசியக் கட்சிகள் பரிசீலிக்க வேண்டும்.

2005 ஆம் ஆண்டுக்குப் பின்னரான ராஜபக்ச அரசாங்கத்தில் மாத்திரமல்ல அதற்கு முன்னரான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திலும் முஸ்லிம்கள், சிங்கள இனவாதக் கும்பல்களினால் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தனர். அதுவும் ரவூப் ஹக்கீம், அதாவுல்லா, ரிஷாத் பதியுதீன் போன்ற முஸ்லிம் தலைவர்கள் அமைச்சர்களாக இருந்தபோதே முஸ்லிம்கள் மீது தாக்குதல்கள் நடந்திருக்கின்றன. அந்தத் தாக்குதல்கள் பற்றிய எந்தவொரு விசாரணைகளும் முழுமை பெறவில்லை. மாறாக முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர், விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

ஆகவே சிங்கள ஆட்சியாளர்கள் முஸ்லிம்களைத் தங்கள் அரசியல் தேவைக்கான கருவேப்பிலையாக மாத்திரமே பயன்படுத்துகின்றனர் என்பதை முஸ்லிம் தலைவர்கள் உணராதவர்கள் அல்லர். இணக்க அரசியல் செய்தாலும் இதுதான் நிலைமை என்பதற்கு முஸ்லிம்கள் மாத்திரமல்ல, மலையகத் தமிழ்க் கட்சிகளுக்கும் அந்த அனுபவம் உண்டு. மனோ கணேசனின் கட்சிக்கும் இதேநிலைதான்.

இணக்க அரசியலால் ஏற்பட்ட தங்கள் மனக் குமுறல்களை முஸ்லிம் கட்சிகளில், முஸ்லிம் காங்கிரஸ் மாத்திரமே அவ்வப்போது பகிரங்கப்படுத்தியது. தற்போது அரசால் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதால் ரிஷாத் பதியூதின் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியும் இணக்க அரசியலின் துன்பங்கள் குறித்துப் புலம்ப ஆரம்பித்துள்ளது. வடக்கு - கிழக்குக்கு வெளியேயுள்ள சிங்களக் கட்சிகளில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் உறுப்பினர்களும் அவ்வப்போது அரசாங்கத்தை விமர்சித்தாலும், எந்த நேரத்திலும் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்பதற்கு அவர்கள் தயாராகவுமிருக்கின்றனர். கோத்தாபய ராஜபக்ச திடீரென அழைப்பு விடுத்தால், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட முஸ்லிம் கட்சிகளும் அரசில் இணைந்துவிடும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ரிஷாத் பதியூனின் கட்சியில் இருந்து ஏற்கனவே மூன்று உறுப்பினர்கள் கோத்தாபய ராஜபக்சவுக்கு ஆதரவாகவே செயற்படுகின்றனர்.

ஆனாலும் அவர்களுக்கும் அமைச்சுப் பதவி இதுவரை இல்லை. இதுதான் முஸ்லிம்க ளின் இணக்க அரசியல். இந்தவொரு நிலையில், ரவூப் ஹக்கீம் தமிழ் மக்களுடனான ஒற்றுமை பற்றிப் பேசியிருப்பது தற்காலிக உறவா அல்லது தமிழ்க் கட்சிகளோடு இணைவது போன்று காண்பித்து அரசாங்கத்துடன் பேரம் பேசும் நகர்வா என்ற கேள்விகள் எழுந்தால் அதில் நியாயமுண்டு.

'தனிக் கட்சி அமைப்பதற்கு முன்னரான காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியோடு இணைந்தே முஸ்லிம்கள் தேர்தலில் போட்டியிட்டார்கள். ஆனால் வெற்றி பெற்றதும் அவர்கள் அரசாங்கத்துடன் சேர்ந்து விடுவார்கள்' என ஹக்கீம் 2008 இல் ஒரு தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில் பகிரங்கமாகவே சாடியிருந்தார். 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததால் , 14 உறுப்பினர்களைப் பெற்றிருந்த மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஏழு உறுப்பினர்களைக் கொண்டிருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையும் இணைத்து ஆட்சியை அமைத்தது.

ஆனால் பதினொரு உறுப்பினர்களைப் பெற்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்து ஆட்சி அமைப்பதற்கு ஹக்கீமிடம் அழைப்பு விடுத்திருந்தது. கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் பல தடவைகள் ஹக்கீமிடம் பக்குவமாகவும் இதுபற்றிக் கேட்டிருந்தார். முதலமைச்சர் பதவியைத் தருவதாகவும் அவர் உறுதியளித்தார். ஆனால் ஹக்கீம் மஹிந்த ராஜபக்சவுடன் பேச்சு நடத்தி, கிழக்கில் ஆட்சி அமைத்தார். இரண்டு ஆண்டுகளுக்கு முதலமைச்சராக முஸ்லிம் காங்கிரஸில் இருந்து ஒருவர் நியமிக்கப்பட்டார்.

ஆகவே தமிழ் - முஸ்லிம் ஒற்றுமை வேண்டுமென்றால் 2012 ஆம் ஆண்டே கிழக்கில் இணைந்து ஆட்சியமைத்திருக்கலாம். ஆனால் ஹக்கீம் அவ்வாறு செய்யவில்லை. ஏனென்றால் அவர் அப்போது மஹிந்த அரசாங்கத்தில் அமைச்சராகப் பதவி வகித்திருந்தார். இதனால் கிழக்கில் அரசாங்கத்துக்கு ஏற்புடைய ஆட்சியை அமைக்க ஹக்கீம் விரும்பியிருந்தார். இது அரசாங்கத்துடன் பேரம் பேசும் முஸ்லிம்களின் வழக்கமான அரசியல்தான்.

ஆனால் இந்தப் பேரம் பேசும் அரசியல் முஸ்லிம்களின் உரிமைகளைப் பெற்றுத்தராதெனச் சந்திரிகாவோடு முரண்பட்ட நிலையில் அஷ்ரப் சொல்லியிருந்தார். அவர் இறப்பதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் வீரகேசரிப் பத்திரிகைக்காக இந்தக் கட்டுரையாளருக்கு 2000 ஆம் ஆண்டு வழங்கியிருந்த நேர்காணலிலேயே இதனைக் கூறியிருந்தார்.

கிழக்கில் தமிழ் -முஸ்லிம் ஒன்றிணைந்த மாகாண சபை ஆட்சியை இழந்தமை குறித்து 2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வெள்ளவத்தையில் உள்ள கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்ற நிகழ்வில் சம்பந்தன் விரிவாக விளக்கமளித்தி ருந்தார். ஹக்கீம் ஏன் தயங்கினாரெனக் கேள்வி எழுப்பி, கவலைப்பட்டார்.

தமிழர்களைவிட அரசாங்கத்தையே முஸ்லிம்கள் நம்புவதாகவும் சம்பந்தன் குற்றம் சுமத்தினார். கிழக்கில் இணைந்து ஆட்சி அமைத்திருந்தால், படிப்படியாகத் தமிழ் முஸ்லிம் உறவுவலுவடைந்துமுரண்பாடுகளும்குறைவடைந்திருக்கும். சிங்கள ஆட்சியாளர்களை ஆட்டம் காணவும் செய்திருக்கலாமென்று கூறிய சம்பந்தன், அதற்கான காலம் கடந்து விடவில்லையெனவும் நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

ஆகவே சம்பந்தன் அன்று நம்பிக்கை வெளியிட்டது போன்று 2020 ஆம் ஆண்டுக்குப் பின்னரான சூழலில் தமிழ்-முஸ்லிம் உறவுக்கான காலம் கடந்து விடவில்லையெனலாம். 13 ஆவது திருத்தச் சட்டத்தை நிராகரித்துத் தமிழ் = முஸ்லிம் கூட்டுறவின் மூலம், வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம் என்பதை ரவூப் ஹக்கீமால் நிறுவ முடியும். வேண்டுமானால் 13ஐ நல்லிணக்கத்துக்கு முன்னோடியாகச் சிங்கள ஆட்சியாளர்கள் முழுமையாக நடைமுறைப்படுத்திக் காண்பிக்க வேண்டுமென்ற உறுதியான நிபந்தனையை ஹக்கீம் முன்வைக்கலாம். ஏனெனில் சிங்கள ஆட்சியாளர்களோடு இணைந்து , இணக்க அரசியலில் ஈடுபட்ட கசப்பான அனுபவம் முஸ்லிம்களுக்கே அதிகம் உண்டு. 2002 ஆம் ஆண்டு இடம்பெற்ற சமாதானப் பேச்சிலும் ஹக்கீம் அரசாங்கத்துடன் இணைந்து பங்குபற்றியிருந்தார். ஆகவே 2020 ஆம் ஆண்டுக்குப் பின்னரான சூழலில் தமிழ் - முஸ்லிம் ஒற்றுமைக்காக மாத்திரமல்ல, வடக்கு, கிழக்கு இணைந்த சுயாட்சிக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு மனம் திறந்த பேச்சுக்களையும் ஆரம்பிக்கும் ஏற்பாட்டாளராக ரவூப் ஹக்கீம் தன்னை மாற்றிக்கொள்ளலாம்.

13 ஆவது திருத்தம் முஸ்லிம்களுக்கும் தீர்வல்ல என்று அஷ்ரப் 1996 ஆம் ஆண்டு சந்திரிக்காவின் தீர்வுப் பொதியை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றியபோது விளக்கியிருந்தார். ஆனால் வடக்கு, கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்களில் பெரும்பான்மையானோர் உடன்பாடு இல்லையென்பது கண்கூடு. எனினும் அது பற்றிப் பேசலாம் என்பதற்கான காரணங்களைப் பேராசிரியர் அமீர் அலி முன்வைக்கிறார். அத்துடன் இணைப்பு விடயத்தில் முஸ்லிம்களிடம் இருக்கும் சந்தேகங்களைத் தமிழ்த் தரப்பு தெளிவுபடுத்த வேண்டுமெனவும் பேராசிரியர் அமீர் அலி விதந்துரைக்கிக்கிறார். இது ஏற்புடையதே.

அத்தோடு இரு மாகாணங்களையும் ஏன் இணைக்க வேண்டும் என்பது பற்றியும் அது தமிழ்பேசும் மக்களின் தாயகம் என்பது தொடர்பாகவும் முஸ்லிம்கள் பரிசீலிக்க வேண்டிய காலமிது. பேராசிரியர் அமீர் அலி எழுதிய சிந்தனைச் சிறகுகள் என்ற நூலை அவர்கள் ஒருமுறை வாசிப்பதும் நன்று.

ஏனெனில் கிழக்கில் முஸ்லிம்களின் பாரம்பரியக் காணிகள், இஸ்லாமியப் பண்பாட்டு அடையாளங்கள் என்பன பௌத்தமயமாகிக் கொண்டிருக்கின்றன. 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான சூழலிலேயே இஸ்லாமிய மரபுரிமை அடையாளங்கள் இலங்கை ஒற்றையாட்சி அரசினால் சட்டரீதியாக அழிக்கப்படுகின்றன. ஆகவே தமிழர்களோடு மனம் திறந்து பேச வேண்டும். குறிப்பாக இணைந்த வடக்கு, கிழக்கில் முஸ்லிம்களின் அதிகாரப் பங்கு என்ன என்ற சந்தேகங்களை இரு தரப்பும் நேர்மையாகப் பேசி 'முரண்பாட்டில் உடன்பாடு' என்ற கோட்பாட்டை உருவாக்கினால், அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கலாம். அப்போதுதான் பிரித்தாளும் தந்திரம் இனிமேல் பயன்தராதெனச் சிங்கள ஆட்சியாளர்களும் உணருவார்கள். புவிசார் அரசியல் போட்டியால், இலங்கையில் கால்பதித்துக் கொண்டிருக்கும் அமெரிக்க, இந்திய அரசுகளுக்குப் படிப்பினையாகவும் இருக்கும்.

தமிழ் - முஸ்லிம் மக்களைப் பிரித்துக் கையாண்டதன் மூலம், கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகச் சிங்கள ஆட்சியாளர்கள் நன்மைகளைப் பெற்றிருந்தனர். முஸ்லிம்களுக்கு அமைச்சர் பதவிகளை வழங்கிக் கொண்டே முஸ்லிம்கள் மீதும் தாக்குதல் நடத்திய பேரினவாதத்தின் துணிவை இலகுவில் மறந்துவிட முடியாது.

ஆகவே இதன் பின்னணியில், தமிழ்-முஸ்லிம் உறவுக்கான உறுதியான புதிய உரத்தை ரவூப் ஹக்கீம் முதலில் உருவாக்குவாராக இருந்தால், ஏனைய முஸ்லிம் கட்சிகள்கூட இணைவதற்கு வாய்ப்புகள் எழலாம். தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் இது பொருந்தும்.

# சொற்சிலம்பம் போட்டி 57

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| | ■ | 9 | | | 10 | | |
| 11 | 12 | | | ■ | 13 | | ■ |
| 14 | | | ■ | 15 | | ■ | 16 |
| 17 | | ■ | 18 | | | 19 | |
| | ■ | 20 | | | ■ | 21 | |
| ■ | 22 | | | ■ | 23 | | |

அனுப்புபவர் பெயர்:..........................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..................................................................

கையொப்பம்:..........................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. செருக்கு 6. இந்தக் கிரகம் நல்லதும் செய்யும் 7. ஒரு திசையின் குறுகிய சொல் 8. தாண்டு 9. கழுவுதல் 11. சாதாரண மனிதன் 13. நோவு 14. ரகம் 15. என்று 17. சிரசு 18. ஆசைப்படல் 20. துன்பம் இழைக்கும் செயல் 21. சேர் 22. திடீரென 23. படிப்பு

## மேலிருந்து கீழ்

1. சம்பவிக்கக் கூடாதது 2. பழம் 3. புலவன் 4. தேர் இழுக்கும் கயிறு 5. சமுத்திரம் 8. ஒரு வாழைப்பழ ரகம் 9. ஒரு கருவி 10. உலகம் 12. குழந்தை 15. இது சேற்றில் ஓய்வெடுக்கும் 16. சரணம் வரிசையில் ஒன்று. 18. தங்குமிடம் 19. வெளிச்ச வேளை 20. வழங்கு.

### சொற்சிலம்பம் போட்டி 56 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.சிவப்பு 2. கழுகு 7. மிகை 8. ராஜா 10. தலை 11. புணர்தல் 13. கிரகம் 16. கல் 17. அதிபன் 19. மசி 20. துணை 21. கன 22. சயனம் 23. சர்வ 24. கும் 25. பிதாமகர்

**மேலிருந்து கீழ்**

1. சிமிக்கி 2. வகை 3. புராணம் 5. முதல் 6. குலை 9. ஜார் 11. புகல் 12. தந்தி 14. ரகசியம் 15. மன்னவர் 17. அணை 18.பகர்க 19. மசகு 20. தும்பி 23. சம

### சொற்சிலம்பம் போட்டி இல.57

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**19.11.2021** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 56 இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**

**துஷாரா ஸ்ரீஸ்கந்தராஜா,**
மருத்துவபீடம்,
யாழ் பல்கலைக்கழகம்.

**2 ஆம் பரிசு**

**பா.அபிநயன்,**
கூமாங்குளம்,சித்திவிநாயகர்
வித்தியாலயம்,வவுனியா

**3 ஆம் பரிசு**

**மு.ஜெயமுரளி,**
கல்விளான்குளம்,
மகா வித்தியாலயம், துணுக்காய்

**4 ஆம் பரிசு**

**ஸ்ரீ.லக்சன்,**
யாழ்.மத்திய கல்லூரி

**5 ஆம் பரிசு**

**ச.வசந்தராணி,**
காரைநகர்.

# ஊர்ப்புதினம் 14

இராகவன்



மூத்தார் வீட்டுக் கேற்றுக்கை ஒரு வாய்க்கால் இருந்திச்சுது. அந்த வீட்டாக்கள் குளிக்கிற தண்ணியெல்லாம் அந்த வாய்க்காலுக்குள்ளாலதான் வெளில வரும். அதால அந்த வீட்டைத் தாண்டேக் குள்ள மில்க்வைற், லைபோய், ரெக்ஸோனா, லக்ஸ், ராணி, கோம்பா எண்டு எல்லாச் சவுக்காரங்களும் கலந்த ஒரு வாசமடிக்கும். அந்த வாசம் இப்பவும் என்ர மூக்கு நுனியிலயொட்டிக் கொண்டிருக்கு. நான் அந்த வீட்டைத் தாண்டேக்குள்ள ஏரம்பண்ணை நிக்கிறாரோ? எண்டுதான் முக்கியமாய்ப் பாப்பன். தட்டித் தவறி அவர் அதில் நிண்டால் என்னதான் தலைபோகிற வேலையாய் இருந்தாலும் நைஸாத் திரும்பி அறம்புறமாய் வெருட்டி அழவைச்சிடுவார். அதால அவரைக் கண்டால் எனக்கு வயித்தைக் கலக்கும். நான் அவருக்குப் புழுத்தபயம். ஏரம்பண்ணை வந்து மூத்தாம்பியப்பான்ர மோன். ஆளைப் பாத்தால் 'அம்மன்' படத்தில (சுரேஷ்- சௌந்தர்யா நடித்தது) வாற கோரக் கோபாலகிருஷ்ணன் மாதிரியே இருப்பார். கொஞ்சங் கறுவல் கட்டையர். நல்ல தடிச்சகுரல். அவர் சும்மா வாயைத் திறந்து கதைச்சாலே எனக்குக் காச்சட்டையோட மூத்திரம் போடும்.

மற்றது மூத்தார் வீட்டைத் தாண்டிப் போகேக்குள்ள ஒரு முடக்குவரும். அதால திரும்பித் தெற்கைப் போனால் தெடுத்தனைக்குளம் வரும். அந்தக் குளத்துக்கு முன்னால உள்ள பிட்டியில ஒரு சிமெந்துக் கொட்டில் கட்டிச் சவ வண்டில் விட்டிருக்கும். அந்தச் சவ வண்டிலுக்குள்ள ஏறித்தான் ஏரம்பண்ணை இரவில படுக்கிறவர் எண்டு ஊருக்குள்ள பரவலாய்க் கதைக்கிறவை. அதாலயும் எனக்கு அவரைக் கண்டால் கெடிக் கலக்கமாயிருக்கும்.

மூத்தார் வீட்டைத் தாண்டி நேரே கிழக்கை போனால் அடுக்க வாறது பிறேமன் வீடு. பிறேமனுக்கு என்னைவிட அஞ்சு வயது மூப்பு. எண்டாலும் நானவனைப் பிறேமன் எண்டுதான் கூப்பிடுவன். பிறேமன் படிப்பில வலுவிண்ணன். அஞ்சாம் வகுப்பு ஸ்கொலசிப் சோதனையில நல்ல மாக்ஸ் எடுத்துப் பாஸ்பண்ணி யாக்கருப் பள்ளிக்கூடத்திலயிருந்து ஹாட்லிப் பள்ளிக் கூடத்துக்குப் போனவன். அவன் இராசேந்திரம் சேரிட்டத்தான் ஸ்கொலசிப் வகுப்புக்குப் போனவன். அப்ப இராசேந்திரம் சேர்தான் ஸ்கொலசிப் வகுப்புக்கு வலுபேமஸ்.



அவரிட்ட ஒரு முழு மொக்கனைக் கொண்டு போய் விட்டாலும் ஸ்கொலசிப் சோதனையில பாஸ் பண்ண வைச்சிடுவார் எண்டு சொல்லுவினம். அவர் வீட்டில ஒரு லைபிறறியும் வைச்சிருந்தவர். தன்னட்ட ஸ்கொலசிப் வகுப்பில படிக்கிற பெடியளிட்ட அஞ்சு ரூபா அங்கத்துவக் கட்டணமாய் வாங்கிக் கொண்டு கிழமைக்கு இரண்டு புத்தகம் குடுப்பார்.

அம்புலி மாமா, பாலமித்ரா, ரத்னபாலா ,இலக்கிய மஞ்சரி எண்டு எக்கச்சக்கமான புத்தகங்கள் அவரிட்டை இருந்திச்சுது. நான் அவரிட்ட ஸ்கொலசிப் வகுப்புக்கு போகாட்டிலும் அவரிட்ட ஸ்கொலசிப் வகுப்புக்குப் போற பெடியளிட்ட அஞ்சு ரூபா குடுத்து அவங்கள் மூலமாய் அந்தப் புத்தகங்களை எடுத்து வாசிச்சிருக்கிறன். அந்த மூட்டம் இராசேந்திரம் சேர் யாக்கருப் பள்ளிக் கூடத்தில தான் படிப்பிச்சுக் கொண்டிருந்தவர். ஒருமுறை பள்ளிக்கூட விளையாட்டுப் போட்டி நடக்கேக்குள்ள விநோத உடைப் போட்டிக்கு இராசேந்திரம் சேர் ஒரு நுட்பமான வேலை செய்திருந்தார். இண்டை வரைக்கும் ஓரிடத்திலயும் ஒருத்தரும் அதைச் செய்யேல்லை எண்டுதான் சொல்ல வேணும்.

(தொடரும்)

■ வ.துசாந்தன்

# படுவான் துயரம்!



மகேஸ்வரன் படைத்த மண் - இது
மழலைகள் விளையாடிய மண்
மலர்கள் பூத்த மண்

மனைகள் கட்டவும் மண் - பூமியில்
மதில் அமைக்கவும் மண்
மடு நிரப்பவும் மண்

மனிதர்களின் போராட்டம் - அப்போ
மண்ணிலே போராட்டம்
மண்ணுக்கான போராட்டம்

மண்டியிடாத் தமிழர்கள் - இப்போ
மண் விற்கும் அவலம்
மட்டு படுவானிலும் துயரம்

○ மயூ

# கொய்யாப்பழக் கொலை!




**தன்னிடம் கொய்யாப் பழங்கள் இருக்கின்றன, தருகின்றேன் என்று கூறி ஹரிஹரதீபனை அருகில் உள்ள உறவுக்கார வீட்டுக்கு அழைத்துச் சென்றிருக்கின்றான். ஒன்றும் அறியாத அந்தச் சிறுவனும் கொய்யாப்பழம் கிடைக்கப் போகின்றது என்ற ஆசையுடன் சென்றிருக்கிறான்.**

2021 நவம்பர் 7 ஆம் திகதி.

ஞாயிற்றுக்கிழமை மாலை. வெளியூர் சென்றிருந்த அந்தத் தம்பதியினர் வீடு திரும்பியிருந்தனர். வீடு பூட்டப்பட்டிருந்தது. ஆனால் வீட்டில் அவர்கள் விட்டுச் சென்றிருந்த 6 வயது மகன் ஹரிஹர தீபனைக் காணவில்லை. அவன் அருகில் இருக்கும் சிறுவர்களுடன் விளையாடச் செல்வது வழமை என்பதால், அதை அவர்கள் பெரிதாக எடுக்கவில்லை.

நேரம் சென்று கொண்டிருந்தது. ஆனால் ஹரிஹரதீபன் வீடு வரவில்லை. இப்போது தாய்க்குக் கொஞ்சம் பயம் ஏற்பட ஆரம்பித்தது. அருகில் உள்ள இடங்களில் மகனைத் தேட ஆரம்பித்தார். அவன் வழமையாக விளையாடும் இடங்களுக்குச் சென்று பார்த்தார். ஆனால் எங்கும் ஹரிஹர தீபன் இல்லை. தாயின் அச்சம் வலுக்கத் தொடங்கியது. அக்கம் பக்கம் விசாரிக்க ஆரம்பித்தார். மெல்ல மெல்ல இருள் சூழ ஆரம்பித்தது.

வீடு வீடாக விசாரித்துக் கொண்டு சென்ற தாய், அருகில் உள்ள உறவுக்கார வீடொன்றுக்கும் விசாரிக்க சென்றார். அங்குதான் அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அந்த வீட்டின் மொட்டை மாடியில் கழுத்து அறுக்கப்பட்டு இரத்த வெள்ளத்தில் வீழ்ந்து கிடந்தான் ஹரிஹர தீபன். அதைக் கண்ட தாய் அலறியடித்துக் கொண்டு ஓடி வர, அந்தப் பகுதியே அதன்பின்னர் அல்லோலகல்லோலமானது. இந்த விடயம் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. பொலிஸ் குழுவொன்று சம்பவ இடத்துக்கு வந்திறங்கி விசாரணைகளை ஆரம்பித்தது. கைரேகை நிபுணர்கள் மற்றும் மோப்ப நாய் உதவியுடன் தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. பொலிஸாரின் சந்தேகப் பார்வை அஜய் ரத்தினம் என்பவனின் மீது வீழ்ந்தது.



திண்டுக்கல் மாவட்டம், நத்தம் அருகே உள்ளது கோட்டையூர் சினையம்பட்டி. அமைதியான ஊர். அங்குதான் ராமகிருஷ்ணனும் அவரது குடும்பமும் வசிக்கின்றது. மனைவி, மூன்று மகள்கள், ஒரே மகன் என அழகிய குடும்பம். கடைக்குட்டிதான் ஹரிஹர தீபன். ராமகிருஷ்ணன் உணவகம் ஒன்றில் கணக்காளராக வேலை செய்கின்றார்.

அமைதியாகப் போய்க் கொண்டிருந்த இந்தக் குடும்பத்தின் வாழ்க்கையில் சில வாரங்களுக்கு முன்னர் ஒரு பிரச்சினை வெடித்தது. அதுவும் ராமகிருஷ்ணனின் உறவு முறை இளைஞனான அஜய் ரத்தினமே பிரச்சினைக்குக் காரணமாக இருந்தான். அஜய்ரத்தினம் கல்லூரியில் மூன்றாம் ஆண்டில் படிப்பவன்.

ராமகிருஷ்ணனின் மகள்களில் ஒருவரின் படத்தை அவன் சமூக வலைத்தளங்களில் பகிர்ந்ததே இந்தப் பிரச்சினைக்குக் காரணம். ராமகிருஷ்ணன் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு கொடுக்க, பொலிஸார் அஜய் ரத்தினத்தை அழைத்து விசாரிக்க, படத்தைப் பதிவிட்டது அஜய் ரத்தினம்தான் என்பது உறுதியாகியிருக்கின்றது. அதன்பின்னர் அஜய் ரத்தினத்தைப் பொலிஸார் நன்றாகக் கவனித்திருக்கிறார்கள்.

அஜய் ரத்தினம் தங்களுடைய உறவுக்காரர் என்பதால், அவரது வாழ்க்கை வீணாகிவிடக்கூடாது என்று ராமகிருஷ்ணன் முறைப்பாட்டை பின்னர் மீளப் பெற்றிருக்கிறார். அஜய் ரத்தினத்தை பொலிஸார் விடுவிக்க, அதன் பின்னர் இந்தப் பிரச்சினை அடங்கி விட்டது.

உடனடியாக அஜய்ரத்தினத்தைக் குண்டுக்கட்டாகத் தூக்கிய பொலிஸார், விசாரணைகளை ஆரம்பித்தனர். பொலிஸாரின் சந்தேகம் சரியாகத்தான் இருந்தது. அஜய் ரத்தினம் வாயைத் திறக்க ஆரம்பித்தான். சமூக வலைத்தளத்தில் படத்தைத் பதிவேற்றிய பிரச்சினையில், முறைப்பாடு மீளப் பெறப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தபோதும், அஜய் ரத்தினத்தால் அந்தப் பிரச்சினையை மறந்துவிட முடியவில்லை. ராமகிருஷ்னன் குடும்பத்துக்கு தக்க பாடம் படிப்பிக்க வேண்டும் என்று கருவிக் கொண்டிருந்த அஜய் ரத்தினம் அதற்குத் தேர்ந்தெடுத்த வழிமுறை கொடூரமானது.

ராமகிருஷ்ணனும் மனைவியும் வெளியூர் சென்றிருப்பதை அறிந்து கொண்ட அஜய் ரத்தினம், வெளியே விளையாடிக் கொண்டிருந்த ஹரிஹர தீபனுடன் பேச்சுக்கொடுத்து சகஜமாக உரையாடினான். அப்படியே பேச்சோடு பேச்சாகத் தன்னிடம் கொய்யாப்பழங்கள் இருக்கின்றன, தருகின்றேன் என்று கூறி ஹரிஹர தீபனை அருகில் உள்ள உறவுக்கார வீட்டுக்கு அழைத்துச் சென்றிருக்கின்றான். ஒன்றும் அறியாத அந்தச் சிறுவனும் கொய்யாப்பழம் கிடைக்கப் போகின்றது என்ற ஆசையுடன் சென்றிருக்கிறான்.

அந்த வீட்டில் மொட்டை மாடிக்கு சிறுவனை அழைத்துச் சென்ற அஜய் ரத்தினம், சிறுவனின் வாயில் துணியை அடைந்து, கழுத்தை வெட்டிச் சத்தமில்லாது கொலை செய்துவிட்டு, அங்கிருந்து மெல்ல நழுவிச் சென்றுவிட்டான். பொலிஸாரின் விசாரணையில் அஜய் ரத்தினம் அனைத்தையும் கக்க, அவனைக் கைது செய்து விளக்கமறியலில் வைத்திருக்கிறது பொலிஸ்.

ஒரு சாதாரண பிரச்சினைக்காக ஒரு சிறுவனின் உயிர் பறிக்கப்பட்ட கொடூரத்தால் அந்த ஊரே அடங்கிப் போய் இருக்கின்றது.



# பாகிஸ்தான்:

## ஒடுக்கப்பட்ட கிரிக்கெட்டின் குரல்

○ ஸபர் அஹமட்

இந்த ரி-20 கிரிக்கெட் தொடர் முன்னெப்போதும் இல்லாத பரவசத்தையும் பரபரப்பையும் தந்து கொண்டிருக்கிறது. கிரிக்கெட் செழிக்க வேண்டும் என்றால் பாகிஸ்தானும் இந்தியாவும் இலங்கையும் எப்போதும் அட்டகாசமான 'போர்மில்' இருக்க வேண்டும். 2011 களுக்கு முன்னர் வரை இந்த சமநிலை இருந்தது. சங்கா, மஹேலவின் ஓய்வுடன் இலங்கை பாதாளத்தில் விழுந்தாலும் இப்போது நம்பிக்கை தரக்கூடிய சிறந்த அணி ஒன்றை அது உருவாக்கி இருக்கிறது/வருகிறது.1994 ஆம் ஆண்டு யாராவது " 1996 இல் இலங்கை உலக்கிண்ணத்தை வெல்லும்" என்று சொன்னால் சொன்னவரைப் பைத்தியம் என்று திட்டி இருப்பார்கள். ஆனால் அபார நம்பிக்கையும் கூட்டு முயற்சியும் அதைச் சாத்தியமாக்கியது. அதன் பின்னர் இரண்டு தசாப்தங்கள் கிரிக்கெட் உலகின் உச்சத்தில் இலங்கை இருந்ததெல்லாம் சரித்திரம்.

ஆனால் இந்தப் பத்து வருடத்தில் எல்லாமே மாறிப் போனது. கிரிக்கெட்டின் புனிதம் கெட்டுப் போய் ஐ.பி.எல் ஒன்றே கிரிக்கெட்டின் 'விசிட்டிங் கார்ட்' போல ஆனது. ஐ.நா.சபையில் அமெரிக்கா போல ஐ.சி.சி எங்கும் இந்தியாவின் கொட்டம் பரவிக் கிடக்கிறது. போட்டி அட்டவணையைக் கூட மாற்றி குழப்பியடித்தார்கள். தனது பராக்கிரமத்தாலும் செல்வாக்காலும் பாகிஸ்தான் அணியை முற்றாக முடக்கி ஓரம் கட்டியது இந்தியா.

> 66
> **பாகிஸ்தான் என்பது எந்த நேரத்தில் எப்படி விஸ்வரூபம் எடுக்கும் என்று யாராலும் கணிக்கமுடியாத ஒரு அணி. இம்ரான் கான் காலத்தில் இருந்து அதன் ஆதார குணம் அது.**

பாகிஸ்தான் என்பது எந்த நேரத்தில் எப்படி விஸ்வரூபம் எடுக்கும் என்று யாராலும் கணிக்கமுடியாத ஒரு அணி. இம்ரான் கான் காலத்தில் இருந்து அதன் ஆதார குணம் அது. ஆனால் இப்போதைய பாகிஸ்தான் அணி அதன் முன்னோர்களைவிட பண்பாட்டிலும் விழுமியத்திலும் சிறந்து நிற்பதாகவே படுகிறது. பல வருடகாலமாக உருப்படியாகச் சொந்த நாட்டில் ஒரு கிரிக்கெட் தொடரைக்கூட வைக்க முடியாமல் அல்லாடுகிறது பாகிஸ்தான்.



பயங்கரவாதப் பிரச்சினையைக் காரணம் காட்டி யாராவது கழன்று கொள்வார்கள். ஐ.சி சி யும் மெத்தனமாக இருக்கும். இதற்கெல்லாம் பதிலை பாகிஸ்தான் இந்தத் தொடரில் வழங்கி இருந்தது. யார், யார் குடுமி மேல் கைவைக்க வேண்டும் என்று புரிந்து கணக்குகளைத் தீர்த்துக் கொண்டும் விட்டது.

பாகிஸ்தான் ரி-20 உலகக்கிண்ண அரையிறுதியில் வென்று இறுதிப் போட்டிக்குத் தேர்வாகி இருந்தால் தலையணை சைஸ் புத்தகங்களில் சொல்லப்படும் சுயமுன்னேற்றக் கதை ஒன்றை வீடியோவில் பார்த்தது போல இருந்திருக்கும். ஆனாலும் இந்தத் தொடரில் பாகிஸ்தான் வெளிப்படுத்திய ஆட்டத்திறன் அபாரம். ஒடுக்கப்பட்ட சாதிகளின், வஞ்சிக்கப்பட்ட மனிதர்களின் கதைகளைப் பரியேறும் பெருமாள் என்றும் ஜெய்பீம் என்றும் கொண்டாடித் தீர்க்கும் நமக்கு அதே போல சர்வதேச கிரிக்கெட் அரங்கில் நுட்பமாக ஒடுக்கப்பட்ட பாகிஸ்தானின் நியாயமும் புரியவேண்டும். ஏனெனில் கிரிக்கெட்டின் ஆரோக்கியத்துக்கு பாகிஸ்தானின் வகிபாகம் மிக முக்கியம்.

சஞ்சீவி
14 நவம்பர் 2021



# ஆபாசப் படம் எடுத்து ஆண்களை மிரட்டிய கும்பல்



○ யூ.எல். மப்றூக்

ஆண்களிடம் தொலைபேசியில் ஆபாசமாகப் பேசி, அவர்களின் நிர்வாணப் படங்களை நூதனமாகப்பெற்று பின்னர் அவற்றை வைத்து சம்பந்தப்பட்டவர்களை மிரட்டி பணம் பறித்துவந்த இருவர் இலங்கை, அக்கரைப்பற்று பொலிஸாரால் அதிரடியாகக் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பெண், மற்றையவர் ஆண். குறித்த பெண் கணவனை இழந்த மூன்று பிள்ளைகளின் தாய் என்றும், மற்றையவர் திருமணமான ஆண் எனவும் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் பொலிஸாரால் அக்கரைப்பற்று நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது இருவருரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

தங்கள் சூழ்ச்சியில் மாட்டிக்கொண்ட ஆண் ஒருவரிடம் ஐந்து லட்சம் ரூபா பணத்தை மிரட்டிக் கேட்ட மேற்படி நபர்கள், அந்தப் பணத்தை குறிப்பிட்டதொரு இடத்தில் வைக்கச் சொல்லிவிட்டு, பின்னர் அதனை எடுப்பதற்கு முயற்சித்தபோதே, அங்கு மறைந்திருந்த பொலிஸாரிடம் அகப்பட்டனர்.

பாதிக்கப்பட்ட ஆண், ஏற்கனவே இந்தப் பெண் தரப்பிடம் ஆறு லட்சம் ரூபா பணத்தை இழந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. தனது முகத்தைக் கடைசி வரை காண்பிக்காமல் தொலைபேசி மூலம் ஆண்களைத் தொடர்புகொண்டுள்ள மேற்படி பெண், ஆபாசமாக அந்த ஆண்களை வீடியோ அழைப்பில் நிர்வாணமாக நிற்கும்படி செய்து, அதனை நூதனமாகத் தனது கைபேசியில் பதிவுசெய்து கொண்டார். பின்னர் அந்தப் படங்களை வைத்து, மிரட்டி பெருந் தொகைப் பணம் பெற்று வந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கைதான பெண்ணிடமிருந்து பொலிஸார் கைப்பற்றிய அலைபேசியில், அரச உயர் பதவிகளிலும், பெரும் பதவிகளிலும் உள்ள சிலரின் நிர்வாணப் படங்கள் காணப்பட்டன என்றும் தெரியவந்துள்ளது.

ஆயினும், அவர்களிடம் பணம் பறிக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பில், இதுவரை தகவல்கள் எவையும் பொலிஸாருக்குக் கிடைக்கவில்லை. அம்பாறை மாவட்டம் ஒலுவில் பிரதேசத்தில் அமைந்துள்ள 'கட்டார் சிற்றி' எனும் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரும், அதே பகுதியைச் சேர்ந்த ஆண் ஒருவருமே இந்த மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் மாமா, மருமகள் உறவுடையவர்கள் என்றும் (கைது செய்யப்பட்டுள்ள ஆணுக்கு கைதாகியுள்ள பெண் சகோதரியின் மகளாவார்) இவர்கள் கணவன் மனைவி போல் நடித்து, இவர்களிடம் சிக்கிய நபரிடம் மிரட்டிப் பணம் பறித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தனியார் நிறுவனமொன்றில் பணிபுரியும் 42 வயதுடைய திருமணமான இந்த நபர், ஆறு லட்சம் ரூபா பணத்தை மேற்படி மோசடித் தரப்பிடம் பறிகொடுத்த நிலையில், மீண்டும் பணம் கேட்டு மிரட்டப்பட்டபோது பொலிஸாரின் உதவியை நாடியிருக்கின்றார்.

## பேஸ்புக்கில் ஆரம்பம்

'மூன்று வருடங்களுக்கு முன்னர் பாத்திமா ஷிபானி எனும் பேஸ்புக் கணக்கிலிருந்து எனக்கு நட்பு அழைப்பொன்று வந்தது. அதனை நான் ஏற்றுக் கொண்டேன். எனது பேஸ்புக் பக்கத்தில் என்னுடைய கைபேசி இலக்கத்தைப் பதிவு செய்துள்ளேன். ஒருநாள் பெண் ஒருவர் என்னிடம் பேசினார். அவர் தன்னை 'சானாஸ்' என அறிமுகப்படுத்திக் கொண்டார். அந்தப் பெண் என்னிடம் ஆபாசமாகப் பேசினார். ஒரு கட்டத்தில் நானும் அவ்வாறே பேசத் தொடங்கினேன். 'நீ' என்று என்னை அவர் அழைக்குமளவுக்கு அந்தப் பேச்சு நாளடைவில் நெருக்கமானது.

ஒருநாள் என்னை நிர்வாணமாகப் பார்க்க வேண்டுமென அவர் என்னிடம் கேட்டார். நான் கீழ் உள்ளாடையுடன் 'வீடியோவில்' தோன்றினேன். அப்போதும் அவர் தனது முகத்தைக் காட்டவில்லை. நான் அவ்வாறு தோன்றியதை எனக்குத் தெரியாமல் அந்தப் பெண் 'ஸ்க்ரீன் ஷொட்'ஆகப் பதிவு செய்து கொண்டார் என்பதை பின்னொரு நாளில்தான் தெரிந்து கொண்டேன்.

இது நடந்து கொஞ்ச நாள்களுக்குப் பிறகு வேறொரு பெண் குரல் என்னிடம் பேசியது. முன்னர் பேசிய பெண்ணின் நண்பி என்று அவர் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். நான் உள்ளாடையுடன் தோன்றிய படம் தன்னிடமும் உள்ளதாக அவர் என்னிடம் கூறினார். பிறகு அவரும் என்னுடன் ஆபாசமாகப் பேசத் தொடங்கினார். நானும் பேசினேன்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 18ஆம் திகதி இரண்டாவதாகப் பேசிய பெண் என்னை அலைபேசியில் அழைத்து, தனக்கு அவசரமாக ஐந்து லட்சம் ரூபா பணம் தேவைப்படுவதாகக்கூறி, அதனை வழங்குமாறு என்னிடம் கேட்டார். மேலும் அதனை டிசெம்பர் மாதம் திருப்பி வழங்கிவிடுவதாகவும் கூறினார். அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்றேன். பிறகு முதலாவதாகப் பேசிய பெண்ணும் இது தொடர்பில் என்னிடம் கதைத்தார். அவரின் கைபேசியில் இருந்த எனது உள்ளாடைப் படத்தை அவரின் நண்பி களவாக எடுத்து விட்டார் என்றும், அவர் கேட்பது போல் பணத்தை கொடுத்து விடும்படியும் சொன்னார். நான் முடியாது என்றேன்.

பணம் கொடுக்காது விட்டால் எனது படத்தை சமூக வலைத்தளங்களில் வெளியிடப் போவதாக இரண்டாவதாகப் பேசிய பெண் என்னை மிரட்டினார். அப்படி படம் வெளியானால் மானம் போய்விடும் என்று பயந்தேன். அதனால் மிகவும் கஷ்டப்பட்டு பணத்தைத் திரட்டினேன்.



கடந்த செப்ரெம்பர் 23ஆம் திகதி இரண்டாவதாக பேசிய பெண்; ஒலுவில் கட்டார் சிற்றியிலுள்ள ஒரு வளவினுள் இரவு 7.30 மணியளவில் ஐந்து லட்சம் ரூபா பணத்தை வைத்து விட்டு போகச் சொன்னார். அதன்படி செய்தேன்.

அந்தக் காசை இழந்து இரண்டு வாரம் கழிந்திருக்கும். மீண்டும் இரண்டாவதாகப் பேசிய பெண்ணிடமிருந்து எனக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. ஒரு கைபேசி வாங்க வேண்டுமெனக் கூறி, என்னிடம் அவர் 40 ஆயிரம் ரூபா பணம் கேட்டார்.

அத்தோடு எனது விந்து தடவப்பட்ட என்னுடைய கீழ் உள்ளாடையொன்றை அவர் சொல்லும் இடத்தில் வைக்கச் சொன்னார். பணத்தை 'ஈசி கேஷ்' வழியாக பணத்தை அனுப்பி வைத்ததோடு, அவர் கேட்டபடி எனது உள்ளாடையையும் அவர் சொன்ன இடத்தில் வைத்து விட்டு வந்தேன்.'

இரண்டு வாரங்களுக்குப் பின்னர், வெளிநாட்டுக்குச் சென்றிருந்த தனது கணவர் ஊர் வந்து விட்டதாக இரண்டாவது பெண் கூறினார். இடையில் முதலாவதாகப் பேசிய பெண், தனக்கு 10 ஆயிரம் ரூபா பணம் கேட்டார்; அனுப்பினேன். இது இவ்வாறிருக்க இவர்கள் இருவரின் தொலைபேசிக்கும் ஒவ்வொரு வாரமும் தலா 100 ரூபா ரீலோட்டும் செய்து வந்தேன்.

ஒரு நாள் ஆண் ஒருவர் எனது கைபேசிக்கு அழைப்பெடுத்து, என்னுடன் இரண்டாவதாகப் பேசிய பெண்ணின் கணவர் என தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். அவரின் மனைவியை நான் கெடுத்து விட்டதாகவும் பொலிஸிடம் செல்லப் போவதாகவும் என்னை மிரட்டினார்.

நான் மிகவும் பயந்து விட்டேன். ஒரு கட்டத்தில் எனக்கு மாரடைப்பு வந்துவிடுமோ என்று கூட அச்சப்பட்டேன். பொலிஸுக்குப் போக வேண்டாம் என்றும், எது வேண்டுமானாலும் நான் செய்யத் தயாராக இருப்பதாகவும் அவரிடம் கூறினேன்.

அவர் ஜப்பான் செல்லவுள்ளதாகவும் அதற்கு ஐந்து லட்சம் ரூபா பணம் தேவைப்படுவதாகவும் கூறி, அந்தப் பணத்தை என்னிடம் கேட்டார். தருகிறேன் என்றேன். ஆனாலும், அவ்வளவு தொகைப் பணம் என்னிடம் இருக்கவில்லை. பைத்தியம் பிடித்தது போல் இருந்தது. அக்கரைப்பற்றிலுள்ள எனது நண்பர் ஒருவரைச் சந்தித்து நடந்தவை அனைத்தையும் கூறினேன். அவர் என்னை நட்புடன் திட்டினார். பிறகு அரசியல் அதிகாரத்திலுள்ள ஒருவரிடம் என்னை அழைத்துச் சென்று விடயத்தைச் சொன்னார்.

அந்த அரசியல்வாதி என்னை கடந்த 28ஆம் திகதி அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் அழைத்துச் சென்றார். நடந்தவை அனைத்தையும் அங்கு கூறினேன். சம்பந்தப்பட்ட நபர்களை பிடிப்பதற்கான திட்டம் அங்குதான் தீட்டப்பட்டது' என்றார் பாதிக்கப்பட்ட அந்த நபர்.

மொத்தமாக ஆறு லட்சம் ரூபாயை இழந்த நிலையில்தான், மேற்படி நபரிடம் மீண்டும் ஐந்து லட்சம் ரூபா பணம் கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

# மானத்தி

கருணை ரவி

சஞ்சீவி தொடர் கதை

பூங்கொடி ஒரு கையில் மீன்பையுடனும் மறு கையில் தேநீர் போத்தலுடனும் நடந்தாள். முழங்காலளவு தண்ணீருக்குள் குனிந்து கைகளைக் கழுவிய மரியதாஸ், குனிந்தபடியே அவளைப் பார்த்தான்.

"அந்தோனி அங்கை பார்? மரியதாஸ் கந்தவியின்ரை வடியை வடிவாப் பாக்கிறான். அவன் கண் வைச்சதை கொத்தாமல் விடமாட் டான்"

" அதுபேய். எல்லாரையும் ஆவெண்டு பாக்கும். கந்தவி அறிஞ்சா மரியதாஸின்ரை கோமணம் தண்ணீக்கை மிதக்கும்"

நண்டுகளின் குரைகளை வலையில் இருந்து கழட்டிக்கொண்டு ஜோசப்புவும் அந்தோனியும் கதைப்பதை கனகமும் வள்ளிநாயகியும் காது கொடுத்துக்கொண்டிருந்தனர்.

"மரியதாஸின்ரை முறுக்கு மீசைக்குத்தானே எல்லாரும் மயங்கினம். கந்தவியின்ரை பேத்தை சூத்தையாகப் போகுது" வள்ளிநாயகி சொல்லிவிட்டு முகவியர்வையை சீலைத் தலப் பால் துடைத்தாள்.

"மரியதாஸின்ரை மீசையிலை உன்ரை தலைமயிரும் உரஞ்சினது தானே...?"

சொல்லிவிட்டு கனகம் கடைக்கண்ணால் வள்ளிநாயகியைப் பார்த்தாள். வள்ளிநாயகி சொண்டுக்குள் சிரித்து, கேளாதது மாதிரி சூடையை ஒரு கரையாகவும் மங்குமீனை ஒரு கரையாகவும் தெரித்துக் கொண்டிருந்தாள்.

மரியதாஸ் எல்லாப்பெண்களிலும் கண் போடுவான். வளையாததுகளை அப்படியே விடுவான். வளைந்தவர்களுக்கு புதுவருசம், பிறந்தநாள், கோயில் திருவிழாக்கள் என்றால் உடுப்புகள் எடுத்துக் கொடுப்பான். படும் மீன்களில் கறிக்கு அள்ளிக்கொடுப்பான். அவனிடம் காசு இல்லாமல் மீன்கள் வாங்கும் பெண்களை, ஒருநாள் மாதா கோயில் மதிலில் பட்டியலிட்டு யாரோ ஒட்டியி ருந்தார்கள். இதனால் ஊரே பெரிய கலவரப்பட்டது. கடைசியில் கனகம் தான், புருசனைக் கொண்டு ஒட்டியதாக கதை முடிந்தது.

கனகத்திலும் மரியதாஸ் கண்ணெ றிந்தான். அவன் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தும் கனகம் அவனின் குவளையில் தேநீராகவில்லை. கடைசியாக ஒருநாள் கனகம் மங்குமீனை குனிந்து கூறு போட்டுக்கொண்டு நிற்க, மரியதாஸ் காரல் மீனொன்றை அவளின் நெஞ்சுச் சட்டைக்குள் எறிந்தான். மார்புச் சட்டைக்குள் மீன் விழுந்ததும் எகிறி நிமிர்ந்தவள், சட்டையை இரு கைகளா லும் குலுக்கி மீனை கீழே விழுத்த, வள்ளிநாயகி கண்டு விட்டாள். வள்ளிநாயகி, அந்தோனிக்குச் சொல்ல அந்தோனி கள்ளுக்குடிக்கிற இடத்தில் பேதுருக்கு சொன்னான்.

பேதுருவுக்கு அதைக் கேட்டதும் அடுத்த போத்தலைக் குடிக்க மனம் வரவில்லை. மரியதாஸைக் குதறவேணும்போல இருந்தது. எடுத்துவைத்த அடுத்த போத்தலை நின்றவாறே ஐந்து மிடறில் இழுத்துவிட்டு, ஒரு ஏவறையோடு கிளம்பினான். கடற்கரை, மதகு, கோப்பறேசன் எல்லா இடமும் மரியதாஸைத் தேடினான். காணவில்லை. தெருவால் போகும்போது வள்ளிநாயகி வீட்டு வேலியால் மரியதாஸை எட்டிப்பார்த்தான். அவனின் சைக்கிள் இல்லை. அப்படியே வேதக்கோயில்கள் எல்லாம் தேடிய களையில், வீட்டுப் படலையைத் திறக்கும்போதே கன கத்தைக்கூப்பிட்டான். சூடைமீனைக் கீறி உப்புப் போட்டுக் கொண்டிருந்தவள் எழும்பிப் பார்த்தாள். இப்படி பேதுரு பெரிய சத்தமாக கூப்பிடுவதில்லை. பெரிய சத்தமாக கூப்பிட்டாலும் அதில் ஒரு பரிவு இருக்கும். ஆனால், இப்ப வந்த குரலில் கோபம் வாளாய் இருந்தது. சைக்கிளை மாமரத்தோடு சாற்றி விட்டு அவளுக்கு கிட்டபோனான்.

" மரியதாஸ் உனக்கு சட்டேக்கை மீன் விட்டவனாம்."

ஓங்கி கன்னத்தில் அறைந்தான். முப்பது நாட்களுக்குப் பிறகு மறந்ததை பேதுரு ஞாபகப்படுத்தினான். கனகம் எதிர்பார்க்க வில்லை பேதுருவின் கை கன்னத்தில் பதியும் என்று.

"எனக்கு முன்னாலையே நெஞ்சுச் சட்டயைப்பிடிச்சுக் கொண்டு குனியிறனி. மரியதாஸுக்கு முன்னாலை மறந்திட்டியே...?" அடித்ததை விட அந்த வார்த்தை அவளுக்கு வலித்தது. இதற்கு என்ன பதில் கூறுவதென்று அவளுக்குத் தெரியவில்லை.

"ஏன் வீண் சண்டையள் எண்டுதான் நான் சொல்லேலை" அவள் அழுதாள். பேதுரு மரியதாஸ்மேல் வைத்த கோபத்தை அவள் மேல் காட்டியதை நினைத்து



கவலைப்பட்டான். அந்தக் கவலை ஒரு நிமிடம் நீடிக்க வில்லை. அதை தனக்குச் சொல்லாமல் மறைத்தது பெருங்கோபம் என நினைத்த வன் வீட்டுக்குள் போய்ப்படுத் தான். இரவு சாப்பிடவில்லை. அன்று கடலுக்கும் போகவில்லை.

கனகம் தெரித்த மீன்களை வள்ளி நாயகியின் பெட்டிக்குள் போட, பூறாட்டி வந்தான். பூறாட்டி அந்தக் கடற்கரைக்கு செல்லப் பிள்ளை. காகங்கள் கூட அவனை நேசிக்கும். அவன் மீன்களோடு போனால் காகங்களும், நாய்களும் அவனுக்குப்பின்னால் செல்லும். அவன் விலைப்படாத சூடைகளை வாங்கி கருவாடு போடுவான்.

> **"மரியதாஸ் எல்லாப்பெண்களிலும் கண் போடு வான். வளையாததுகளை அப்படியே விடுவான். வளைந்தவர்களுக்கு புதுவருசம், பிறந்தநாள், கோயில் திருவிழாக்கள் என்றால் உடுப்புகள் எடுத்துக் கொடுப்பான். படும் மீன்களில் கறிக்கு அள்ளிக்கொடுப்பான்."**



மயில்வாகனத்தின் லொறி கிழமைக்கு கிழமை கருவாடு கொண்டு கொழும்புக்குப் போகும். அவன் கருவாடுகளை கிழமைக்கு கிழமை லொறிக்கு கொடுத்துக் கொண்டிருப்பான்

அவன் மீன்களை பெட்டியில் இட்டு, பொம்பிளைகள் போல சும்மாடு வைத்து தலையில் மீனைக்கொண்டுபோக அது ஒரு தனியழகு. வள்ளிநாயகி மாதிரி கைகளை வீசி வீசி நடக்க அழகாக இருந்தாலும் கனகத்துக்கு கவலை வரும். அவன் முன்பு நல்ல திடகாத்திரமானவன். மரதன் ஓட்டத்தில் களைக்காது பதினைந்து மைல் ஓடுவான். நிறையப் பதக்கங்கள் வாங்கினான். குத்துச் சண்டையில் அவனோடு போட்டி போடமுடியாது. பொலிகண்டி கந்தவனக் கோயிலில் வருடா வருடம் நடக்கும் சாகச விளையாட்டுக்களில் உழவு இயந்திரத்தை நெஞ்சில் ஏற்றுவான், பற்களால் காரை இழுப்பான், கொற்றாவத்தை நியூட்டன் விளையாட்டுக்கழகம் ஒவ்வொரு சித்திரை வருசத்தன்றும் நடத்தும் விளையாட்டுப்போட்டியில் வினோத உடைப் போட்டி யில் ஜே.ஆர். ஜெய வர்த்தனவின் நீளமான மூக்கு வேசம் போட்டு அனை வரையும் சிரிக்க வைத்து முதல் பரிசு வாங்கினான்.

நாடகமும் நடிப்பான். வைரமுத்துவின் அரிச்சந்திரா மயான காண்டம் எங்கு நடந்தாலும் முன்னுக்கு போய் இருப்பான். நவிண்டில் தங்கராசா பொம்பிளையோடு நடிக்கிறார் என்ற கதை பொலிகண்டி எல்லாம் அலைந்தது. ஆண்களோடு பெண்கள் நடிப்பதில்லை. கொழும்பில் இருந்து பொம்பிளையைக் கொண்டு வந்து நடித்த 'பவளவல்லி' நாடகம் பார்க்க வண்டில் பிடித்து ஊர்ச்சனங்களோடு பூறாட்டி போய்ப்பார்த்தான். அவனுக்கு பொம்பிளை வேஷத்தில் நடிக்க விருப்பம். குஞ்சர்கடையில் வள்ளுவர் விழாவில் நவரச நாயகன் செந்தில், தான் நடித்த நாடகத்தில் அவனுக்கு மைனா என்ற பொம்பிளைப் பாத்திரம் கொடுத்தார். அந்த நாடகத்தை இரவிரவாக பழகிவிட்டு, விடிய ஆவரங்காலில் நடந்த சைக்கிள் ஓட்டப் போட்டியில் பதக்கத்தை வென்றுவர வல்லையில் காருடன் மோதினான். கார் வல்லைப் பாலத்துக்குள் தூக்கி எறிந்தது. அதிலிருந்து இடுப்பு எலும்பு அரக்குப்பட்டு நடக்க முடியாமல் கிடக்க, கந்தவிக்கிழவன் ஒற்றைத் திருக்கல் வண்டிலில் அவனை ஏற்றிக் கொண்டுபோய் ஒட்டகப்புலத்தில் புக்கை கட்டினார். அவர் இல்லாது விட்டால் பூறாட்டி இப்ப அரக்கித் திரிவான். பத்துநாள் புக்கையும் குடிநீரும் நொச்சியும் ஆமணக்கு இலையுமே அவனை நிமிர்த்தி யது. ஆனால், நடை மட்டும் முன்பு மாதிரி இல்லை. நிமிர்ந்து நிற்கமாட்டான். சாதுவாக நாரி வளைவு. இடுப்புக் கொஞ்சம் பின்னுக்கு தள்ளி வேகமாக நடக்க சிரமப்படுவான். நடந்து போனால் பின்பக்கத்தசை இரண்டு பக்கமும் ஆடும். அவனின் நடையை வைத்து, பிலிப்பு ஒருநாள் கடற்கரையில்

"டேய் பூறாட்டி..."

என்று கூப்பிட்டான். அதற்குப்பிறகு அவனின் பெயர் பூறாட்டியாகியது. பொம்பிளைகளும் பூறாட்டி என்றே கூப்பிடுவார்கள். அவன் கோபிக்கமாட்டான். சிரித்தபடி "என்ன?" என்று கேட்பான். சாறத்தை கழட்டி வெயி லுக்கு தலையில் மொட்டாக்குப் போட்டு ஒரு தலப்பை வாயில் கௌவிக்கொண்டு பூறாட்டி நடந்து வர, பூங்கொடி, பூறாட்டியை விலத்திக்கொண்டு போனாள். கையில் கந்தவிக்கிழவனுக்கு பசுப்பாலும் வடையும் இருந்தது. மரியதாஸ் கட்டுமரத்துக்குக் கீழே இருந்து அவளை வைத்தகண் வெட்டாது பார்த்தான். அவள் மரியதாஸைக் காணவில்லை. பூறாட்டியும் காண வில்லை. அவள் விலத்திவிட்டுப்போக பூறாட்டி நின்று அவளைத் திரும்பிப்பார்த்தான். அவளின் காலில் இருந்து சட்டை வரைக்கும் பார்த்து ரசித்தான்.

"டேய் புறாட்டி..."

மரியதாஸ் கோபமாக கட்டுமரத்துக்குக் கீழே இருந்து கூப்பிட்டான். மரியதாஸ் இப்படிக் கோபமாக பூறாட்டியைக் கூப்பிடுவதில்லை. மரியதாஸ் மட்டுமல்ல எவரும் அவன்மேல் கோபத்தைக் கொட்டிய தில்லை. அவனின் சிரிப்பு கடற்கரை மணலில் எப்பவும் பூத்திருக்கும். மரியதாஸின் குரல் கேட்டதும் சாரத்தை இறுக்கிக் கட்டிக் கொண்டு மரியதாஸருகில் போனான். போகும்போது பயம் அவனைக் கௌவியது. இதயத்துடிப்பு எழுபத்தி ரண்டில் இருந்து தொண் ணூற்றெட்டுக்கு உயர்ந்தது.

"ஏனண்ணை கூப்பிட்டனீங்கள்?"

இடுப்பு சாரக்கட்டை ஒரு கையால் இறுக்கிப் பிடித்துக்கொண்டு பூறாட்டி நின்றான். கால்கள் உதறின.

"கந்தவிக்கிழவன் வீட்டை நீ போறனியோ?"

"இல்லை"

"அப்பேன் அவளைப் பாத்தனி?"

"சிரி...ச்...சவள்"

"சிரிச்சா பாக்கிறதே?"

"இல்லை... அது..." பூறாட்டி தடுமாறினான். மரியதாஸ் அவனின் கையைப்பிடித்து கட்டு மரத்துக்குள் இழுத்தான்.

(வருவாள்) ■

56

# மௌன மொழி கவிதைகள்

பரிசு பெறும் கவிதை



பட்டதெல்லாம் மாறவில்லை
பட்ட மரம் சுமக்கிறது
அழுத விழியாறும் ஓயவில்லை
உதடுகள் தானே சிரிக்கிறது
அம்மா வா நானி(மி)ருக்க
போற வழி தூரமில்லை – என்று
சுமந்த ரண்டை இறங்கிச் சுமக்க விட்டு
பசி போக்க சுமக்கிறது– இன்று

**எஸ்.அபிசாளினி**, மீசாலை

அன்று உயிர் அளிக்க
கருவில் சுமந்தவள்
இன்று உணவளிக்க
தலைப்பாரம் சுமக்கிறாள்
உன் பாசத்தை பங்கு போட்ட
கருவறை தோழர்கள் மட்டுமல்ல
உன் கஷ்டத்தை பங்கு போடும்
காவல் காரர்கள் நாம்

**தென்றல்**
யாழ்ப்பாணம்

உலகம் இன்று வறுமையுற்றுள்ளது
அன்பிலே வறிய வன்பாலை
உலகு செய்தோம் அன்பகத்தீர்
தயவு செய்து ஒரு பிடி அன்பு செய்வீரா?
அன்றைக்கு அம்மா சொல்லிடும்
எளிமையில் திசைகள் துலக்கமாய்
இருக்கும் பெயர் சொல்லும் படியான
காற்றுகளும் ஏதுமில்லை

**பா.கிசானி**, சாவகச்சேரி

முகத்தில் புன்னகையும்
அகத்தில் பாரமும் சுமந்து
தளைக்கும் துளிர்களுடன்
உழைப்பில் உறுதி மிகு தாயிவள்..!
தலைக்கு மேல் விலைவாசி
தாராளம் எகிறிடினும்
தொலையாது வாழ்வியலை
நிலைக்க வைக்கும் சந்ததிகள்...!

**மானியூர் ரட்ணேஸ்**

அகத்தின் சுமை முகத்தில் இல்லை
ஏழ்மையதன் கலக்கம் இல்லை
வறுமையினால் வாடவில்லை
சிறுமலர்கள் கரம் பிடித்து
சிறு புன்னகை சிந்தியே
தன் பயணம் தொடர்வாள்

**கா.கனிவிழி**
வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

**அடுக்கப்பட்ட விறகுகளில்**
**ஒடுக்கப்பட்ட வாழ்வியல்**
**புதைந்த சோகங்களில்**
**விளையப் பெற்ற புன்னகை**
**சந்தோசங்களை விதைக்க**
**தெரிந்தவன் வாழ்வின்**
**சாராம்சம் செருப்பில்லாத பயணம்**

**பத்மதாஸ் வாண்நிலவன்**

**தலைச் சுமையும்**
**எரிபொருள் விலையும்**
**நடைப் பயணமும்**
**கதைகள்பல கூறும்**
**சாண் ஏற முழம்**
**கண் காணவே சறுக்கும்**
**பொருளாதாரப் போக்கில்**
**கூட்டு முயற்சியே தொடரும்**
**துயரைச் சிறிது குறைக்கும்**

க.நாகராசா, சாவகச்சேரி

சிரசில் விறகேந்தியது
கொடிய மழைக்கா?
விதவைக் கூலிப்பெண்ணே!
கொடுவினைகள் சூழ்ந்ததால்
குடிசை அழிந்த
குடிப் பெயர்வா?
துயரிலும் துவளாது
சிரிக்கிறீரே!

**வரன்**, பண்டத்தரிப்பு

கணவனைக் காலன்
காவு கொள்ள
குடும்ப சுமை ஏற்று
விலைவாசி உயர்வால்
குடும்பத்தைப் பஞ்சம் வாட்ட
வயிற்றுப் பசி போக்கிடவே
தலைவி தலையில் விறகு
கொண்டும்
அண்ணன் தம்பி
இருவருமே பள்ளி மறந்தும்
பால் கூவி நிற்கின்ற
பரிதாப உலகம் இது

**கும்பவாழியான்**
உடுப்பிட்டி

**ஏழைத்தாயே நீ – உழைப்பாளி**
**ஏழ்மை வாழ்விலும் செம்மையாய்**
**வாழ வைக்க வந்த மானஸ்தீ**
**உலகெங்கும் கொரோனா**
**பிள்ளைச் செல்வங்களையும் உன்னையும்**
**காத்து நாட்டு உறவையும் காத்திடு அம்மணி**
**முகத்தில் தினமும் போடு மாஸ்க் திரை**
**விலைவாசி நடுவிலும்**
**உயர்ந்த தமிழிச்சி நீயம்மா!**

**முல்லை பரனிதா**



கருவிலே சுமந்த வலியது நீங்கள்
வந்துதித்த பிள்ளைகளுக்காக
வறுமையிலும் புன்னகை சிந்த
தலையில் விறகுக் கட்டுடன்,
இடுப்பிலே ஆகாரமும்
சுமந்தே தாய்க்கிலக்கணமாய்
செல்லும் தாயவள்,
முன்னே செல்லும் பிள்ளைகாள்! நீவீர்
நாளை உமக்காய்
வாழ்ந்த அன்னையவளை
சுமப்போம் எனத் திடங்கொள்வீரே!

**நற்குணராஜா தனுபதன்**
பெருமாள் கோவிலடி,
யாழ்ப்பாணம்

ஒத்தையடிப்பாதையில்
வாழ்வின் நிலவு
இரண்டுமொன்றாய்
முன் மகிழ்ந்து செல்லும் வேளை
எத்தனைசோகமும்
கலைந்தேபோகும்
தாய் மனம் நெகிழ்ந்து
சிரிக்கையில்
ஏழ்மையின் குறையும்
குடும்ப சுமையும்,
வெறுங்கால் நடையும்
தொலைந்தேபோகும்

**ஜெ.ஜெயமதுரா**
சாவகச்சேரி.

**உங்கள் கவிதைகள் எங்கள்**
**கதவைத் தட்ட**
**வேண்டிய கடைசி நாள்:**
**19.11.2021**

கவிதைக்கு பரிசு **1000/=**

57

*அனுப்ப வேண்டிய முகவரி:*
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: *sanjeevi@uthayan.com*
0773165555

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனையில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி தெளிவாக முகவரியை குறிப்பிட்டு அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌன மொழி பகுதியில் பிரசுரமாகும்.

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

# வாலில்லாத....

ஆனால் கொடுமை என்னவென்றால் அப்படி ஒரு யாப்புக் குறித்த வாக்குறுதி எதையும் தருவதற்கு சிங்கள மக்கள் மத்தியில் உள்ள எதிர்க் கட்சிகளும் தயாரில்லை, பெரும்பாலான லிபரல் ஜனநாயகவாதிகளும் தயாரில்லை. அல்லது பெரும்பாலான முற்போக்கு சக்திகளும் தயாரில்லை. இது விடயத்தில் பல்லினத்தன்மைமிக்க ஒரு கூட்டாட்சிக் கட்டமைப்பை ஏற்றுக்கொள்பவர்கள் யார் என்று பார்த்தால் அது சிங்கள பெரும்பான்மைக்குள் காணப்படும் மிக மிகச்சிறிய ஒரு சிறுபான்மைதான்.

அந்தச்சிறுபான்மை மிகவும் பலவீனமானது. அது சிங்கள பௌத்த பெருந்தேசியவாதத்தின் கூட்டு உளவியலில் சிறு சலனத்தையோ அல்லது சிறு நொதிப்பையோ ஏற்படுத்தும் சக்தியற்றது. அப்படிப்பட்டதொரு மிகப் பலவீனமான சிறுபான்மையோடு இணைந்து தமிழ்மக்கள் சிங்கள, பௌத்த பெருந்தேசியவாதத்தை தோற்கடிக்க முடியாது.

எனவே இப்பொழுது விடயம் மிகத் தெளிவாகத் தெரிகிறது. பரந்துபட்ட அளவிலான மக்கள் எதிர்ப்பு என்று பார்த்தால் அது முகமூடி அணிந்திராத இனவாதத்துக்கு எதிராக மனித முகமூடி அணிந்த இனவாதத்தோடு கூட்டுச் சேர்வதன் மூலம் மட்டும்தான் ஒப்பீட்டளவில் சாத்தியமாகக் கூடிய ஒன்றாகும்.

இதை இன்னும் தெளிவாகச் சொன்னால் சிங்கள பௌத்த ஒற்றையாட்சி கட்டமைப்புக்குள் மாற்றத்தை ஏற்படுத்த முடியாத அல்லது மாற்றத்தை ஏற்படுத்த விரும்பாத ஒரு மக்கள் இயக்கத்தைத்தான் பரந்துபட்ட அளவில் கட்டி எழுப்பலாம். அப்படி ஒரு மாற்றத்தைத்தான் மூவின மக்களும் சேர்ந்து 2015 இல் ஏற்படுத்தினார்கள்.

ஆனால் மூன்று ஆண்டுகளே நீடித்த அந்த மாற்றமானது ஒரு நகைச்சுவை நாடகமாக முடிவடைந்தது. இப்பொழுது மறுபடியும் சிவில் சமூகங்களோடு இணைந்து ஒரு கூட்டு



எதிர்ப்புக் குறித்து சிந்திக்கப்படுகிறது.


அரசாங்கத்துக்குள் இருக்கும் அதிருப்தியாளரான அமைச்சர் உதய கம்மன்பில கூறுகிறார் 'அரசாங்கம் இப்பொழுது வாலில்லாத ஒரு காளை மாடு 'என்று. மாட்டின் பலம் அதன் வாலில்தான் உண்டு என்று கூறப்படுவதுண்டு. அதேசமயம் வாலில்லாத மாடு இலையான்களையும் நுளம்புகளையும் கலைக்க முடியாது. இப்போதுள்ள நிலைமைகளின்படி அரசாங்கம் ஒரு பலமிழந்த காளை மாடா? அல்லது எதிர்க்கட்சிகள் இலையான்களா?

# சிறுவர் கைவண்ணம்






வ.மதுஜா,
தரம்: 7
யாழ் / இந்து மகளிர் கல்லூரி



நிதுஷனா,
தரம்: 5F
யாழ் / கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.



நிதுஷனா,
தரம்: 5F
யாழ் / கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.



கி.யதுசன்,
தரம்: 9
யா/ மகாஜனக் கல்லூரி



V. விசாகன்,
தரம்: 8D
யா/ மகாஜனக் கல்லூரி

# கல்லுக்குள்ளும் ஈரம்...!




உலகில் இன்று மிகப் பிரபலமாக இருப்பது ஏ.கே.47 துப்பாக்கி. இன்றளவும் நவீனமானதாக இது இருந்தாலும், 1947ஆம் ஆண்டே கண்டுபிடிக்கப்பட்டது. இதைக் கண்டுபிடித்தவர்தான் கலஷ்னிகோவ்.

தீவிரவாதிகள் மற்றும் போராளிகள் கைகளிலும் இந்த துப்பாக்கிதான் பிரதான ஆயுதமாக நடமாடி வருகிறது.

ஏ.கே. 47 என்பதன் விரிவாக்கம் அவ்தோமத் கலஷ்னிகோவா 47 என்பதாகும். 1947ல் இது கண்டுபிடிக்கப்பட்டதால் இதற்கு 47 என்று பெயரிடப்பட்டது.

ரஷ்ய இராணுவத்தில் இருந்தவரான கலஷ்னிகோவ், 2ஆம் உலகப் போரின்போது காயமடைந்து மருத்துவமனையில் படுத்திருந்தார். அப்போதுதான் அவரது மனதில் இந்தத் துப்பாக்கி குறித்த சிந்தனை தோன்றியது. அப்போது ஜெர்மனி வீரர்கள் தானியங்கித் துப்பாக்கிகளுடன் இருந்தனர். ஆனால் ரஷ்ய வீரர்களிடமோ சாதாரண துப்பாக்கிதான் இருந்தது. இதுதான் கலஷ்னிகோவை அதி நவீன தானியங்கித் துப்பாக்கியான ஏ.கே. 47ஐ கண்டுபிடிக்க உத்வேகமாக அமைந்தது.

கலஷ்னிகோ தனது கண்டுபிடிப்பு குறித்து, "எனது கண்டுபிடிப்புக்காக நான் பெருமைப்படுகிறேன். ஆனால் இன்று இந்தத் துப்பாக்கி தீவிரவாதிகளின் கைகளில் தவழ்வதுதான் எனக்கு வேதனையாக உள்ளது. இதை நினைக்கும்போது இந்தத் துப்பாக்கிக்குப் பதில் விவசாயிகளுக்கு உதவும் வகையிலான இயந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கலாமோ என்று நினைக்கிறேன் " என்று வருத்தப்பட்டு தெரிவித்திருந்தார். அதிபயங்கர ஆயுதத்தைக் கண்டுபிடித்தவரான கலஷ்னிகோவ், ஆரம்பத்தில் கவிஞராக வரவேண்டும் என விரும்பியவராம். ஆரம்ப காலத்தில் 6 கவிதைப் படைப்புகளையும் கூட அவர் உருவாக்கினாராம். "நான் பெரிய கவிஞராக வருவேன் என்று பலரும் நினைத்திருந்தனர். ஆனால் நான் இராணுவ வீரனாகி விட்டேன். மிகப் பெரிய துப்பாக்கியின் தந்தையாகவும் மாறிப்போய் விட்டேன்" என கலங்கினாராம். இவர் தனது 94 ஆவது வயதில் காலமானார்.



## பாடசாலை மணியோசை

பள்ளிக்கூட மணியோசை
படிக்கும் சிறாரின் தனியோசை
பள்ளி தொடங்கும் முன்னோசை
பள்ளி முடிந்த பின்னோசை!

ஒவ்வொரு பாட வேளைக்கும்
ஒலிக்கும் பள்ளி மணியோசை!
ஒவ்வோர் ஆசான் பாடத்தை
ஒழுங்காய் நடத்த மணியோசை!

இறை வணக்க மணியோசை
இடை வேளைக்கு மணியோசை
முறையாய் நண்பகல் உணவுண்டு
முடிக்க ஒலிக்கும் மணியோசை


## தொடர்மொழிக்கு ஒரு மொழி

சுதந்திரமற்று வாழ்பவர்
**அடிமை**
கட்டட வேலை செய்பவன்
**கொத்தன்**
ஆடு மேய்ப்பவர்
**இடையன்**
வீண் செலவு செய்பவர்
**ஊதாரி**
சிறைத்தண்டனை பெற்றவர்
**கைதி**
மனைவியை இழந்தவர்
**தபுதாரன்**
கணவனை இழந்தவள்
**விதவை**
பயணச்சீட்டு வழங்குபவர்
**நடத்துநர்**
முனிவர்கள் வாழும் இடம்
**ஆச்சிரமம்**

# விடுகதைகள்


1. நெருப்பில் பட்டுச் சிவந்தவனுக்கு நீண்ட ஆயுள் அவன் யார்?
**செங்கல்**
2. உரித்த முயல் ஊருக்குப் போகுது அது என்ன?
**தேங்காய்**
3. ஆயிரம் நூல் பின்னலை அள்ளி அள்ளி தின்னலாம் அது என்ன?
**இடியப்பம்**
4. விரலோடு வளர்ந்தவன் வீணாகிப் போனான். அவன் யார்?
**நகம்**
5. பொந்துக்குள் இருந்து வம்புக்கு இழுப்பான் அவன் யார்?
**நாக்கு**


**பரமேஸ்வரன் தனிஷ்கா**,தரம் 3,
யா/இந்து ஆரம்பப் பாடசாலை.





## வழிகாட்டுவோம்






# யாழ்ப்பாண வரலாறு

1505-1948 வரை

○ ந.பரமேஸ்வரன்



**புங்குடுதீவு**

காரைதீவில் ( காரைநகர்) இருந்து புறப்பட்டு புங்குடுதீவை அடையலாம். காரைதீவில் பாம்புகள் அதிகம். காரைதீவில் வைத்து எமது கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்புகிறோம். புங்குடுதீவு காரைதீவை விட நன்றாக உள்ளது. சற்றுப் பெரிய தீவு. இங்குள்ள மக்கள் யாழ்ப்பாணத்தின் ஏனைய பிரதேசங்களில் வாழும் மக்களை விட உயரமானவர்களாகக் காணப்படுகின்றனர். இங்கு மான்,மரை,காடை,கௌதாரி என்பன காணப்படுகின்றன. இங்குள்ள தேவாலயத்தில் 200 மாணவர்களும் 800 நற்செய்தியாளர்களும் உள்ளனர்.

**அனலைதீவு**

அனலைதீவு சிறிய தீவு. போர்த்துக்கீசர் காலத்தில் போர்த்துக்கீசப் பெண்மணி ஒருவர் இங்கு இருந்துள்ளார். இவர் இருப்பதற்கென கதிரை ஒன்றும் இருந்துள்ளது. இந்தக்கதிரையில் ஒரே நேரத்தில் இரண்டு பேர் வசதியாக அமர முடியும்.

**நயினாதீவு**

நயினாதீவில் நரிகள் காணப்படுகின்றன. நயினாதீவுவாசிகள் சுத்துமாத்துக்காரர்களாக காணப்படுகின்றனர்.( ஒரு வேளை ஒல்லாந்தருக்கு பிடிக்காதவற்றை நயினாதீவு மக்கள் செய்ததால் அவர் இப்படிக் குறிப்பிட்டிருக்க கூடும்) இங்குள்ள பிராமணர்கள் சிலரை நான் மதம் மாற்றினேன். இங்கு சிறிய தேவாலயம் ஒன்றுள்ளது. இங்குள்ள தேவாலயத்தில் 70 மாணவர்களும் 300 நற்செய்தியாளர்களும் உள்ளனர்.

**நெடுந்தீவு**

நெடுந்தீவை போர்த்துக்கீசர் பசுந்தீவு என அழைத்தனர். இங்கு ஒரு பசுமாடு ஒரு றிக்ஸ் டொலருக்கு அல்லது நான்கு டச்சு ஷில்லிங்குக்கு வாங்கலாம். இங்கு பெரிய இனப்பசுக்களும்,எருதுகளும்,ஆடுகளும் காணப்படுகின்றன. போர்த்துக்கீசர் குதிரைகளைக்கொண்டு வந்து இங்கு வைத்து வளர்த்துள்ளனர். இந்தக்குதிரைகள் சிறிய இனக்குதிரைகளாகக் காணப்டுகின்றன ஆனால் பலம் வாய்ந்த குதிரைகள். நெடுந்தீவில் வறுமை தாண்டவமாடுகிறது. மக்கள் உணவுக்காகப் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். நாங்கள் இந்தத்தீவில் எட்டு நாட்கள் தங்கியிருந்தோம். அந்த எட்டு நாட்களும் எமக்குத் தேவையான உணவைப் பெற்றுக்கொள்வது மிகவும் கடினமாக இருந்தது. இங்கு போர்த்துக்கீசரின் கோட்டை ஒன்று சிதிலமடைந்த நிலையில் உள்ளது. இங்குள்ள தேவாலயத்தில் 190 மாணவர்களும் 900 நற்செய்தியாளர்களும் உள்ளனர்.



### ஆளுநருக்கு அனுப்பிய அறிக்கை

1623 ஆம் ஆண்டு எனது சகபாடி ஜோன் பிரெய்ல் கிழக்கிந்தியக் கம்பனியின் யாழ்ப்பாண ஆளுநர் ஜெனரல் மற்சூக்கருக்கு பின்வரும் அறிக்கையை அனுப்பினார். "யாழ்ப்பாண பட்டினத்தில் தற்போது 15,013 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இவர்கள் அனைவருமே உள்ளூர்வாசிகள். (மன்னார்,வன்னி என்பன இதில் உள்ளடக்கப்படவில்லை) இந்தத் தீவுகளுக்கருகில் மேலும் சில தீவுகள் காணப்படுகின்றன. ஒரு தீவிலும் நல்ல தண்ணீர் இல்லை.

நாங்கள் 1658-1661 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் 62, 558 பேரையும் 2, 587 அடிமைகளையும் வன்னியில் 4,533 பேரையும் 214 அடிமைகளையும் மன்னாரில் 3, 520 பேரையும் மதம் மாற்றினோம்.

மன்னாரில் தோட்டவெளி,மாந்தோட்டம்,எருக்கலம்பிட்டி போன்ற இடங்களிலும் வன்னியில் பல்லவராயன்கட்டு,பூநகரி போன்ற இடங்களிலும் தேவாலயங்களை அமைத்துள்ளோம். இங்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 10.00 மணிக்கு வருமாறு உள்ளூர்வாசிகளை அழைத்துள்ளோம். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 10.00 மணிக்கு எமது போதகர்கள் தமிழில் ஆராதனை நடத்துகின்றனர்"

### யாழ்ப்பாணத்தவர்கள்

இந்த இடத்தில் யாழ்பாணத்தைப் பற்றியும் சொல்ல வேண்டிய தருணம் வந்து விட்டது. யாழ்ப்பாணத்தில் வெள்ளாளர் ஆதிக்கம் செலுத்துகின்றனர். இவர்கள் வேட்டியைப் பஞ்சகச்சமாக அணிந்திருக்கின்றனர். தோளில் முட்டக்கூடியதாக காதில் தோடு அணிந்துள்ளனர். மடியில் வெற்றிலைப்பெட்டி ஒன்று காணப்படும். அதற்குள் கத்தி ஒன்றும் இருக்கும். யாழ்ப்பாணத்தில் சிறந்த முறையில் வெற்றிலை, பழவகைத் தோட்டங்களை அமைத்து அதற்கு சிறந்த முறையில் நீர் பாய்ச்சுகின்றனர். கால்நடைகளை சிறந்த முறையில் பராமரிக்கின்றனர். பகலில் மேய விட்டு இரவில் பட்டியில் அடைக்கின்றனர். ஆனால் மாரி காலத்தில் பட்டியில் அடைப்பதில்லை. கால்நடைகள் அயலவர்களின் பயிர்களைச் சேதப்படுத்தினால் அதற்குரிய நட்ட ஈட்டை கால்நடைகளின் உரிமையாளர் கொடுக்க வேண்டும். வருடத்தில் இருமுறை பயிர் செய்கின்றனர். பெரும்போக அறுவடை ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் நடைபெறும்.

இங்குள்ள எருமைகள் கொம்புகளை சேற்றுக்குள் புதைத்தவாறு படுத்திருக்கும். மத்தை உபயோகித்து தயிரைக்கடைந்து வெண்ணெய் எடுக்கின்றனர். இங்குள்ள முஸ்லிம்களும் வெண்ணெயை விரும்பிச்சாப்பிடுகின்றனர். காய்ச்சல்,சின்னமுத்து போன்ற நோய்களுக்கு மருந்தாக மோரை பயன்படுத்துகின்றனர். வெள்ளாளர்கள் தமது குடும்பத்தை விட்டு வெளியே திருமணம் செய்ய மாட்டார்கள். பிராமணர்கள் ஒழுக்கம் நிறைந்தவர்களாக காணப்படுகின்றனர். தினமும் இரண்டு தடவை குளிப்பார்கள்; இவர்கள் மது அருந்துவதில்லை. இவர்களும் தமது குடும்பத்தை விட்டு வெளியே திருமணம் செய்ய மாட்டார்கள். பஞ்சாங்கத்தை வைத்து நட்சத்திரங்களின் நிலையையும் கிரகணங்களையும் அறிந்து கொள்வார்கள். நான் அவர்களிடம் உலகத்தின் தோற்றம் பற்றி கேட்டேன். உலகம் தோன்றி இப்போது 5, 425 வருடங்கள் ஆகின்றன என்று சொன்னேன். அவர்கள் இப்போது கலியுகம் 4, 864 ஆம் ஆண்டு என்று சொன்னார்கள். அதற்கு முன்னர் கிரேதாயுகம்,திரேதாயுகம்,துவாபரயுகம் என மூன்று யுகங்கள் இருந்ததாகவும் கூறுகின்றனர். அவர்களது கணிப்புக்கும் எமது கணிப்புக்குமிடையே சிறு வேறுபாடு காணப்படுகிறது எனினும் இரண்டும் (கலியுகம் - 4864, ஒல்லாந்தரின் கணிப்பு - 5425)ஒத்து வருகின்றன.

*(வரலாறு நீளும்)*

# மலாலா!

சொன்னது என்னாச்சு?



○ ஆர்.பிரகாஷ்

பிரபலங்களாக இருப்பதொன்றும் அவ்வளவு இலகுவான விடயமல்ல. சாதாரண மக்கள் கூறுகின்ற கருத்துக்களைப் போன்றோ அல்லது வெளிப்படுத்துகின்ற நிலைப்பாடுகளைப் போன்றோ பிரபலங்களின் கருத்துக்கள் மற்றும் நிலைப்பாடுகள் கையாளப்படாது. 'கழுகுப் பார்வை' என்பார்களே அவ்வாறானதொரு பார்வை அவர்கள் மீது எந்நேரமும் செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கும். சொல் ஒன்று செயலொன்றாக அமைந்துவிட்டால் அல்லது முன்பின் முரணான கருத்துக்களை, நடைமுறைச் சாத்தியமற்ற கருத்துக்களைத் தெரிவித்துவிட்டால் அவ்வளவும்தான். சர்வதேச ஊடகங்கள் தொடக்கம் சமூக ஊடகங்கள் வரை தேனீக்கள் போல குறித்த நபரை மொய்த்துக்கொள்ளும். இவ்வாறான சம்பவமொன்று தற்போது நோபல் பரிசு வெற்றியாளர் மலாலாவுக்கு நிகழ்ந்துள்ளது.

இந்த வருடத்தில் மத்திய பகுதியில் சர்வதேச ஊடகமொன்றுக்கு மலாலா நேர்காணலொன்றை வழங்கினார். அதில், திருமணம் தொடர்பில் அவரிடம் கேட்கப்பட்டது. இதற்குப் பதில் வழங்கிய மலாலா, 'மக்கள் ஏன் திருமணம் செய்துகொள்கின்றனர் என்று எனக்குப் புரியவில்லை. இருவர் தம் விருப்பப்படி சேர்ந்து வாழ்வதற்கு எதற்காக ஓர் ஆவணத்தில் கையொப்பமிட வேண்டும். ஒப்பந்தத்தில் இணைவதுபோன்ற இந்த நடவடிக்கை ஏன்?' என்று கேட்டிருந்தார். மலாலா ஒரு பெண்ணியவாதி, அத்துடன் பெண்களின் கல்வியை வலியுறுத்தும் போராளி. இதனால், மலாலாவின் கருத்து கூடிய முக்கியத்துவம் கொடுத்துப் பார்க்கப்பட்டது.

ஆனால் எவரும் எதிர்பாராதவகையில், இந்த வாரம் திருமண பந்தத்தில் மலாலா இணைந்துள்ளார். மலாலாவும் அவரின் கணவரும் திருமணப் பத்திரத்தில் கைச்சாத்திடும் ஒளிப்படங்கள் வெளியாகியுள்ளன. இது போதாதா (?). இப்போது சமூக வலைத்தளங்களிலெல்லாம் மலாலா பற்றிய பேச்சுத்தான். 'திருமணத்தில் இணைவதற்கு ஏன் கைச்சாத்திட வேண்டும்' என்றுதானே மலாலா கேட்டார். தான் திருமணத்தில் இணையும்போது இவ்வாறு கைச்சாத்திட மாட்டேன் என்று அவர் கூறவில்லையே என்று மலாலாவின் தீவிர விசிறிகள் வாதிடாமலில்லை. மலாலாவின் பக்கமுள்ள நியாயத்தை அவர்கள் எடுத்தியம்பவே செய்கின்றனர். ஆனால், ஒரு விடயத்தைக் குறிப்பிடுபவர் முதலில் முன்மாதிரி யாக வாழ்ந்து காட்டவேண்டுமல்லவா? அகிம்சையைப் போதிக்கும் ஒருவன் முதலில் தான் அகிம்சாவாதியாக இருக்க வேண்டும் அல்லவா? இதுதான் மலாலாவின் விடயத்தில் நடந்துள்ளது. அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ட்ரம்ப் இவ்வாறான சர்ச்சைகளில் சிக்கிக்கொள்வதில் பிரபலமான வர். அகதிகளை அருவருக்கத்தக்கவர்கள் என்றார் பின்னர் அப்படிச் சொல்லவில்லை என்பார், கறுப்பினத்தவர்கள் எலிகளைப் போன்றவர்கள் என்றார் பின்னர் கறுப்பினத்தவர்களின் மாநிலங்களுக்குச் சென்று அங்கு தேர்தல் பரப்புரைகளை முன்னெடுத்தார்.



ஆயினும் இவ்வளவு பாரதூரமாக மலாலாவின் விவகாரம் செல்லவில்லை என்பதை நினைத்து தற்போது ஆறுதற்பட்டுக் கொள்ளலாம். வெறும் சொற்களில் மட்டும் வாழ்பவர்களின் நிலை யதார்த்த உலகில் சந்திசிரிக்க வைத்துவிடும். இப்போது மலாலாவுக்காக சந்தி சிரிக்கிறது.


# கற்றல் குறைபாட்டின் முக்கிய வகைகள்



நலம் அறிய...

எனது மகனுக்கு 7 வயது பாடசாலை செல்வதில் நாட்டத்துடன் உள்ளான். நோய் நொடி ஏதுமின்றி ஆரோக்கியமாக இருக்கிறான். கேள்வித்திறனில் பார்வையில் பேசுவதில் எதிலும் சிக்கல் இல்லை. பிரச்சினை என்னவென்றால் கணிதம் எண்களைக் கூறுவது உள்வாங்குவது கூட்டல் கழித்தல் போன்றவற்றை அறவே செய்வதில்லை இதனால் புள்ளிகளும் மிகக் குறைவாக இருக்கின்றது பல ரியூசன்கள் அனுப்பியும் பலனில்லை. இப்பொழுது இது உளவியல் பிரச்சினையாக மாறுவது போன்ற மன நிலை தோன்றியுள்ளது. கணிதம் சம்பந்தமான கதை வந்தாலே கோபமடைகின்றான். வித்தியாசமாக இருக்கின்றான். கணிதம் தவிர்ந்த மிகுதி எல்லாவற்றிலும் எவ்வித சிக்கலுமில்லை. அயல் வீட்டில் இவனது வயதொத்த சிறுமி இருக்கிறாள். அவள் இவ்வாறு இருப்பதில்லை. கணவர் இது மானோவியாதி என்று கூறுகின்றார். இது உளவியல் பிரச்சினையா? இதற்கான தீர்வு தான் என்ன? மிகவும் குழப்பத்திலுள்ளேன் பதிலளியுங்கள் டாக்டர்.

**யமுனா**, தொண்டமனாறு



**Dr.ப்ரியா கமலசிங்கம்,**
சுகாதார வைத்திய அதிகாரி,
கண்டாவளை, கிளிநொச்சி

**1.Dyslexia டிஸ்லெக்கியா**

மிகவும் பொதுவான கற்றல் குறைபாடு. குறித்த மொழியினடிப்படையில் வார்த்தைகளை அடையாளம் காணுதல் , புரிந்து கொள்ளுதல், உள்வாங்கிக் கொள்வதிலும் சிரமம் மிகவும் மெதுவாகவே இவர்களால் வாசிக்க முடியும் கட்டுக்கடங்கத எழுத்துப் பிழைகளை மேற்கொள்வர். குறித்த வார்த்தையை அது சம்பந்தமான ஒலியுடன் ஒருங்கிணைத்து சொல்ல முடியாதி ருப்பர்.

**2. (Dyscalculia) டிஸ்கல்கூலியா**

கணிதத்தில் மிகவும் பலவீனமாக இருப்பர் எண்ணுதல் குறியீடுகளைப் புரிந்து கொள்ளுதல், கணக்குகளைத் தீர்த்தல் முதலியவற்றில் மந்த நிலை காணப்படும்.


**3. (Dysgraphia) டிஸ்க்ராபியா**

குறித்த வார்தையை தரப்பட்ட இடைவெளியில் எழுதவியலாதிருப்பார்.
எழுத்து பிழையின்றி எழுதமாட்டார்கள்.
எழுத்துக்களின் வடிவங்களிலும் சிரமப்படுவர்.
நினைப்பதை எழுத்து வடிவத்துக்கு மாற்றுவதிலுள்ள மந்த நிலை.

**4. (Auditory & Visual Processing Disability) கேள்திறன் , பார்வைப்புல ஒருங்கிணைப்பில் கோளாறு**

பார்வை திறன், கேள்திறன் இரண்டிலும் எதுவித குறைபாடுமின்றி சாதாரணமாக இருக்கும் சிறுவன் ஒருவனால் பார்த்த கேட்ட விடயத்தைக் கற்றலில் ஈடுபடுத்த இயலாத நிலை.





## கற்றல் குறைபாடு ஏற்படக் காரணங்கள்

1. பரம்பரை
2. சரியான ஊட்டச்சத்தின்மை
3. கருவுற்றிருக்கும் போது அதீத மது, புகைப் பிடித்தல், கருப்பையினுள் அதீத வளர்ச்சி குறைபாடு (Severe intruterine growth retradtion)
4. (Psychological trauma) உளவியல் தாக்கம் / வன்முறை
5. (Physical trauma) விபத்துக்களால் ஏற்படும் நரம்பியல் மூளைக் குறைபாடு

கற்றல் குறைபாடு என்பது 95% குழந்தையொன்று பாடசாலைக்கு சென்ற பின்னரே தெரியவரும் விடயமாக காணப்படுகின்றது. ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு பிரச்சினை ஏற்படுவதாலும் ஒவ்வொரு குழந்தையின் வளர்ப்பு சூழல் வேறுபடுவதாலும் இனங்காணுதல் கடினமாகிறது.

இந்தக் கற்றல் குறைபாடு தாமதமாக கண்டறியப்படுதல் சிறாரின் விருத்தி உளவியல் பிற்கால திட்டம் வேலை முதலியவற்றில் கடும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. அத்துடன் மருத்துவர்களாகிய எங்களுக்கு சிகிச்சையின் பாலபலனிலும் சிக்கலையும் தாமதத்தையும் ஏற்படுத்துகின்றது.

**(Early warning signs of Learning disability)**
**கற்றல் குறைபாட்டின் எச்சரிக்கை அறிகுறிகள்**

**(Pre Schoolers) (2-3 வயது)**

1. பிற குழந்தைகளுடன் ஒப்பிடுகையில் தாமதமாக கதைக்க ஆரம்பித்தல்
2. உச்சரிக்க கஷ்டப்படுதல் (Pronounciation Problems)
3. சரியான அல்லது தகுந்த சொற்களை தெரிவு செய்வதில் சிரமம் இதனால் கதைப்பது குறைவடைதல்
4. ரைமிங் சொற்களை சொல்வதில் சிரமம்.
5. எண், வடிவம், நிறம் போன்றவற்றை அறிவதில் சிரமம்
6. கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதில் சிரமப்படுதல்
7. Motor Difficulties பென்சிலால் எழுதுவது, சட்டைப் பொத்தனை சரியாக பூட்டுவது, காலணியின் லேசை (Shoe laces) கட்டுவது போன்ற விடயங்க்ளில் இயலாமை
8. Restless ஓய்வின்றி பரபரப்பொன்றுடன் காணப்படுவது/ அமைதியின்றி இருத்தல்
9. சமூக தொடர்பாடலில் சிரமப்படுதல்

**(Early Childhood - Pre teen) சிறார்கள் (4-8) வயது**

1. அடிப்படையான சொற்கள் பெரும்பாலும் வினைச் சொற்களில் குழப்பம்/தடுமாற்றம்
2. ஓய்வின்றி/ கவனச் சிதறல் அளவுக்கதிகமாக இருத்தல்
3. (Clumsy) ஒழுங்குபடுத்தப்படும் தன்மையின்றி இருத்தல்
4. எழுத்துக்கும் அந்த எழுத்துக்குண்டான ஒலிப்புக்கும் உள்ள தொடர்பை புரிந்து கொள்ள இயலாமை
5. தொடர்ச்சியாக எழுத்துக்கூட்டி வாசிக்க இயலாமை
6. வார்த்தை ஒன்றை/ சொல் ஒன்றை மாற்றி எழுதுதல்/ சொல்லுதல்.
7. கணிதத்தை கற்பதில் சிரமம் குறியீடுகளை (×, ÷, % , =) புரிந்து கொள்ளாமை
8. விடயமொன்றின் பொருளை/கருத்தை உள்வாங்காது மனப்பாடத்தின் வழி கற்க முடிதல்
9. புதியவற்றை கற்பதில் மந்த நிலை
10. நினைவுகூருதல் Recallign சிரமமாக இருத்தல்
11. ஒலியின் அடிப்படையில் சேர்த்து வார்த்தை ஒன்றை உருவாக்க இய[illegible]து இருத்தல்
12. நேர காலத்தில் குழப்பம்
13. தெளிவற்ற வாசிக்க முடியாத அளவுக்கு உள்ள கையெழுத்து (Poor hand writing)
14. வழிகாட்டல்கள்/கட்டளைகளை தவறாக பின்பற்றுதல்

இவ்வகையான குறைபாடுள்ள குழந்தைகள் ஒன்றையோ பல்வேறு மேற்சொல்லப்பட்ட குறைபாடு ஒன்றுக்கு மேற்பட்டதையோ கொண்டிருக்கலாம் . அத்துடன் சேர்த்து,

1. **விளைவுகளைப் பற்றி சிந்தித்துப் பாராத செயற்பாடுகள்**
2. **சமூக/பாடசாலைத் தொடர்பாடலில் தேவையற்ற நடிப்பு**
3. **அதிக கவனச்சிதறல்**
4. **ஒரு விடயத்தில் ஒருமுகப்படுத்துவதில் சிக்கல்**
5. **ஒரு சொல்லை சத்தமாக சொல்ல இயலாமை**
6. **தாங்கள் நினைப்பதை சரியாக வெளிப்படுத்த இயலாமை (Difficulty in Express)**
7. **கதைப்பதில் சில வேண்டிய சொற்கள் விடுபடுதல்**
8. **சுருக்கமாக கதைத்தல்**
9. **நேர மாற்றம், அட்டவணை மாற்றம் முதலியவற்றுடன் ஒத்துச் செல்ல முடியாமை**

மேற்கூறிய அறிகுறிகள் எதுவாயினும் தொடர்ந்து 05 மாதங்கள் வரை தொடர்சியாக காணப்பட்டால் உடனடியாக அலட்சியப்படுத்தாது ஆசிரியர்,பெற்றோர் ஆரம்ப கட்ட சிகிச்சையை அணுக வேண்டும் .


குழந்தைகள் சிறப்பு மருத்துவர் உங்களின் குழந்தையை பரிசோதித்து பிரச்சினையை உறுதி செய்தபின் உளவியல் நிபுணர் ஸபீச் தெர்பிஸ்ட் போன்ற வேறு பல சிகிச்சை நிபுணர்களுடன் கலந்தாலோசித்து உங்கள் குழந்தைக்கு உரிய சிகிச்சையை அளித்து குறைபாட்டை நிவர்த்தி செய்வர். பெற்றோர் இத்தகைய சிறாருடன் கூடிய நேரம் செலவளிப்பது அவசியமாகிறது.

**Left hander skills**

இடக்கையால் எழுதுவது கூடப் பயன்படுத்தவது என்பது ஒரு குறைபாடல்ல இதை கண்டிக்கவோ கட்டுப்படுத்தவோ ஆசிரியர் முயல தேவையில்லை இது சாதரணமான ஒரு விடயம் என்பதை பெற்றோர் புரிந்து கொள்ள வேண்டும்.

# அறிந்தும் அறியாமலும்

○ சூரியன்



## மாலைதீவுடன் சமர்!

இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் கிரிக்கெட் போட்டித்தொடரொன்றை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

ரி 20 உலகக்கிண்ணத் தொடரில் அரையிறுதிப் போட்டியில் இங்கிலாந்து மற்றும் நியூஸிலாந்து அணிகள் அண்மையில் மோதின. இந்தப்போட்டியானது அலரிமாளிகையில் பிரமாண்டமானதொரு திரையில் ஒளிபரப்பப்பட்டது. இந்தப் போட்டியைக் காண்பதற்கு மாலைதீவு விளையாட்டுத்துறை அமைச்சர் மற்றும் நியூஸிலாந்து தூதரகத்தின் அதிகாரிகள் சிலரும் வந்திருந்தனர். ஆளுங்கட்சியின் இளம் எம்.பிக்களும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளின் எம்.பிக்களுக்கிடையில் கிரிக்கெட் போட்டித்தொடரொன்றை நடத்தும் அழைப்பை மாலைதீவு விளையாட்டுத்துறை அமைச்சர் விடுத்தார். இதற்கு இலங்கை தரப்பிலும் பச்சைக்கொடி காட்டப்பட்டுள்ளது.

மாலைதீவில் நடைபெறும் போட்டிக்கான செலவை அணியில் பங்கேற்கும் மாலைதீவு நாடாளுமன்ற உறுப்பினர்களும், இலங்கையில் நடைபெறும் போட்டிக்கான செலவை இலங்கை அணியில் இடம்பெறும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொறுப்பேற்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. மாலைதீவு செல்லும் அணியைத் தெரிவுசெய்வதற்காக இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் கிரிக்கெட் தொடரொன்று நடத்தப்படலாம். இரு நாடுகளின் எம்.பிக்களுக்கிடையிலான இந்தப்போட்டித்தொடர் எப்போது நடைபெறும் என அறிவிக்கப்படவில்லை. எனினும், அடுத்த வருடம் ஆரம்பத்தில் இடம்பெறலாம் எனத் தெரியவருகின்றது.



## ஹிருணிக்காவின் சபதம்!

2020 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் கொழும்பு மாவட்டத்தில் களமிறங்கிய ஹிருணிக்கா பிரேமசந்திர மண்கவ்வியிருந்தார். தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்தால், தேசியப் பட்டியல் ஊடாக வாய்ப்பு வழங்கப்படமாட்டாது என்ற ஐக்கிய மக்கள் சக்தியின் முடிவால் நாடாளுமன்ற அரசியலைத் தற்காலிகமாக கைவிட வேண்டிய நிலைமை ஹிருணிக்காவுக்கு ஏற்பட்டது.

அதனால் அவர் தீவிர அரசியலில் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொண்டார். கட்சியால் நடத்தப்படும் மகளிர் மாநாடு உள்ளிட்ட முக்கியமான சில நிகழ்வுகளில் மட்டுமே பங்கேற்றுவந்தார். இதனால் ராஜபக்ச தரப்புடன் ஹிருணிக்கா இணையப்போகின்றார் என்றெல்லாம்கூட அரசியல் களத்தில் கதைகள் அடிபட்டன. ஆனாலும் ஹிருணிக்கா மௌனம் காத்தார். அவரின் மௌனத்தைக்கூட சிலர் தாவலுக்கான சமிக்ஞையாகவே சுட்டிக்காட்டிவந்தனர். எனினும், தற்போது தீவிர அரசியலில் மீண்டும் தீயாக இறங்கியுள்ளார் ஹிருணிக்கா. ஐக்கிய மக்கள் சக்தியின் கடுவலை தொகுதி அமைப்பாளர் பதவியை பொறுப்பேற்றுள்ள அவர், சஜித் தலைமையில் அண்மையில் மாபெரும் எதிர்ப்புக் கூட்டமொன்றை நடத்திக்காட்டினார். அரசியல் ரீதியிலான வதந்திகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்தார்.

தான் சஜித் அணியில்தான் பயணிப்பார் எனவும், சஜித்தை ஜனாதிபதியாக்க பாடுபடுவார் எனவும் ஹிருணிக்கா சபதமெடுத்தார். 2023 இல் ராஜபக்ச ஆட்சி கவிழும் எனவும் அவர் ஆருடம் கூறியுள்ளார். கடுவலையை கைப்பற்றபோவதாகவும் அவர் சூளுரைத்துள்ளார். ஆக ஹிருணிக்காவின் அதிரடி அரசியல் ஆட்டத்தை இனிவரும் நாட்களில் காணலாம்.





## அரசியல் தியாகம்!

“கட்சியைப் பலப்படுத்தக்கூடிய ஒருவருக்கு பிரதித் தலைவர் பதவியை விட்டுக்கொடுப்பதற்கு நான் தயார். கட்சிக்காக இந்த தியாகத்தை நாளை வேண்டுமானாலும் செய்வேன்.”

இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன அதிரடியாக அறிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றுள்ளது. இதன்போது நவீன் திஸநாயக்க, அர்ஜுன ரணதுங்க, தயா கமகே உள்ளிட்டவர்களை முழுமையாக கட்சிக்குள் உள்வாங்க வேண்டும், அதற்காக அவர்கள் முன்வைத்துள்ள நிபந்தனைகளை ஏற்க வேண்டும் எனக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கட்சி செயலாளர், தலைவர் பதவிகளைத் தவிர ஏனைய பதவிகள் மறுசீரமைக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அவ்வேளையிலேயே பிரதித் தலைவர் பதவியைக்கூட விட்டுக்கொடுக்க நான் தயார் என ருவான் அறிவித்துள்ளார். பொதுச்செயலாளர் பதவியை வழங்க நானும் தயார் என அகில விராஜ் காரியவசம் அறிவித்துள்ளார். இவர்களின் இந்த விட்டுக்கொடுப்புகளுக்குப் பின்னராவது யானைக்கு தெம்பு வருமா?


## ‘வெற்றிலை’க்கு உயிர் கொடுக்கும் மைத்திரி!



ராஜபக்சக்களுக்கு அரசியல் களத்தில் பல தேர்தல் வெற்றிகளை பெற்றுக்கொடுத்த சின்னமே வெற்றிலைச் சின்னம். அதனால்தான் ‘வெற்றியின் சின்னம், வெற்றிலைச் சின்னம்’ என முன்னர் மஹிந்த ராஜபக்ச அடிக்கடி குறிப்பிடுவார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சின்னமே இந்த வெற்றிலை . இந்த கூட்டணிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியே தலைமைத்துவம் வழங்கியது. மொட்டுக் கட்சி உதயமாகிய பின்னர் ராஜபக்சக்கள் மட்டுமல்ல பெரும்பாலானவர்கள் இந்தக் கூட்டணியை மறந்துவிட்டனர்.

எனினும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு புத்துயிர் கொடுக்கும் முயற்சியில் சுதந்திரக்கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தீவிரமாக இறங்கியுள்ளார். அரசியல் கட்சிகளையும், சிவில் அமைப்புகளையும் இக்கூட்டணியில் இணைத்துக்கொள்வதற்கான நகர்வுகளை முன்னெடுத்துவருகின்றார். அந்தவகையில் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தாத சிறு கட்சிகளுடன் பேச்சுகளை ஆரம்பித்துள்ளார். விமல்வீரவன்சவின் கட்சி, உதய கம்மன்பிலவின் கட்சி, வாசுதேவ நாணயக்காரவின் கட்சி ஆகியவற்றையும் கூட்டணியில் இணைத்துக்கொள்வதற்கான பேச்சுகளும் ஆரம்பமாகியுள்ளன. மைத்திரியின் இந்த நகர்வை மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் கடுமையாக விமர்சித்து வருவதுடன், எதற்காக இந்த கூட்டணி என்பது குறித்தும் கழுகுப்பார்வையைச் செலுத்தியுள்ளனராம்.



நீங்களும் எழுதலாம்

உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?

- சிறுகதை
- பத்தி எழுத்து
- கட்டுரை
- கவிதை
- ஓவியம்

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க காத்திருக்கிறோம்.
உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி

சஞ்சீவி

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாண



0773165555

எஸ். கிருபானந்தகுமாரன்[ MVSc]
கால்நடை மருத்துவர்



# இலங்கையின் பாலுற்பத்தித் துறை சந்திக்கும் சவால்கள்



இலங்கையிலுள்ள பசு மாடுகளும் எருமை மாடுகளும் அதிகளவு உள்ளூர் வகையைச் சேர்ந்தவை. அவற்றின் சாராசரி உற்பத்தி ஒரு லீற்றருக்கும் குறைவாகும். இந்த மாடுகளைக் கொண்டு எதிர்பார்த்த பாலுற்பத்தியைப் பெற்று தன்னிறைவு காணமுடியாது. அதிக உற்பத்திகளை கொண்ட மாடுகளைப் பெற இரண்டு வழி முறைகள்தான் உள்ளன. ஒன்று நல்லின மாடுகளை இறக்குமதி செய்ய வேண்டும். இந்த முறையில் பல தடவைகள் மாடுகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. மற்றையது இருக்கும் மாடுகளை தரமுயர்த்துவது. இந்த வழியில் இரண்டு முறைகளைக் கையாளலாம். ஒன்று நல்லினக் காளைகளை இறக்குமதி செய்து பண்ணையாளருக்கு வழங்கி பண்ணைகளைத் தரமுயர்த்துவது. மற்றையது தரமான காளைகளின் உறைவிந்தணுக்களை [ frozen semen] இறக்குமதி செய்தோ அல்லது தரமான காளைகளை இறக்குமதி செய்தோ அவற்றின் உறைவிந்துகளைத் தயார் செய்து அவற்றைக் கொண்டு செயற்கைமுறைச் சினைப்படுதல் மூலம் மாடுகளைத் தரமுயர்த்துவது. ஆரம்ப காலங்களில் பல இடங்களில் காளை நிலையங்கள் [ stud center] உருவாக்கப்பட்டு மாடுகள் சினைப்படுத்தப்பட்டிருந்தன. செயற்கைச் சினைப்படுத்தலின் அதிகரிப்பின் பலனாக அந்தக் காளை நிலையங்கள் இல்லாமல் செய்யப்பட்டன. குண்டசாலை, யாழ்ப்பாணம்,பொலநறுவை போன்ற இடங்களில் குளிரூட்டிய விந்து [ chilled semen] உற்பத்தி செய்யப்பட்டு இடைப்பட்ட காலத்தில் மாடுகள் சினைப்படுத்தப்பட்டிருந்தன. உறை விந்தணுகுச்சிகளின் உருவாக்கத்தின் பின் ஏனைய இடங்கள் நிறுத்தப்பட்டு குண்டசாலையில் இருந்து மாத்திரமே நாடு முழுதும் அவை விநியோகிக்கப்படுகின்றன. சிலவகை உறைவிந்துகள் பொலநறுவையில் உற்பத்தி செய்யப்பட்டாலும் அவையும் குண்டசாலையூடாகவே விநியோகிக்கப்படுகின்றன.

வெளிநாட்டு மாடுகளை இறக்குமதி செய்வதன் மூலம் சடுதியாகப் பாலுற்பத்தியை கூட்ட முடியும் என்ற போதும் அண்மைக்காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மாடுகளில் இருந்து சாதகமான பயனைப் பெற முடியவில்லை. கொண்டு வரப்படும் மாடுகளின் இனம், காலநிலை, வளர்ப்பு முறை , உணவு முறை வேறுபாடு ,நோய்கள் காரணமாக கடும் பாதிப்புகளை அவை சந்தித்திருந்தன. இந்த மாடுகள் மீது முதலிட்டவர்கள் பெரும் நட்டத்தைச் சந்தித்திருந்தனர். இலங்கையின் கால்நடைத்துறை அதிகாரிகளின் சரியான ஆலோசனைகள் இன்றியும் இலங்கை கால்நடை இனப் பெருக்க கொள்கைக்கு மாறாகவும் [ Breeding policy] மேற்படி மாடுகள் கொண்டு வரப்பட்டதும் முரணான விடயமாகும். செயற்கைச் சினைப்படுத்தல் முறை பயனைத் தர சில வருடங்கள் பிடிக்கும். ஆனால் நிலைத்த பயனை தரக்கூடியது. எனினும் செயற்கை சினைப்படுத்தல் தொடர்பான மக்களின் மனநிலை, அதனை செய்யும் வினைத்திறனான உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை என்பன மிகப் பெரிய சவாலாக உள்ளன.

### உற்பத்தியற்ற மாடுகளின் அதிகரிப்பும் அவற்றை அகற்ற முறையான திட்டம் இன்மையும்

கடந்த வாரங்களில் நான் குறிப்பிட்டது போல இலங்கையில் உள்ள மாடுகளில் கணிசமானவை பாலுற்பத்தி செய்யாதவை. அவற்றில் தற்போது பாலுற்பத்தியில் இருப்பவை அண்ணளவாக 23 % மட்டுமே ஆகும். உற்பத்தியில் பங்களிக்காத பசு மாடுகளையும் ஆண் மாடுகளையும் குறைக்கும் அல்லது கழிக்கும் சரியான முறை இலங்கையில் இல்லை. மாடுகளைக் கொல்வது மதத்துடன் பிணைக்கப்பட்டு அரசியலாக்கப்பட்டுள்ளது. தரமான கொல்களங்களும் [ slaughter houses] கிடையாது. ஒரு வெற்றிகரமான பண்ணை இயங்க, தேவையற்ற மற்றும் உற்பத்திக் குறைவான மாடுகள் கழிக்கப்பட வேண்டியது அவசியமானது. உலகின் நடைமுறையும் அதுதான். உற்பத்திக் குறைவான மற்றும் மலட்டு மாடுகள் [ infertile], ஆண் மாடுகள் [ Bulls] பண்ணைகளில் தொடர்ந்து காணப்படும் பட்சத்தில் பண்ணையின் செலவு கூடுவதோடு உணவுப் பற்றாக்குறையும் ஏற்படும். ஒவ்வொரு பண்ணைகளிலும் மேற்படி உற்பத்தியற்ற மாடுகள் அதிகரிக்கும் பட்சத்தில் நாட்டின் மொத்த பால் உற்பத்திச் செலவும் கால்நடைகளுக்கான உணவுப் பஞ்சமும் அதிகரித்து எதிர்மறையாக மாடுகளின் எண்ணிக்கையிலும் , பாலின் அளவிலும் வீழ்ச்சி ஏற்படும். இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகக் கருதப்படும் மாடறுப்புத் தடைத் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் இந்த நிலை மேலும் தீவிரமடையலாம்.

### இலங்கையின் கால்நடைப் பண்ணைகளின் கட்டமைப்பு

இலங்கையின் பெரும்பாலான பண்ணையாளர்கள், சிறு பாலுற்புத்தியாளர்களே[ small scale] . ஓரிரண்டு மாடுகளை வைத்து மிகக் குறைந்தளவு பாலைப் பெறுபவர்கள். பாலுற்பத்தியில் தன்னிறைவு கண்ட பல நாடுகளில் [ இந்தியா ,பாகிஸ்தானை தவிர ] பண்ணைகளின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு என்பதுடன் ஒவ்வொரு பண்ணையிலுள்ள மாடுகளின் எண்ணிக்கையும் மிக அதிகம். ஒப்பிட்டளவில் இலங்கையில் உற்பத்தித்திறனுடன் ஒப்பிடும் போது பண்ணைகளின் எண்ணிக்கை மிக அதிகம்.[ 350000 க்கும் அதிகமான பதிவு செய்யப்பட்ட பண்ணைகள் உள்ளன.]. நடுத்தர (medium] மற்றும் பெரும் பண்ணைகள் [ Mega farms] அதிகரிக்கும் போதுதான் கணிசமான பாலுற்பத்தியை எதிர் பார்க்க முடியும்.

### மலடு நீக்க சிகிச்சையும் அதன் நிலையும்

பாலுற்பத்தி செய்ய முடியாத கணிசமான மாடுகளை மலடு நீக்க சிகிச்சை [infertility treatment] செய்வது மூலம் ஓரளவுக்கு நிலையை சரிப்படுத்த முடியும். எனினும் அதற்குரிய வசதிகள் சகல இடங்களிலும் இருப்பதில்லை. அதிகளவு அரச துறையாகவுள்ள கால்நடை உற்பத்தித் துறை இந்த விடயத்தைக் கையாள சரியான பௌதீக, மனித வளத்தை கொண்டிருக்கவில்லை என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். குறிப்பாக கிராமப்புறங்களில் தேவையான மருந்துகளும் கால்நடை வசதிகளும் இல்லை என்பதுடன் சிகிச்சைக்குரிய செலவும் அதிகம் என்பதால் பண்ணையாளரும் மலடு நீக்க சிகிச்சையை விரும்புவதும் மினக்கெடுவதும் இல்லை. உடனடியாக, சிகிச்சை செய்யக் கூடிய விலங்குகளை இறைச்சிக்காக விற்று விடுகின்றனர். பெண் மாடுகளை மலடு நீக்க சிகிச்சை செய்யும் அதேவேளை பாலுற்பத்தி குறைவான இனத்து ஆண் மாடுகளை மலடாக்கம் [ castration] செய்யவும் வேண்டும் அல்லது பண்ணையில் இருந்து அகற்ற வேண்டும். இரண்டையும் செய்யக் கூடிய மன நிலையில் எமது பண்ணையாளர்கள் இருப்பது மிக மிகக் குறைவு.

### செயற்கை முறைச் சினைப்படுத்துநர்களுக்குத் தட்டுப்பாடு

1950 களில் இருந்து செய்யப்படும் மாடுகளை மேம்படுத்தக் கூடிய செயற்கைச் சினைப்படுத்தல் முறை அண்மைய நாட்களில் குறைவடைவதைக் காணமுடிகிறது. [ நகரங்கள் மற்றும் மிகக் குறைந்தளவு நல்லின மாடுகளை வைத்திருப்பவர்கள் இந்த முறையை நாடுகின்ற போதும் கிராமப்புறங்களில் குறிப்பாக அதிகளவு மாடுகளை வைத்திருப்பவர்கள் மிகக் குறைவு] . வழமையாக கால்நடை அலுவலகங்களில் செயற்கை முறைச் சினைப்படுத்தலை செய்யும் அரச கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் [ LDO Livestock Development officers] அண்மைக் காலத்தில் செயற்கை முறைச் சினைப்படுதலை செய்வது குறைந்து தனியார் செயற்கை முறைச் சினைப்படுத்துநர்கள் [Private AI technicians] அதிகரித்துள்ளதைக் காண முடிகிறது. உயர்தர விஞ்ஞானப் பிரிவிலிருந்தே கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதால் அரச கால்நடை போதனாசிரியரின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதுடன் அதிகளவு பெண் கால்நடைப் போதனாசிரியர்களும் உள்வாங்கப்படுகின்றனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் பண்ணையாளர்களின் வீடுகளுக்கு சென்று செயற்கைச் சினைப்படுதலை செய்ய விரும்புவதில்லை. அவர்கள் களப் பணிகளை விட அலுவலகங்களிலுள்ள வேலைகளைச் செய்வதிலேயே அதிக ஆர்வத்தைக் காட்டுகின்றனர். தனியார் செயற்கைச் சினைப்படுத்துநர்கள் தமது சினைப்படுதல் பணிகளை விட குறுக்கு வழியில் பணம் பார்க்கும் சிகிச்சையளிக்கும் வேலைகளில் ஈடுபட்டு பணம் சம்பாதிப்பதில் ஈடுபடுவதையும் காணமுடிகிறது. பெரும்பாலான தனியார் சினைப்படுத்துநர்கள் , குறித்த காலத்தில் இந்தத் தொழிலில் இருந்து விலகி முழு நேர சட்ட விரோத கால்நடை வைத்தியராகவும் [ illegal ] பண்ணைக் கடை முதலாளிகளாகவும் மாறியிருப்பதை பல பகுதிகளில் காண முடிகிறது.

### எருமைகளின் பற்றாக்குறை


உலகின் அதிக பாலுற்பத்தி செய்யும் இந்தியா - பாகிஸ்தான் போன்ற நாடுகளில் அதிகளவில் எருமை மாடுகள் காணப்படுவதோடு கணிசமான அளவில் அவை பாலுற்பத்தியையும் செய்கின்றன. எருமைகளின் பால் அதிக கொழுப்பை கொண்டதுடன் பல பால் உற்பத்திப் பொருட்களையும் செய்யக் கூடியது. அத்துடன் அதிக நோய் எதிர்ப்பு சக்தி வாய்ந்தது. இலங்கையைப் பொறுத்த வரை கடந்த சில தசாப்தங்களாக எருமைகளின் அளவு குறைந்து வருகின்றது. எருமைகளில் வேட்கை அறிகுறிகளை காண்பது கடினம் என்பதால் செயற்கைச் சினைப்படுத்தல் செய்வது மிகக் கடினம். பல செயற்கை முறைச் சினைப்படுத்துநர்கள் எருமை மாடுகளில் அதனைச் செய்வதில் குறைந்த தேர்ச்சியையே கொண்டுள்ளனர். இங்கும் நல்லின மூரா,நிலி ரவி போன்ற அதிக பால் உற்பத்தியை உடைய எருமைகள் மிகக் குறைவு என்பதுடன் அதிகளவிலுள்ள உள்ளூர் எருமைகள் மிகக் உறைந்த பாலையே தருகின்றன. மேற்கூறிய மாடுகளின் இனம் தொடர்பான பிரச்சினைகளைச் சரிவரக் கையாளாமல் பாலுற்பத்தியை அதிகரிக்க முடியாது.

(அடுத்த வாரமும்)



வெளிநாட்டு மாடுகளை இறக்குமதி செய்வதன் மூலம் சடுதியாகப் பாலுற்பத்தியை கூட்ட முடியும் என்ற போதும் அண்மைக் காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மாடுகளில் இருந்து சாதகமான பயனைப் பெற முடியவில்லை.

**செங்கைஆழியான் என ஈழத்துப் படைப்புலகில் அறியப்பட்ட, அமரர் கலாநிதி க.குணராசா எழுதிய இந்தச் சிறுகதை, அவரின் எழுத்து வாண்மையை இப்போதைய இளைய வாசகர்களும் அறியும் நோக்கோடு, இந்தவார சஞ்சீவியில் மீள்பிரசுரமாகின்றது.**



○ செங்கை ஆழியன்

# திசநாயக்காவும் கந்தசாமியும்



சஞ்சீவி
**சிறுகதை**

வெளிகேற்றை யாரோ 'படபட'வெனத் தட்டினார்கள். மனைவியும் குழந்தைகளும் அவரைக் கலக்கத்துடன் பார்த்தனர். அவர்களின் விழிகளைப் பயத்தின் முழு வடிவம் பூரணமாக ஆக்கிரமித்தது. நேரம் ஒன்றும் அகாலமன்று, இரவு ஏழரை மணிதான். சற்று முன்னர்தான் வெளிக்கேற்றினைப் பூட்டினார். யாராக இருக்கும்? அவர் இதயம் வேகமாக அடித்துக் கொண்டது.
மீண்டும் கதவு தட்டப்பட்டது.
அமைதியின் ஆத்மாவை தகரச் சத்தம் கிழித்தெறிவதாக இருந்தது. அவர் கதிரையிலிருந்து எழுந்திருந்தார்.
"கேற்றைத் திறக்காதையுங்கோ..." என்று மனைவி அவரை மெதுவாக இருந்தான். அவர் மனைவியையும் ஆதரவாகப் பார்த்துவிட்டு, யன்னல் திரைச்சேலையை விலக்கிக் கவனமாகப் பார்த்தார். கேற்றடியில் யாரோ நிற்பது தெரிந்தது.
"ஆமியா?.." என அவரின் மூத்த பையன் பயத்துடன் கேட்டான். அவனுக்கு பதினான்கு வயதிருக்கும். செல்லமாக வளர்ந்தவன். கொழும்பில் பிறந்தது முதல் வாழ்ந்தவன். வாட்டசாட்டமாக இருப்பான். "ஆமியா? என்று கேட்கும் போதே அவன் உடல் நடுங்கியது.
ஒரு மாதத்துக்கு முன்னர் இப்படித்தான் ஒரு நாள் இரவில் அவர் வீட்டை இராணுவத்தினர் சோதனையிட்டனர். வீட்டின் மூலை முடுக்கெல்லாம் எதையோ தேடினர். சாமான்களை உருட்டிப் புரட்டிப் பார்த்தனர். அலுமாரிகளைக் குடைந்து தேடினர். அவரும் குழந்தைகளும் பயத்துடன் அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர். வியர்த்து விறுவிறுத்து மயங்கும் நிலைக்கு அவர் மனைவி வந்துவிட்டாள். அவர்கள் செல்லும் போது "நீ வா.." என மகனை இழுத்தனர். அவள் மயங்கி விழுந்துவிட்டாள். அவரின் மகன் வீறிட்டு "டாடி...." என அலறினான். அவருக்குச் சுயநினைவு வந்தது.
"நாங்கள் கொழும்பில் அடிபட்டு இங்க வந்திருக்கிறம்"
அவர் அவர்களுக்கு விளங்கப்படுத்தினார். அவர்கள் மகனை ஓங்கி அறைந்து தள்ளிவிட்டுச் சென்றனர்.
வெளிக்கதவு தட்டப்படுகின்றது.
"ஆமியா..?" என அவன் மீண்டும் கேட்டான்.
"தெரியவில்லை..." என்றார் அவர்
"அப்ப ஆர்?" என்று மகள் பயத்துடன் வினவினாள்.
அவருக்கு அதற்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.
அவர் மெதுவாக வந்து கதிரையிற் சாய்ந்தார். அவர் மனைவி வீட்டில் எரிந்து கொண்டிருந்த மின்குமிழ்களைப் எப்போதோ அணைத்திருந்தாள். ஹோலில் இருள் கவிந்திருந்தது. இருளில் மூலைக்கு மூலை அவரின் பிள்ளைகள் நான்கும் ஒடுங்கியிருந்து பெருமூச்சு விடுவது கேட்கிறது.
இப்படித்தான் ஓரிரவு அவர்கள் கொழும்பில் தவித்தார்கள். அவர்கள் வேலையிலிருந்துதிரும்பி வரும்போது கொழும்பில் பதற்றம் தொடங்கிவிட்டது. சிங்களக் காடையர்கள் தமிழர்களைத் தேடித் தாக்கத் தொடங்கியிருந்தார்கள். வழியில் அவர்களிடம் அகப்படாமல் எப்படியோ அவர் வீடு வந்து சேர்ந்தார். அவர் கண் முன்னால் பல வீடுகள் கொழுந்துவிட்டெரிவது தெரிந்தது. ரெலிபோனில் செய்திகள் வந்தன.
கொழும்பு நகரமே எரிவது போல இருந்தது. அவருக்குத் தெரிந்த பலர், காடையர்களால் வெட்டப்பட்டும் அடிக்கப்பட்டும் இறந்த செய்திகள் வந்தன. அவர்கள் வீட்டுக்கும் எந்த நேரத்திலும் காடையர்கள் வரலாம். அவர்கள் பயத்துடன் காத்திருந்தார்கள். இரவு பத்து மணி போல அவர்கள் வீதியில் கலவரம் தொடங்கியது. அவர்கள் வீடு வீதியின் மத்திய தானத்தில் இருந்தது. வீதியின் தொடக்கத்திலிருந்த வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டு எரியூட்டப்பட்டன.
அவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பொருட்கள், பண்டங்கள், வீடு வாசல்...
"டடி எங்கையாவது ஓடுவம்?"
இந்த இரவில் எங்கே ஓடுவது?" வழி எங்கும் அவர்கள்தான்.
அவரின் மனைவி ஓவென பயத்தால் அழுதாள். குழந்தைகளும் அவரைச் சுற்றிநின்று கதறி கண்ணீர்விட்டனர்.
"ராமலிங்கம், ராமலிங்கம்" அவரை யாரோ பெயர் சொல்லி அழைத்தார்கள். பக்கத்து வீட்டு திசநாயக்கதான். அவர் பயத்துடன் கதவைத் திறந்தார்.
"இங்க இருக்க வேணாம். எல்லோரும் எங்க வீட்டுக்கு வந்திடுங்க"
திசநாயக்கவின் வீட்டிலிருந்து பார்க்கும்போது அவர் வீடு உடைத்து திறக்கப்பட்டு கொள்ளையிடப்படுவது தெரிந்தது.
அவர் வீட்டிலிருந்த பொருள்கள் பலரால் காவிச் செல்லப்பட்டன. அதன் பின்னர் அவர்கள் வீட்டுக்கு நெருப்பு வைத்தார்கள். அவர் கஷ்டப்பட்டு சேகரித்த சொத்துக்கள் அனைத்தும் கண்முன்னால் களவாடப்பட்டன. எரியூட்டப்பட்டன. பதினைந்து நாள்கள் அவர்கள் அகதிகள் முகாமில் இருந்தார்கள்.
"இனிக் கொழும்பில் இருக்க வேண்டாம். யாழ்ப்பாணத்துக்குப் போய்விடுவம். இஞ்ச இருந்தது போதும்" என்று மனைவி கூறத் தொடங்கினாள்.
"ம்..." இதைத் தவிர அவரால் எதுவும் கூற முடியவில்லை. கொழும்பில் அவருக்கு இனி என்ன இருக்கிறது?
"ஐயா அம்மா தடுக்கத் தடுக்க யாழ்ப்பாணத்தில் இருந்த காணி பூமிகளை வித்து இங்க வீடு வாங்கினம். எல்லாம் சரி. முப்பது வரியமாகச் சேகரித்த அத்தனையும் ஒரு நாளில் சரி. ஏதோ ஐயா அம்மா இருந்த வீடு இருக்குது. அங்க போவம். இனியாவது பிறந்த மண்ணில இருப்பம். இப்படிப் பயந்து பயந்து இருக்கிறதிலும் அங்க நிம்மதியாகத் தண்ணியைக் கிண்ணியைக் குடித்துக் கொண்டாவது இருக்கலாம்.
"அங்க போய் என்ன செய்யிறது?" என்று அவர் கேட்டார்.
"ஏதோ எஞ்சிய நகைகள், இன்சூரன்ஸ், பென்சன் வருந்தானே? அதைக் கொண்டு சீவிப்பம். உசிரோடை இருக்க வேணும். குழந்தைகளைப் பாருங்க. அதுகள் பயத்தில பேயறைஞ்சு போய்க்கிடக்குதுகள். அங்கேயே போயிடுவம்"
பதினைந்து நாள்களுக்குப் பிறகு அவர்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்கள். பிறந்த மண்ணில் கால்கள் பதித்த போது மனதில் நிம்மதியும் பாதுகாப்பு உணர்வும் ஏற்பட்டன. அந்த நிம்மதி வெகுகாலம் நீடிக்கவில்லை. யாழ்ப்பாணத்து வீதிகளில் நடக்க முடியவில்லை. நான்கு மணியுடன் ஊர் அடங்கிவிடும் கொடுமையை அவரால் சகிக்க முடியவில்லை. வீதிகளில் விரையும் கனரக வாகனங்கள் மருட்சியைக் கொடுத்தன. அவர்கள் வீட்டுக்குள் முடங்கிக் கொண்டார்கள். வீதிகளில் சர்வ சாதாரணமாக நிகழும் மரணங்கள் பயத்தைக் கொடுத்தன. வெளிக்கேற் மீண்டும் படபடவெனத் தட்டப்பட்டது. ஒவ்வொரு தட்டும் அவரின் நெஞ்சப் பறைகளில் பலமாக மோதி உடல் முழுவதையும் உறுக்கியது. "ஆர்" என்று அவர் அருகில் ஊர்ந்து வந்து மனைவி கேட்டாள்.
"ஆரெண்டு தெரியவில்லை"
அவர் அடிமனதில் பதினைந்து நாள்களுக்கு முன் நிகழ்ந்த அந்தச் சம்பவம் விசுவரூபம் எடுத்தது. கதவைத் தட்டாமலேயே ஓரிரவு பலர் துப்பாக்கிகளுடன் பலாத்காரமாக வீட்டினுள் புகுந்தார்கள். அவரையும் அவர் குடும்பத்தினரையும் ஒரு அறையுள் தள்ளி பூட்டிவிட்டு... கொழும்பில் இழக்காது எஞ்சியவற்றை அவர் இங்கே இழந்தார்.
"யாழ்ப்பாணம் போனால் பயமில்லாமல் நிம்மதியாக இருக்கலாமென்றியே?" என்று அவர் கண்கலங்க மனைவியிடம் கேட்டார்.
"ஆர்...?" என்று அவர் மனைவி மீண்டும் கேட்டாள் பயத்துடன்.
"தெரியவில்லை..."
"இனி எங்களிடம் என்ன இருக்குது?"
அவர் எதுவும் சொல்லவில்லை.

> இரவு பத்து மணி போல அவர்கள் வீதியில் கலவரம் தொடங்கியது. அவர்கள் வீடு வீதியின் மத்திய தானத்தில் இருந்தது. வீதியின் தொடக்கத்திலிருந்த வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டு எரியூட்டப்பட்டன. அவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பொருட்கள், பண்டங்கள், வீடு வாசல்...

மீண்டும் கதவைத் தட்டினார்கள்.
"இனி எங்களிடம் இருக்கிறது உசிர் ஒன்றுதான்"
"எங்கையாவது போயிடுவமுங்க"
"இனி எங்கை ஓடுறது, மீண்டும் கொழும்புக்கா? விசரி?..."
"அங்கயும் இருக்க முடியாமல், இங்கயும் இருக்க முடியாமல்... வேண்டாமுங்க இந்த நரக வாழ்க்கை"
அவர் எதுவுமே பேசவில்லை.
"இப்ப எங்கையாவது ஓடிவிடுவம்"
"பக்கத்து வீட்டுக்குப் போயிடுவம்"
அவர்கள் மெதுவாக எழுந்து பக்கத்து வீட்டுக்கு ஓடினார்கள். பக்கத்து வீட்டுக் கந்தசாமியின் முற்றத்தில் மிதந்த போது கந்தசாமி ஓடி வந்தார்.
"இஞ்சை ஏன் வந்தனீங்கள்? அவங்கள் இங்கயும் வந்திடுவான்கள். தயவு செய்து போயிடுங்கோ"
அவர்கள் விக்கித்து நின்றார்கள். ராமலிங்கத்தாரின் இதயம் ஒருகணம் வேகமாக துடித்தது.
"வீட்டுக்கே போயிடுவம்..."
அவர்கள் துயரத்துடன் திரும்பி வந்தபோது வெளிக்கேற் தட்டப்படுவது நின்றிருந்தது. ■

## அடுத்த வார சஞ்சீவி இதழில்....

அரிமாநேத்ரன்

துப்பறியும் AK 67

விறுவிறுப்பான
அதிரடி திருப்பங்கள்
நிறைந்த
திகிலூட்டும்

'காமிக்ஸ் தொடர்'

சித்திரம் – எஸ்.வினோபா
கதை – இ.சு.முரளிதரன்




# இரண்டு ஓநாய்களும், நல்லது கெட்டதும்!



○ ம.மயூரபாலன்

பூர்வீகக்குடியினத் தலைவர் ஒருவர் தனது ஊர் மக்களைச் சந்தித்து உரையாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது அங்கிருந்த ஒரு சிறுவன் "ஐயா என்னிடம் ஒரு கேள்வி உள்ளது. மனிதர்கள் சில வேளைகளிலே நல்ல விஷயங்களைச் செய்கிறார்கள். அதே மனிதர்கள் சில வேளைகளிலே கெடுதலான விஷயங்களையும் செய்கிறார்களே அவர்கள் ஏன் அவ்வாறு நடந்து கொள்கிறார்கள்?" எனக் கேட்டான். அதற்கு அந்தத் தலைவர் "நான் உனக்கு ஒரு சிறிய கதையைக் கூறுகிறேன்" எனச் சொன்னார்.

" எல்லோரின் உள்ளேயும் இரண்டு ஓநாய்கள் உள்ளன. அதில் ஒன்று நல்ல ஓநாய். மற்றையது கெட்ட ஓநாய். அவை எப்பொழுதும் ஒன்றுடன் ஒன்று சண்டை போட்டுக் கொண்டே இருக்கின்றன. அதனால்தான் நல்ல ஓநாய் வெல்லும் பொழுது நல்லவர்களாகவும் கெட்ட ஓநாய் வெல்லும் பொழுது கெட்டவர்களாகவும் இருக்கிறார்கள்" என அவர் சொன்னார். அதற்கு அந்தச் சிறுவன் "அப்படியென்றால் இறுதியில் எந்த ஓநாய் வெற்றியடையும்?" எனக் கேட்டான். அதற்கு அந்தத் தலைவர் "ஒருவர் எந்த ஓநாய்க்கு அதிகம் உணவு கொடுக்கிறாரோ அந்த ஓநாய் தான் வெற்றியடையும்" எனக் கூறினார்.

இந்தச் சிறிய கதையில் மிகவும் ஆழ்ந்த அர்த்தம் பொதிந்துள்ளது. அவர் அந்தக் கெட்ட ஓநாயை அடித்து கொல்ல வேண்டும் எனக் கூறவில்லை. பதிலாக நல்ல ஓநாயைப் பலமாக்க வேண்டும் என்று கூறினார். ஏனெனில் அந்தக் கெட்டது நலிவாகவும் நல்லது பலமாகவும் இருக்க வேண்டும். அதனை வெளிப்படுத்தும் முகமாகவே நடராஜப்பெருமானின் சிலையில் அவரது பெருவிரலின் கீழே முயலகன் இருப்பதைக் காணமுடியும். முயலகன் இன்னமும் உயிரோடுதான் இருக்கிறான். ஆனால் இறைசக்தி மேலோங்கி இருக்கும் பொழுது அவன் அடங்கி இருக்கின்றான். அது போல் நம் ஒவ்வொருவரின் உள்ளேயும் நல்லதும் உள்ளது, கெட்டதும் உள்ளது. ஆனால் எதனை நாம் ஊட்டி வளர்க்கிறோமோ அதுதான் இறுதியில் வெற்றி அடையப் போகின்றது. நாம் இடுகின்ற முயற்சிகள் நல்லவற்றை எடுத்து வருவதன் மேல் இருக்கவேண்டும். ஒருவர் எவ்வளவு தான் இருளை அகற்றுவதற்கு முயற்சிசெய்தாலும் அது பலன் தரப் போவதில்லை. ஆனால் ஒளியைக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்தால் இருள் தானாகவே அகன்றுவிடும். நமது உள்ளத்தில் அந்த ஒளி ஏற்படும் பொழுது நமது வாழ்வில் அமைதி தானாகவே ஏற்பட தொடங்கும்.

இன்று உலகம் ஓடிக் கொண்டிருக்கும் நிலையில் நம்மில் பலர் பொருட்களைத்தான் அதிகம் தேடித் தேடிச் சேர்க்கிறோம். வாழ்வில் எவ்வளவு பொருட்களைச் சேர்க்கிறோமோ அவ்வளவு மகிழ்ச்சியாக இருப்போம் என எண்ணுகிறோம். ஆனந்தம் மற்றும் அமைதி தேவை என யாராவது கூறும் பொழுது அதனை நின்று கேட்பதற்கு கூட நம்மிடம் நேரம் இருப்பதில்லை. வீட்டினுள் கால் வைப்பதற்கு கூட இடமில்லாத அளவு பொருட்கள் நிறைந்துள்ளன. ஆனால் அமைதியும் ஆனந்தமும் அங்கு உள்ளனவா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

> எல்லோரின் உள்ளேயும் இரண்டு ஓநாய்கள் உள்ளன. அதில் ஒன்று நல்ல ஓநாய். மற்றையது கெட்ட ஓநாய். அவை எப்பொழுதும் ஒன்றுடன் ஒன்று சண்டை போட்டுக் கொண்டே இருக்கின்றன. அதனால்தான் நல்ல ஓநாய் வெல்லும் பொழுது நல்லவர்களாகவும் கெட்ட ஓநாய் வெல்லும் பொழுது கெட்டவர்களாகவும் இருக்கிறார்கள் நம் ஒவ்வொருவரின் உள்ளேயும் நல்லதும் உள்ளது, கெட்டதும் உள்ளது. ஆனால் எதனை நாம் ஊட்டி வளர்க்கிறோமோ அதுதான் இறுதியில் வெற்றி அடையப் போகின்றது.

ஒரு தடவை பாண்டவர்களுக்கும் துரியோதனர்களுக்கும் இடையே ஒரு போட்டி நடைபெற்றது. அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகை பணம் கொடுத்து யார் தமது வீட்டை முழுமையாக நிரப்புகிறார்களோ அவர்கள்தான் அந்தப் போட்டியின் வெற்றியாளர்கள் எனச் சொல்லப்பட்டது. துரியோதனனின் குழுவினர் தமக்கு தரப்பட்ட பணத்தில் வைக்கோல் வாங்கி யாரும் உள்ளே போக இயலாதவாறு முற்றும் முழுதாக அந்த வீட்டை நிரப்பி விட்டார்கள். பாண்டவர்கள் அந்தப் பணத்துக்கு அழகான ஒரு விளக்கை வாங்கி அதில் எண்ணெய் ஊற்றி சுடர் ஏற்றி வைத்தார்கள். அவர்களது வீடு அந்த விளக்கின் ஒளியால் நிரம்பிவிட்டது. இங்கு இந்தப் போட்டியில் வெற்றி பெற்றது யார் என்பதனைக் கேட்கவே தேவையில்லை.

இப்பொழுது நாமே நம்மைக் கேட்க வேண்டிய கேள்வி என்னவென்றால் எனது வீடு எனது உள்ளம் எதனாலே நிரம்பி உள்ளது என்பதுதான். எனது உள்ளத்திலே அந்த ஒளியின் பிரகாசம் நிலவுகின்றது என்றால் இந்த வாழ்க்கை ஆனந்தமாகவும் அமைதியாகவும் இருக்க முடியும். மாறாக நமது வாழ்க்கையில் அமைதி இல்லையென்றால் அதனை நாம் நமது வாழ்க்கையில் எவ்வாறு எடுத்து வருவது என்பதனை பார்க்க வேண்டியது அவசியமாகும். உள்ளத்தில் உள்ள இருளை அகற்றவல்ல ஒளி எங்கே உள்ளது என்பதில் பலவிதமான கருத்துக்கள் உள்ளன. ஒரு மனிதனுக்கு அதிகாலையில் ,வேலைக்குச் செல்வதற்கு முன்னர் தேநீர் அருந்தும் பழக்கம் இருந்தது. அதற்காக காலையில் எழுந்து அடுப்பை பற்ற வைப்பதற்காக இரவிலே நெருப்புத் தணலை எடுத்து ஒரு சட்டியில் வைத்து விடுவான். ஒரு நாள் அங்கு மழை பெய்து அந்த நெருப்புத் தணல் அணைந்துவிட்டது.

காலையில் அவனுக்கு நெருப்புத் தணல் தேவையாக இருந்தது. அவன் தனது விளக்கை எடுத்துக்கொண்டு, அந்த ஒளியின் உதவியுடன் அயல் வீட்டுக்குச் சென்றான். அங்கு வீட்டுக்காரனை தட்டி எழுப்பினான். அவரிடம் "ஐயா எனக்கு அடுப்பை பற்ற வைப்பதற்கு சிறிது நெருப்புத் தணல் தாருங்கள்" எனக் கேட்டான். அப்பொழுது அந்த வீட்டுக்காரர் "உனது கையிலேயே விளக்கை வைத்துக்கொண்டு ஏன் இங்கு வந்து என்னைத் தொந்தரவு செய்கிறாய்? " எனக் கேட்டார்.


"ஆரூரர் இங்கிருக்க அவ்வூர்த்
திருநாளென்று ஊரூர்கள் தோறும் உழலுவீர் நேரே
உளக்குறிப்பை நாடாத ஊமர்காள் நீவிர்
விளக்கிருக்கத் தீ தேடுவீர்

- என இதுபற்றி பட்டினத்தார் அடிகள் மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார்.

ஒவ்வொருவரும் தாம் வளர்ந்த சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு அந்த ஒளி எங்கிருந்து வரவேண்டும் எனக் கூறுவார்கள். அங்கு செல்ல வேண்டும், இங்கு செல்ல வேண்டும் யாத்திரை செல்ல வேண்டும் என எல்லோரும் வெளியே இருந்து தான் அந்த ஒளி வரவேண்டும் என்பார்கள். ஆனால் ஞானிகளும் மகான்களும் "அது உங்களின் உள்ளேதான் உள்ளது" எனக் கூறிச் சென்றுள்ளார்கள். இப்பொழுது தீபாவளி வந்து போய்விட்டது.

அடுத்த வருடம் மீண்டும் தீபாவளி வரும். பட்டாசுகள் கொளுத்தப்படும். கடைத்தெருக்கள் எல்லாம் மக்களால் நிரம்பி வழியும். நாம் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி உலகத்திலே இந்த விஷயங்கள் எல்லாம் மீண்டும் மீண்டும் நடைபெறும். ஆனால் உயிரோடு இருக்கின்ற காரணத்தினாலே நமது வாழ்விலே இப்பொழுது தினம் தினம் தீபாவளி வரக்கூடிய சாத்தியம் உள்ளது.

அவ்வாறு நடக்கச் சாத்தியமே இல்லை என சிலர் கூறலாம். மனிதன் சந்திரனுக்குப் போக முயற்சி செய்த பொழுது பலரும் அது நடைபெற முடியாத ஒன்று எனக் கூறினார்கள். ஆனால் சிலர் அது சாத்தியம் எனக் கூறினார்கள். இன்று மனிதன் சந்திரனைச் சென்றடைந்ததற்கு அது சாத்தியம் என கூறியவர்கள் தான் காரணம். இது நமது வாழ்க்கை. இந்த அன்பளிப்பு நமக்குத் தரப்பட்டுள்ளது. இதனை வெற்றியடையச் செய்வது நம் ஒவ்வொருவரதும் பொறுப்பாகும்.




# நியூஸிலாந்து பழிதீர்க்குமா?

ரி-20 உலகக்கிண்ணத்தை எந்த அணி கைப்பற்றப் போகின்றது என்ற வாதப் பிரதிவாதங்கள், எதிர்வுகூறல்கள் என அனைத்தும் தற்போது வெகுவாகச் சுருங்கி இரண்டே இரண்டு அணிகளுக்குள் மட்டுப்பட்டுள்ளன. ஒன்று நியூஸிலாந்து மற்றது அவுஸ்ரேலியா.

இந்தத் உலகக்கிண்ணத் தொடரில் ஒரு விடயம் பெரியளவில் பேசப்படுகின்றது. அதுதான் 'பழிதீர்க்கும் படலம்'. இந்தியா மற்றும் நியூஸிலாந்துக்கு எதிரான லீக் ஆட்டங்களில் பாகிஸ்தான் பெற்ற வெற்றி அவ்வாறான பழிதீர்க்கும் படலமாகவே பார்க்கப்பட்டது. காரணம் பாகிஸ்தானுடன் நேரடி இரு தரப்புத் தொடரை இந்தியா தவிர்த்து வருகின்றது. அதுபோன்று நியூஸிலாந்து பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்வதை மறுத்து வருகின்றது. உலகக்கிண்ணத் தொடரின் முன்னர் பாகிஸ்தானுக்குச் சென்ற நியூஸிலாந்து இறுதி நேரத்தில் தொடரைக் கைவிட்டது. இதனால் பாகிஸ்தானின் பழிதீர்க்கும் படலமாகவே மேற்படி ஆட்டங்களும் அவற்றில் பாகிஸ்தானுக்குக் கிடைத்த வெற்றிகளும் பார்க்கப்பட்டன.

அதுபோன்று 2019ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரில், இங்கிலாந்திடம் அடைந்த தோல்விக்குப் பதிலடியாகவே ரி-20 உலகக்கிண்ணத்தின் அரையிறுதியில் இங்கிலாந்தை நியூஸிலாந்து வீழ்த்தியமை கொள்ளப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக நியூஸிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் இன்று நடைபெறும் இறுதியாட்டத்தில் மோதவுள்ளன. 2015ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண இறுதியாட்டத்தில் அவுஸ்திரேலியா நியூஸிலாந்தை வீழ்த்திக் கிண்ணம் வென்றது. அந்தத் தோல்விக்கு இந்தத் தொடரில் பதிலடி கொடுக்கப்படுமா? நியூஸிலாந்து பழிதீர்க்குமா? கிண்ணத்தைக் கைப்பற்றுமா? என்பதுதான் தற்போதுள்ள எதிர்பார்ப்பு.

# ஏன் இறந்தார் மோகன் சிங்?





அபுதாபி மைதானத்தில் முதன்மை கியூரேட்டரான (ஆடுகளத்தை தயார்படுத்துபவர்) மோகன் சிங் தூக்கில் தொங்கிய நிலையில் தனது அறையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கிரிக்கெட் ரசிகர்களுக்கு துயரமான - பேரதிர்ச்சியான விடயம் இது. நியூஸிலாந்து - ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான லீக் ஆட்டம் நடைபெற்ற தினத்தன்று அவர் சடலமாக மீட்கப்பட்டமையானது பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

நியூஸிலாந்து - ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் இந்திய அணிக்கும் முக்கியமான ஆட்டமாக அமைந்திருந்தது. அதாவது இந்த ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் வெற்றிபெற்றால் ரன்ரேட் அடிப்படையில் இந்திய அணி அரையிறுதிக்கு முன்னேறுவதற்கு வாய்ப்புக்கள் இருந்தன. ஆனால், பலமான நியூஸிலாந்தை எவ்வாறு ஆப்கானிஸ்தான் வீழ்த்தும். ஆப்கானிஸ்தானில் ரசிட்கான், நபி, முஜிபுர் ரகுமான் என்று ஆகச் சிறந்த சுழற்பந்து வீச்சாளர்கள் உள்ளனர். எனவே ஆடுகளம் சுழலுக்கு சாதகமாக இருந்தால் நியூஸிலாந்தை ஆப்கானிஸ்தான் வீழ்த்துவதற்கு வாய்ப்புக்கள் ஏற்படும். இந்த வெற்றி இந்திய அணி அரையிறுதிக்குச் செல்ல பாதையைக் காட்டும். இதனால், ஆடுகளத்தை சுழலுக்குச் சாதகமாக அமைக்குமாறு மோகன் சிங்குக்கு அழுத்தங்கள் சமூக வலைத்தளங்கள் வாயிலாகவும், தொலைபேசி வாயிலாகவும் வழங்கப்பட்டன என்று சொல்லப்படுகின்றது.

அதேநேரம், மோகன் சிங் மன அழுத்தம் காரணமாகவே உயிரிழந்தார் என்றும் - அவருடைய இறப்பு அறிக்கை கட்டியம் சொல்கின்றது. ஆனால், எந்த விடயத்தால் - என்ன காரணத்தால் இந்த மன அழுத்தம் வந்தது என்பது மோகன் சிங்குக்குத்தான் வெளிச்சம்.


சர்வதேச கிரிக்கெட் சபை மோகன் சிங்கின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்ததுடன் தன் கடமையை நிறுத்திக் கொண்டதா என்ற சந்தேகங்கள் எழுந்துள்ளன. மோகன் சிங் மறைவுக்கு என்ன காரணம்? அவர் என்ன வகையிலான மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்தார்? என்ற கேள்விகளுக்கு விடைதேட ஐ.சி.சி முயல வேண்டும். அதுதான் ஐ.சி.சிக்கும் அழகு.

உண்மை வெளிச்சத்துக்கு வந்தால்தான் பல கேள்விகளுக்கு விடை கிடைக்கும். சிலவேளை, வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். சிலவேளை, வதந்தி உண்மை என உறுதியாகும். உண்மை வெளிவருமா? பொறுமையாகக் காத்திருப்போம்.

**மோகன் சிங்குக்கு இரங்கல்கள்!**

# ஆபாசப் படம்

(00ஆம பக்கத் தொடர்ச்சி)



## கைதானவர்கள் சிக்கியது எப்படி?

கடந்த மாதம் 29ஆம் திகதி, குறித்த நபரின் முறைப்பாடு அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் பதியப்பட்டது. அன்று இரவு 7 மணிக்கு தாங்கள் கேட்ட பணத்தை ஒலுவில் கட்டார் சிற்றியிலுள்ள ஓர் இடத்தில் வைக்குமாறு சந்தேகநபர்கள் ஏற்கனவே சொல்லியிருந்தார்கள்.

அதுபோலவே செய்வதென பொலிஸார் முடிவு செய்தனர். ஆனால், பணத்துக்குப் பதிலாக கடுதாசிப் பொதியொன்றை வைத்தனர். அன்று இரவு 7 மணியளவில் தான் கொண்டு வந்த 'பொட்டலத்தை' குறித்த இடத்தில் பாதிக்கப்பட்ட நபர் வைத்தார். அதற்கு முன்பதாகவே அந்த இடத்துக்கு அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தின் பெருங்குற்றப் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் ஐவர் சிவில் உடையில் வந்து, மறைவில் காத்திருந்தனர்.

பணம் வைக்கச் சொன்ன நபரை பாதிக்கப்பட்ட நபர் தொலைபேசியில் தொடர்புகொண்டார். உரிய இடத்தில் பணத்தை வைத்து விட்டதாகக் கூறினார். உடனே அவரை அந்த இடத்திலிருந்து கிளம்புமாறும், 10 கிலோமீற்றர் தூரத்திலுள்ள நிந்தவூர் பிரதேசத்துக்குச் சென்று, அங்கு நிற்பதை உறுதிப்படுத்தும் வகையில் கைபேசி மூலம் 'லொகேசன் ஷேர்' செய்யும்படியும் பாதிக்கப்பட்ட நபரிடம் பணம் பறிக்கும் கும்பல் கூறியுள்ளது. அவரும் அவ்வாறே செய்துள்ளார்.

'நாம் இருளில் மறைந்திருந்தோம். இரவு 7.30 மணியிருக்கும். பணம் வைக்கப்பட்டிருந்த இடத்தைக் கடந்து, முன்னாலுள்ள வீதியில் மோட்டார் பைக் ஒன்று சென்றது. சற்று தூரம் சென்ற அந்த பைக் திரும்பி, பணம் வைக்கப்பட்ட வளவுக்கு முன்னால் வந்து நின்றது. அந்த பைக்கின் பின் இருக்கையில் அமர்ந்து வந்த நபர் இறங்கிச் சென்று, 'போலிப் பணப் பொதி'யை எடுத்தார். நாங்கள் உடனடியாக அவரைச் சுற்றி வளைத்துப் பிடித்தோம். அவர் ஒரு பெண். பைக் ஓட்டி வந்தவர் ஆண். அவரையும் கைது செய்தோம்' என்று சந்தேகநபர்களைப் பிடித்த விதத்தை விவரித்தனர் பொலிஸார். கைது செய்யப்பட்டவர் தன்னுடன் இரண்டாவதாகப் பேசிய பெண் குரலுக்குரியவரே என, பாதிக்கப்பட்ட நபர் தெரிவித்தார்.

## வலையில் சிக்கிய பெரும் புள்ளிகள்

கைது செய்யப்பட்ட பெண்ணிடமிருந்து பொலிஸார் கைப்பற்றிய கைபேசியில் பல ஆண்களின் நிர்வாணப் படங்கள் இருந்துள்ளன. அவற்றில் மிக உயர்ந்த அரச பதவிகளை வகிக்கும் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சில நபர்களின் படங்களும், அரசியல்வாதி மற்றும் சமயத் தலைவர் உள்ளிட்டவர்களின் படங்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களும் மேற்படி சந்தேகநபர்களிடம் பணத்தை இழந்துள்ளனரா என்கிற கேள்விகளும் எழுந்துள்ளன. இந்த நிலையில் இந்தக் கும்பலிடம் பணத்தை வேறு யாராவது இழந்திருந்தால், அவர்களும் முறையிடலாம் எனவும் பொலிஸ் தரப்பு அறிவித்துள்ளது.

இந்தப் பின்னணியில், நவம்பர் முதலாம் திகதி இரவு, அக்கரைப்பற்று பிரதேசத்தைச் சேர்ந்த ஆண் ஒருவர், சுமார் 20 லட்சம் ரூபா பணத்தையும் ஆறு பவுண் நகையையும் மேற்படி பெண்ணிடம் இழந்ததாக முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார் என்று அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேற்படி கும்பல் சுமார் எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக ஆண்களை ஆபாச வலையில் சிக்க வைத்து, பணம் பறிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் பொலிஸார் கூறுகின்றனர்.

**பணம் கொடுக்காமல்விட்டால் எனது படத்தை சமூக வலைத்தளங்களில் வெளியிடப்போவதாக இரண்டாவதாகப் பேசிய பெண் என்னை மிரட்டினார். அப்படி படம் வெளியானால் மானம் போய்விடும் என்று பயந்தேன். அதனால் மிகவும் கஷ்டப்பட்டு பணத்தைத் திரட்டினேன்.**



நன்றி: பி.பி.சி தமிழ்